# ராமத்து ம[illegible]ள்
# வகின்ற[illegible].

90

Acc No: 90
CL No: 15

## சித்ரா நாகநாதன்




— தாகம் வெளியீடு —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்து மண்கள் சிவக்கின்றன....

சித்ரா நாகநாதன்

சுவ No: 90
Cl No: 8
794.8113

தாகம் வெளியீட்டகம்
சினேக்லேன்
திருகோணமலை
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்து மண்கள் சிவக்கின்றன
( சிறுகதைகள் )

சித்ரா நாகநாதன்

பதிப்புரிமை : தாகம்.

முதற்பதிப்பு : ஏப்பிரல் 1990

அட்டை : ஓவியர். ஸ்ரீதர் பிச்சையப்பா

அட்டை எழுத்து : டி. எச். வை. ரட்ண

வெளியீடு : தாகம் வெளியீட்டகம்,
சினேக்லேன்,
திருகோணமலை.

கிளை : 156/30, ஜிந்துப்பிட்டி றோட்,
கொழும்பு - 13.

அச்சுப்பதிப்பு : செரான் பிரிண்டர்ஸ்,
கொழும்பு-10.

பக்கம் : (xvi 128) 144.

பிரதிகள் : 1000

விலை

இலங்கை : 30.00

இந்தியா : 15.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையல்

நாளைய-
யுகவிடியலுக்காய்
நேற்றைய பொழுதுகளிலும்
இன்றைய பொழுதுகளிலும்
தேசத் தெருக்களில்
சுவடுகள் பதித்த
எம்
மண்ணின் மைந்தர்களுக்கு
இன்நூல்.....

# தாகம்

— ஒரு தரமான நூல் வெளியீட்டு நிறுவனம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

நாம் மதிக்கத்தக்க பல இளைய படைப்பாளி களுக்கு களம் இல்லை. சீர் கெட்டுப்போன ரசனை யின் புறக்கணிப்பினாலும் எமது நாட்டின் படு மோசமான அரசியல் நிகழ்வுகளினாலும் அவர் கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக தம் முகங் களைக் காட்டிக்கொண்டு வருகிறார்கள். இவர் கள் எழுத்தில் எப்பொழுதும் எம்மைக் கவனப் படுத்தி வந்தவர் சித்ரா நாகநாதன்

ஈழத்தின் பிரச்சனைக்குரிய காலகட்டங்களில் அடைப்புக் குறிகளுக்குள் 'யாவும் கற்பனை' என்ற நிலையில் இலக்கியம் படைக்காமல் மக்கள் சார்ந்த தனது படைப்புக்களின் மூலம் அதிரடித் தாக்கு தலை மேற்கொண்டு வந்த இவரின் சிறுகதைத் தொகுதியை எமது 'தாகம்' வெளியீட்டகத்தின் முதலாவது வெளியீடாக வெளியிடுவதில் பெரு மைப் படுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவங்கள் நிலைப்பதற்காக மனித சுகங்களைத் திருடுவதற்கு நாம் எப்படி தயாரில்லையோ அதுபோல் போலித்தனமான கற்பனை ரீதியான ( Romantic ) இலக்கியம் படைக்கவும் வெளியிடவும் நாம் ஆயத்தமாயில்லை. உங்கள் படைப்புக்கள் - எமது மண்ணின்-எமது மக்களின்-சோகங்களை வெளிக்காட்டும் யதார்த்தபூர்வமான படைப்பாக இருப்பின் அது எந்த முகாம்களில் - எந்தத் தளத்தில் இருந்து வெளிவந்தாலும் நாம் வரவேற்கவும் ஆதரிக்கவும் தயாராகவுள்ளோம், என்பதை படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் கூறிக்கொண்டு எமது முதல் வெளியீட்டினை உங்கள் கரங்களில் தருகின்றோம்.

□ □ □

( தொடரும் )

வெளியீட்டாளர்கள்

( தாகம் கலை இலக்கியக்குழு )

...பதிப்புரை. . . பதிப்புரை. . . .பதிப்புரை. . . பதிப்புரை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்து

## மண்களின் மேலே....

**'தாகம்'** கலை இலக்கிய புரட்சிகர முற்போக்கு இதழுக்கு எழுதத் தொடங்கிய காலத்தில் இருந்து இன்று வரை ஒரே இலட்சியத்திற்காய் எழுதிவரும் சித்ரா தற்போது திருகோணமலை தளவைத்தியசாலையில் தாதியாக தொழில் புரிந்து வருகின்றார். மண்வாசனையுடன் எழுதும் ஒருசில படைப்பாளிகளுக்குள் இவர் குறிப்பிடத்தக்கவர். தனிமனித சோகங்களை அலைபாய விடாமல் சமுதாய அவலங்களைக் கோடிட்டு காட்டுவதில் இவர் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளார்.

சித்ராநாகநாதன் அவர்கள் ஒரு பெண் எழுத்தாளர் என்பதை மறந்து அவர் ஒரு இலக்கியவாதி, சிருஷ்டிகர்த்தா என்ற நினைப்புடனேயே இவரது கதைகளை நான் படிப்பது வழக்கம். 'பெண்களுக்கு உரிமை வேண்டும் விடுதலை வேண்டும்' என்று பேசிக்கொண்டு இனத்தின் பிரச்சினைகளை, நாட்டின் பிரச்சனைகளை ஆய்வு செய்கின்ற உன்னதமான உயிரோட்டமுள்ள தேச விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருப்பது பயனுள்ள பெண்கள் சக்தியை வீனடிக்கின்ற போலித்தனமான செயற்பாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும். தாயக விடுதலையோடு இணைந்தே பெண்களின் விடுதலையை வென்றெடுக்க முடியும், என்பதை மறந்து வெற்று முழக்கங்களையே கோஷங்களாக முன் வைத்து பெண்விடுதலையைக் கொச்சைப்படுத்தும் திரிபுவாதிகளுக்கு மத்தியில் சித்ராவின் சமூகப் பார்வைக்கு வீச்சு அதிகம். இத்தொகுப்பில் உள்ள பல கதைகள் ஆழ்ந்த விவாத அடிப்படையில் அனுபவிக்கத் தகுந்தவை.

இத்தொகுதியிலுள்ள கதைகளை முதன் முறையாக படிப்பவர்கள் ஒரு விஷயத்தைப் பார்க்க தவறமாட்டார்கள். இக்கதைகள் எல்லாவற்றிலுமே ஏதோ ஒரு வகையான பிரச்சனை கோடிட்டு காட்டப்பட்டிருக்கிறது. சிலதோ, பலதோ, இந்த பிரச்சனைகளுடன் நாமும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதினால் இந்தக் கதைகள் எமது வாழ்க்கையை படம்பிடித்து காட்டுவது தவிர்க்க முடியாததாகின்றது. ஆனால் இந்த பிரச்சனைகளுக்கான தீர்வுகளை வாசகர்கள் எதிர்பார்த்திருப்பார்களாயின் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும்.

சித்ரா பாத்திரங்களின் குணநலன்களை (Characters) வர்ணிப்பதில்லை, சம்பவங்களை (Incidents) நீட்டி முழக்குவதுமில்லை. இவரது கதாபாத்திரங்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்கள் நுட்பமானவை. அவை வந்தே தீரும் என்பதிலும் அவற்றை தடுக்க முடியாது என்பதிலும் அவற்றின் மோசத் தன்மை கூடுதலாகிறது. இந்தப்பாத்திரங்கள் தங்கள் இருப்புக்குத் தங்கள் சொந்தமான வாழ்க்கையையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. இந்தக்கதைகள் பிரச்சனைகளையும், பிரச்சனைக்கான தீர்வுகளையும் நேரடியாகமுன்வைத்து வாசகர்களின் சிந்தனையை மழுங்கடித்து அவர்களுக்கு போதனை செய்யவில்லை. ஆனால் ஒவ்வொரு கதையின் பின்புலங்களும் (Backgrounds) உண்மையான இயல்பான (Natural) தன்மைகளைக் கொண்டிருப்பது உண்மை. □□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே ஒரு கேள்வி எழுகிறது. இங்கே இந்தக் கதைகள் சொல்லப்பட்ட அளவிலேயே இந்தக் கதைகளும் இந்தக் கதாபாத்திரங்களும் முற்றுப்பெற்று விடுகின்றனவா? இல்லை காலா காலத்திற்கும் இவை தொடரப்போகின்றனவா? என்ன காரணத்திற்காக எந்த நோக்கத்திற்காக இவைகள் எழுதப்பட்டன? சர்வதேசியங்களைத் தலைப்புச் சூடிக்கொண்டு இவர் சர்வதேசியம் பற்றி எழுத வரவில்லை. ஆனால் இந்தக் கதைகள் சொல்லும் பிரச்சனைகள் இந்த கதைகளுக்கான நிகழ்வுகள் உலகத்தின் எந்தெந்த மூலைகளில் ஒரு இனம் தனது உண்மையான விடுதலைக்கான போராட்டத்தை மேற்கொண்டு நடத்தி வருகின்றதோ அங்கெல்லாம் இந்த பிரச்சனைகள், இந்த நிகழ்வுகள், அரங்கேறிக்கொண்டுதான் இருக்கின்றன. அந்தவகையில் எமது ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலத்தில் இந்தத்தொகுதி வெளிவருவது வரவேற்கப்படக்கூடியதாகிறது.

இத்தொகுதியில் உள்ள பதினைந்து சிறுகதைகளும் சிறுமையை, வறுமையை, வெளிப்படுத்தும் கருவியாக மட்டுமல்ல சமூகத்தின் ஊழல்களை, அந்நியர்களின் சுரண்டலை, நாட்டின் பொருளாதார சீரழிவை கலப்பு மணத்தின் முக்கியத்துவத்தை, மத சுதந்திரத்தின் அவசியத்தை, தமிழீழ போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பை, அரசின் மனித உரிமை மீறல்களை, இயக்க மோதல்களின் அழிவினை, ஒற்றுமையின் அவசியத்தை அலசி ஆராய்கின்றன.

இக்கதைகள் ஒவ்வொன்றும் பிறப்பதற்கு முன்னாலும் பிறந்த காலங்களிலும் அவர் மேற்கொண்டிருக்க வேண்டிய தவத்தையும், ஏக்கத்தினையும், கட்டுப்பாட்டையும், உந்துதலையும்' ஆவேசத்தினையும், மனிதாபிமானத்தையும் நமக்கு காட்டுகின்றன. கலையின் நியதியை மதிக்கத் தெரிந்த எந்த ஆத்மாவும் இதை உரை முடியாமல் போகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியாக ——

எமது தமிழ் தேசிய இனத்திற்கான விடுதலைப் போராட்டம் ஆரம்பமாகிய நாளில் இருந்து வடக்கு - கிழக்கின் ஒவ்வொரு மண்ணும் சிவந்து கொண்டுதான் இருக்கிறது.

அன்றைய ——

இலங்கை இனவெறிப்படைகளின் மனித வதைகளும்
துணைக்கு வந்த இஸ்ரேலிய - பிரித்தானி - பாக்கிஸ்தானிய கூலிப்படைகளின் கிராம எரிப்புக்களும்

இன்றைய ——

இந்தியவல்லாதிக்க ஆக்கிரமிப்பு இராணுவத்தின் மனித வேட்டைகளும், ஒவ்வொரு கிராமத்து மண்ணும்; எமது வீரப் போராளிகளின் குருதியினாலும், எமது அன்னையரின் கண்ணீராலும், இன்றும் சிவந்து கொண்டுதான் இருக்கின்றத.

அந்தவகையில் இந்தத் தொகுதியும் - இந்த படைப்பாளியும் ஈழத்து இலக்கியப் பரப்பில் மட்டுமல்ல, எமது இனத்தின் வரலாற்று நகர்விலும் சுவடுகள் பதித்துள்ளது மறுக்க முடியாத உண்மை.

வாழ்க மானுடம் !

□ □ □

தோழமைகளுடன்
உங்கள்

வி. மைக்கல் கொலின்
(தமிழ்ப் புதல்வன்)
(ஆசிரியர் - தாகம்)

05-04-1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நிமிடங்கள் ...............

தமிழ் இலக்கிய வரலாறு எவ்வாறு நீண்ட பரிணாமத்தையும், பரிமாணத்தையும் கொண்டதோ, அதுபோல் தமிழ் தேசிய இனத்தின் வரலாறும் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது.

சத்தியாக் கிரகத்தால் சாகடிக்கப்பட்டும், அஹிம்சையின் பேரால் அழிக்கப்பட்டும், கொண்டிருந்த நிலையிலிருந்த எங்கள் சுயநிர்ணய உரிமைக்கான ஈழவிடுதலைப் போராட்டம் ஆயுதவடிவில் முன் மொழியப்பட்ட காலத்தில் இருந்து இன்று வரை தமிழ்பேசும் மக்களின் வாழ்வின் அவலங்கள் என்னைப் பாதித்த நிகழ்வுகள், இங்கே சிறுகதைகள் வடிவில் உங்களுடன் பேசவருகின்றன.

நான் அரசியலை என் கதைகளுக்குள் புகுத்த விரும்பாவிட்டாலும், சில அரசியல் சூழ்நிலைகளால் என் கதாபாத்திரங்கள் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையே. 'கிராமத்து மண்கள் சிவக்கின்றன' சத்யன் - விசாலி, 'விடியாத இரவுகள்'-அபிநயா, ,பெற்றமனம்' - சங்கரி, 'மனிதம் இன்னும் மரணிக்கவில்லை' - சில்வா தம்பதியினர் இவர்களை குக்றிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் மண்ணுக்கு விடுதலை வந்தாலும், நம் இனத்து பெண்களுக்கு விலைபேசும் நிலை என்று ஒழியுமோ? என்ற ஆதங்கத்தில் எழுந்ததே 'அலைக்கு எட்டிய கரைக்கோலம்'. வறுமையின் காரணமாக உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்ட ஒரு இளைஞனின் கதையே 'எப்பொழுதுங் கவலையிலே'.

இன்றும் இந்த சமுதாயத்தில் இந்துவைப்போல் பலர் 'கூண்டுக் கிளிகளாய்' வாழ்வதை யாரும் மறுக்க முடியாது, மறக்க முடியாது.

எனது தொழில் சார்ந்த பிரச்சனைகளுக்கு மத்தியில் எழுத்துலகை நான் விட்டுவிட நினைத்தாலும் விடாது ஊக்கமளித்து வரும் திருகோணமலை எழுத்தாளர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றிகளைக்கூற கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக திருமலையின் மூத்த எழுத்தாளர்கள் இளையவர்களை வளர்த்துவிடும் ஆரோக்கியமான நிலை காணப்பட்டாலும் எமது மண்ணின் அரசியல் நிகழ்வுகள் இலக்கிய முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்ட வண்ணமே இருந்து வருகின்றது.

இப்படியான ஒரு சூழ்நிலையில் கூட 'தாகம் வெளியீட்டகம்' சார்பில் எனது சிறு கதைகளைத் தொகுதியாக வெளியிடவேண்டுமென்று முழுமூச்சாய் உழைத்தவர்கள் இருவர். ஒருவர் இலட்சியத்துடன் திருமலை மண்ணின் இலக்கியம் வளர்க்கும் 'தாகம்' பத்திரிகை ஆசிரியர் வி. மைக்கல் கொலின். மற்றவர் திருமலையுடன் அதிகமான தொடர்புகளை விரும்பும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரர் ராஜன். இந்த இருவரின் ஒருமித்த முயற்சியே இத் தொகுதி வெளிவர முக்கிய காரணமாகும். இவர்களுடன் சேர்ந்து இத்தொகுதிக்கான ஆக்கத்திற்கு உழைத்த அனைத்து சகோதரர்களுக்கும் சகோதரி டாக்டர். ம. வசந்தமாலா அவர்களுக்கும் எனது நன்றிப் பூக்களைத் தூவிக்கொண்டு

எனது வளர்ச்சிக்கான
உங்கள் ஆக்கபூர்வமான
விமர்சனங்களை
அன்புடன் எதிர்பார்க்கும்

இவள்

சித்ரா நாகநாதன்
10-04-1990

தளவைத்திய சாலை
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமத்து தெருக்களின் வழியே....


- பதிப்புரை.....
- அணிந்துரை.....
- முன்னுரை.....
- ஒரு போராளியின் காதலி காத்திருக்கிறாள் 01
- அலைக்கு எட்டிய கரைக்கோலம் 10
- பெற்றமனம் 18
- கூண்டுக் கிளியினைப் போல் 25
- அடம்பன் கொடியும் புத்தாண்டுவெடியும் 33
- மனிதம் இன்னும் மரணிக்கவில்லை 39
- வேதனையின் சுவடுகள் 46
- பலவீனங்கள் 54
- முகம் இழந்த மனிதர்கள் 65
- கிராமத்து மண்கள் சிவக்கின்றன 74
- தலைமுறைகள் 88
- தலைவிதி 96
- எப்பொழுதுங் கவலையிலே 104
- சங்கமம் 113
- விடியாத இரவுகள் 121




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள்--
இன்று மரணிக்கின்றார்கள்
நாளை உயிர் வாழ்வதற்காய்
பைபிளும் கீதையும் குர்ஆனும்
ஒன்றாகட்டும்
நாளைய விடியல்
நமது கரங்களில்:

- தமிழ்ப் புதல்வன் -

# ஒரு போராளியின் காதலி காத்திருக்கிறாள்....

1

வானம் கருமேகங்களைச் சுமந்துகொண்டு மெல்ல மெல்ல நகர்ந்துகொண்டு இருந்தது. அகன்று பரந்திருந்த காட்டுப் பகுதியைப் பார்க்க மங்காவுக்கு நெஞ்சை அடைத்தது துக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டின் ஒரு மூலையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல்லு மூட்டைகளைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள். குசினி வாசலில் அவள் நின்றிருந்தாலும், அடர்ந்த கானகத்தே அவள் நினைவலைகள் பாய, துக்கமும் சந்தோஷமும் கலந்த நிலையிலிருந்தாள் மங்கா. அன்று ஒரு சனிக்கிழமை.

இலங்கை இராணுவம் 'புலிகளைத்' தேடி நிலாவெளிக் கிராமத்தைச் சுற்றி வளைப்பு செய்துகொண்டிருந்தது. அன்று அவளது படபடப்பை, உணர்வுகளைச் சொல்ல வார்த்தைகளே இல்லை. இத்தனைக்கும் அந்த வீட்டில் அவளும் அவளது அம்மா, அப்பாவும்தான். ஆனாலும், ஏன் இப்படி மனசு அங்கலாய்க்கிறது என்று அவளுக்குப் புரியவில்லை. ,ஆம்பிளையள் எத்தனை பேர்? (பிரிமி கீதெனக்?)' அப்பா, ''நரை திரை மூப்புடன்' உள்ள ஒரேயொரு ஆண்மகன் வெளியே வருகிறார். 'பெரிய புலி' (லொக்கு கொட்டியா) அடுத்து அவள், அதற்கடுத்து அவள் அம்மா. வீட்டின் மூலை முடுககெல்லாம்-உப்புச் சட்டிவரை ஆராய்ந்து காணாததால், 'அரிசி புலிகளுக்கு 'சாப்பாட்டிற்கா?' அவன் கேட்கவும், அம்மா மௌனமாகத் தலைகுனிகிறாள். ஒரு சாதாரண வீட்டிற்குள் மதயானை புகுந்து அட்டகாசம் பண்ணியதுபோல் வீடு தோற்றமளித்தது. ஒரு மாதிரி போய்ச் சேர்ந்துவிட்டார்கள். ஆனுல்...மங்காவின் படபடப்பு இன்னும் தணியவில்லே. எல்லாம் எதற்காக? எல்லாமே காட்டில் போராடும் 'ஜீவன்களுக்காகத்' தான். அத்தோடு அவள் மனசில் நிரந்தரமாய் குடியிருக்கும் அபிஷேகிற்காகவும்தான்.

''மங்கா! டியேய் மங்கா!! அம்மா சத்தம் வைக்கிறாள்''

''என்னம்மா''?

''என்ன செய்கிறாய்? ஆமிக்காரன் போய் முடிஞ்சுது. மழை வரப்போகுது. இந்தக் கொள்ளிகளை எடுத்து உள்ளே போடு. கொடியில் காயிற துணிகளை எடு.''

ஆமிக்காரன் எங்கள் வீட்டிற்கு வந்து போனதோடு சரி, அடுத்தவன் வீட்டில் என்ன கஷ்டம் என்றெல்லாம் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவிற்கு சிந்திக்கத் தெரியாது. இந்தக் கொள்ளியும் துணிமணியும்தான் அம்மாவின் உலகம்...

எனக்கு...

இந்த மழைக்காலத்தில் காடு எப்படி இருக்கும்? பாம்பும், பூச்சிகளும், நிலத்தில் ஊர்ந்து திரியும். உடலை குளிர் வாட்டும். இத்தனைக்கும் மத்தியில் எதிரிகளுடன் போராட வேண்டும். எங்கள் உடன்பிறப்புக்களும், என் உயிர்க்குயிரான அபிஷேக்கும் பசி பட்டினியோடு நாட்டிற்காக-நாட்டு விடுதலைக்காக...சிங்கள இராணுவம் 'கொட்டி' என்று ஒருமைப்படுத்தி தமிழனைப் பிடித்த காலம்! அதில்மட்டும்தான் அன்று...

முதல் தடவையாக அபிஷேக்கும், நண்பர்களும் நிலாவெளிக் கிராமத்திற்கு வந்திருந்தார்கள். எதிர்பாராதவிதமாக மங்கா வீட்டிற்கு வந்தார்கள். கலைந்துபோன கேசமும், உரம் பாய்ந்த உடலும், சாரன்-சேட்டும், கரங்களில் ஏ. கே.யுமாக அவன் நின்ற கோலம்......! சரித்திர காலத்து சேனாதிபதிகளை ஞாபகப்படுத்தியது. மனசிலே ஏன் இந்த மின்சார அதிர்ச்சி! இது அவளுக்கு மட்டும்தானா? அவனும் தன்னை மறந்து நின்றான். அவள் இமைகள் மூட மறுத்தன. இந்த மாவீரனை வீரத் தமிழனைத் தன் இதயச் சிறையில் அடைத்துக்கொண்டிருந்தாள். விடுதலைப் போராட்டங்களில்மனித உணர்வுகளை அடகுவைக்க எவருமே சொல்லவில்லைதான். ஆனால், அவன் எல்லாமே ஒரு சட்டுக்கோப்புக்குள்இருக்கவேண்டும் என விரும்பினான். ஆனாலும் அந்த வீரனின் மனசு என்றுமில்லாதவாறு அசைந்து கொடுத்தது.

''தண்ணி கொஞ்சம்......'' அவன்தான் கேட்டான்.

'இல்லை, இல்லை, அம்மா சமைத்துவிட்டா. அம்மா சாப்பாடு கட்டுங்கோ.' குரல்கொடுத்தாள் மங்கா. எந்தபெடியளைக் கண்டாலும் அந்தத் தாய்மனசு செய்யும் வழமையான கைங்கரியம் இதுதான். ''விசரி! கெதியா வாழையிலையைக் கொண்டா உனக்குப் பொடியளைக் கண்டால் தமிழ் ஈழம் கண்ட மாதிரித்தான். இக்கணம் ஆமி வந்தா ஆக்கினைதான்'' உண்மை விளங்க, துள்ளி ஓடிப்போய் உதவினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொடியன்கள்' சிரித்துக்கொண்டார்கள்.

'தாய்மனம்! அந்தப் பாசம், அரவணைப்பு, அன்பு இவற்றுக்கு உலகில் ஈடு இணை இல்லைதான். வீட்டுப்பிள்ளைகளுக்கு ஒரு அம்மாதான். பொடியளுக்கு ஊரெல்லாம் அம்மாக்கள். அபிஷேக், சிரித்தான். தேநீரை அவசரமாகக் கொண்டுவந்தவள், முதலில் அவனுக்குக் கொடுத்தாள். அந்த விரல்களின் சந்திப்பு...! நெகிழ்ந்துபோனாள் மங்கா இல்லை, சிலிர்த்தாள். தற்செயல் நிகழ்வாயிருந்தாலும் இனிக் காலமெல்லாம் இந்த விரல்களைத் தீண்ட வேண்டும் இந்தப் பாதங்களைத் தரிசிக்கவேண்டும் என்ற தவிப்பு ஏற்பட்டது. மனசிலே ஒரு புது வேகம். வீரம் செறிந்த கரங்கள் இரண்டும் இந்தக் கழுத்தில் 'மஞ்சள் நாண்' பூட்டவேண்டும். அவள் மனம் எங்கோ போக...... 'அவர்களுக்கும் கொடுங்கோ......' அவன் குரல் அவளை இழுத்து வந்தது. அந்த நேரம், அவள் தன்னிலையடைந்த நேரம். முகத்தில் நாணம் கோலமிட...அவசரமாகக் கொடுத்தாள். 'தம்பிமாரே! இந்தாங்கோ சாப்பாடு கட்டிவைச்சிருக்கு, கொண்டு போய்ச் சாப்பிடுங்கோ' இறுகிப்போன இதயங்களை அந்த 'அம்மா' இளக வைத்து அனுப்பினாள்.

''அடிக்கடி வாங்கோ!'' அவள் மெல்லச் சொன்னாள்.

''முதலில் கடமை, பிறகு காதல்...இதுதான் தமிழனின் வீரக் காவியங்கள் சொல்லும் வரலாறு. மங்கா நான் உன்னை விரும்புகிறேன். சில நிமிடத்திலேயே எனக்கும், உனக்கும் பூர்வ ஜென்மத் தொடர்பிருக்கோ என்றநினைப்பு, ஆனால், எப்போ என்பதைக் காலம்தான் நிர்ணயிக்கும்''! நான்கு விழிகளும் கலங்கின.

''அபிசேக்! கெதியா, என்ன இப்படி...கனநேரக் கதையோ?'' தோழர்களின் பகிடிக்கு ''சும்மாத்தான்'' என்றான்.

''ஈழத்தில் முதல் கல்யாணத்திற்கு நிச்சயதார்த்தம் வச்சாச்சு போ...'' பகிடிகள் காதில் விழக் கலங்கிய விழிகளைத் துடைத்தபடி உள்ளே சென்றாள் மங்கா. அவள் நினைத்ததுபோல அபிஷேக் அடிக்கடி அங்குவர வாய்ப்பிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. அடிக்கடி நிகழும் கண்ணி வெடிகள், அதைத் தொடர்ந்து இராணுவத்தாரின் கிராம 'எரிப்புகள்', 'மலித வதைகள்' எல்லாம் தொடர்ந்தன.

இப்போதெல்லாம் கூட்டமாகப் பறந்துவரும் கிளிக் கூட்டத்தின் அழகையோ அன்றி, தென்னை மரத்தில் ஒயிலாக அமர்ந்திருந்து கூவும் குயிலையோ ரசிக்கும் மங்கா இல்லை. நேரம் முழுதும் அப் - பாவி தன்னையே நினைத்து மறுகும் மங்காவாக மாறிவிட்டிருந்தாள். 'இந்த ஆம்பிளையளே இப்படித்தான்' என்று சில நிமிடம் நினைத்தாலும் 'அபிஷேக் என்ன சாதாரண மனிதனா? விடுதலைப் போராட்ட வீரனல்லவா. எவ்வளவு வேலை இருக்கும்? பெண் என்பவள் தன் மனசைக் கொடுத்தவனின் நினைவுகளோடல்லவா வாழ்கிறாள். ஒரு போராட்ட வீரனின் காதலி, தன் காதலனை சந்திக்கும் அவசரத்தைவிட, அவனது வெற்றி தோல்விகள் அவனது பாதுகாப்பு இவைபற்றிச் சிந்திக்கத் தெரிந்தவளாய் இருக்கவேண்டும். அப்படியெல்லாம் மனசைக் கட்டிப்போட்டாலும், தன் மனதில் வரித்தவனை சதாகாலமும் நினைக்காமலும் இருக்க முடியவில்லை.

அமாவாசைக் கும்மிருட்டு. நேரத்தோடு படுத்தாலும் நித்திரை வரவில்லை மங்காவுக்கு. எங்கோ நாய்கள் குரைக்கும் சத்தம். பெடியள் வந்தாலும் அதே குரைப்புத்தான். சற்று வித்தியாசமாகக் குரைக்கப்படாதோ? நாய்கள்மேல் எரிச்சல் வந்தது. சரசரக்கும் சத்தம். இது தென்னோலைகளின் சலசலப்புத்தான். தொடர்ந்து மெல்லிய பேச்சுக் குரல்.

'மங்...கா! மங்...கா!!' மெல்லியதாக, ஆனால் துல்லியமாகக் கேட்டது. துள்ளியெழுந்தாள் மங்கா.

இரவு ராணிப் பூக்களின் சுகந்தம் தென்றலில் கலந்து வந்தது.

வாதராணீ மரங்களின் கிளைகள் காற்றுக்கு அசைந்து கொடுத்தன.

செவ்வரத்தைச் செடிகளிடையே யாரோ அசைவது தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அபிஷேக்!' அவள் இதழ்கள் ரகசியம் பேசின.

' மங்கா !' அந்தக் குரலுக்குரியவன் கறுப்புக் காற் சட்டையும், அதே நிற டீசேட்டுமாக அவள் அருகில் வரு கின்றான்.

அந்த நான்கு கரங்களும் ஒன்றிற்குள் ஒன்று அடைக் கலம் தேடின.

''இதென்னப்பா வேர்க்குது...இந்தக் குளிருக்கை''

''அதை விடும் மங்கா! நான் கொஞ்ச நாளைக்கு வேற இடம் போகப் போறன். போக முன்னர் உம்மை ஒருக்கா சந்திச்சுப்போட்டுப் போகத்தான் வந்தனான்...''

சூடாக அவன் கரங்களில் வந்து விழுந்த நீர்த் துளி களைக் கண்டு கலங்கினான் அபிஷேக். 'மங்கா! நீர் உன் பெற் றோருக்கு ஒரே பிள்ளை. இருந்தும் காடுமேடு என்று சுத்துற என்னை நீர் விரும்பினது உம் துரதிஷ்டமே...இங்கே பந்த பாசத்தை ஒருபுறம் வைத்துவிட்டு இந்த மண்ணின் விடு தலையே முதற் குறிக்கோளாய்ப் போராடவேண்டியது என் பொறுப்பு. இந்த மண் விடுதலையடையிற நேரம் நான் உயிருடன் இருந்தால்...என் மங்கா அதிர்ஷ்டசாலியே...'

''அபிஷேக்! எனக்கு நீங்களும் வேண்டும். நீங்கள் நேசிக் கிற இந்த மண்ணும் விடுதலை பெறவேண்டும்.''

''அதுக்கு அசாத்தியப் பொறுமை வேண்டும் மங்கா!' ஆதங்கத்துடன் வெளிப்பட்டது அவன் வார்த்தைகள்.

''அந்தப் பொறுமை என்னிடம் நிறைய இருக்கு. எனக் கொரு சந்தேகம்?''

''சொல்லும் மங்கா!''

''எங்களுக்குள் இத்தினை இயக்கம் எதற்காக? ஒரே நோக்கத்தோடு போராடுவர்களுக்குப் பல இயக்கம் எதற்கு? பிற்காலத்தில் இவர்கள் ஆளை, ஆள் அடித்துக் கொள்ள மாட்டார்களென்று என்ன நிச்சயம்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது யதார்த்தமான கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினான் அபிஷேக்.

''அது...உமக்கு... இதைப்பற்றியெல்லாம் ஆறுதலாய்ச் சொல்லுகிறேன். இப்போ நேரம் போயிட்டு.'' அவளது தலையை வருடினான்.

''போய் வருகிறேன் மங்கா. எந்தக் களத்தில் போராடிக்கொண்டிருந்தாலும், உன் நினைவுகளை என் நெஞ்சில் சுமந்துகொண்டுதான் இருப்பேன்.''

இரு சொட்டு உஷ்ணக் கண்ணீருடன், வாய் வார்த்தைகள் தொண்டைக்குள் அமுங்கிப்போக இருவரும் விடை பெற்றனர்.

★ ★ ★

அதன்பின்......

காலங்கள்தான் எப்படி உருண்டோடிவிட்டன? பாரதம் வானத்திலிருந்து உணவுப் பொட்டலங்கள் சொரிந்ததும், ஒப்பந்தங்கள் ஏற்பட்டதும், பின்னர் ஈழ மண்ணில் புதுமனை புகுவிழா வைத்ததும், எல்லாம் பழைய கதையாகிப் போயின. ஈழத் தாயின் புதல்வர்களைக் கூறுபோட்டு, காட்டில் பாதியும், நாட்டில் பாதியும் போரிடவைத்து, பாரதம் ரசித்து மகிழ்ந்தது. இந்த ஒரு வீட்டுச் சண்டையில் அபிஷேக் காட்டில்...

''எதிரிக்குப் பாடம்புகட்ட, களம் புகுந்த நீங்கள்...கடவுளே! ஏன் எங்கட பெடியளை இப்படியெல்லாம் திசை திருப்புறாய்?'' மங்கா ஊமையாய் அழுதாள். அவள்தான் அபிஷேக்கைச் சந்தித்து எத்தனை வருடமாயிற்று?

பொது எதிரியைத் தூக்கி எறிந்துவிட்டு நிமிர்ந்தால், புதுப்புது எதிரிகள், காட்டிக்கொடுப்பது, கடத்துவது, யார் யாரைக் கடத்துவது என்ற விவஸ்தை இல்லாத இயக்கங்கள், தமிழனுக்குத் தமிழன் எதிரி, ஒரு இயக்கம் இன்னொரு இயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தை ஜென்ம எதிரியை நோக்குமாப்போல் நடந்துகொண்டது. பத்திரிகைகள் புதிது புதிதாய்ப் புறப்பட்டது. அவை ஒற்றுமை விதை தூவ வல்ல தங்கள் சாதனைகளைப் பறைசாற்ற, புனிதமான நோக்கங்களுக்காகப் புறப்பட்ட இயக்கங்கள் இப்போ...நோக்கமும், காரணமும் தெரியாத அளவுக்கு சுயநலம் ஆட்டி வைக்கிறது. பொது எதிரி மௌனமாய் ரசிக்கிறுன். ஏனெனில், அவனுக்குத் தெரியும் தமிழனின் சரித்திரம். மங்காவுக்கு என்ருே ஒருநாள் அவனிடம் கேட்ட கேள்வி ஞாபகத்திற்கு வந்தது.

''இத்தனை இயக்கம் எதற்காக அபிஷேக்?''

இந்தக் கூறுபோட்ட இயக்கங்களை ஒற்றுமைப்படுத்த வேண்டிய வல்லரசு விளையாட்டுப் பார்க்கிறது.

'மகாத்மாவையும், பாரதியையும், சுபாஷ் சந்திர போஸையும் திலகரையும்...எத்தனை உயர்ந்த மனிதர்களைப் பெற்று அவர்களின் அளப்பரிய தியாகத்தால், பாரத மண்ணை வெள்ளையரிடமிருந்து மீட்ட சரித்திரமுடையதல்லவா பாரதம்? இந்தச் சின்னஞ்சிறு ஈழத்து மண்ணில் புதல்வர்களைகூறுபோட்டு விளையாட்டுப் பார்க்கிருயே...' மனசு ஓலமிட்டது மங்காவுக்கு.

''என்னடி யோசனை? ஊர் உலகத்தில் நாலும் நடக்கும். அதுக்காக காலா காலத்தில நடக்கவேண்டியது நின்று போகலாமா? பெடியன் கச்சேரியில் கிளார்க்காம். குடி, சிகரட் இல்லை. அப்பாவும் உன்னட்ட ஒரு வார்த்தை கேட்கச் சொன்னார்.''

கொஞ்ச நாளாக அம்மா பாடும் பாட்டு இதுதான். எங்கோ சென்ற சிந்தனையை அம்மா வந்து குளப்பினாள்.

''அம்மா! எனக்கு விருப்பமில்லை. வேண்டாம். உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். இந்த மண் விடுதலை அடையிறது ஒருபக்கம் இருக்கட்டும். ஒருத்தனை ஒருத்தன் அடிச்சிச் சாகிறதாவது நிக்கட்டும்.

''அப்படியென்ரு...''?

'அம்மா! என்னைப் புரிந்துகொள்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா! உன் மகளுக்கு மட்டும் திருமணமாகவேண்டும் என நினைக்காதே...உன் மகள்மட்டும் சீர் சிறப்போடு வாழ வேண்டுமென்று நினைக்காதே. இந்த மண்ணில் இரத்தக் குளிப்பு நீங்க ஆண்டவனைப் பிரார்த்தனை செய். எத்தனை பெண்கள் பூவும் பொட்டுடன் வாழ்வார்கள் தெரியுமா? அந்த நேரத்தில் உன் மகளையும் ஆண்டவன் சீர் சிறப்பாக வாழவைப்பான். அம்மா! என்னைப் புரிந்துகொள்.'' அவள் அன்னையின் மடியில் படுத்துக் கண்ணீர் உகுத்தாள். அவள் அன்னை ஆதரவாகத் தடவிவிட்டாள். அவளுக்குத் தெரியாதா பெண் மனசு,? ஈழத்து அன்னையல்லவா? இந்த விடுதலைப் போராட்ட காலத்தில் தாய்மையின் பங்கினை சரிவரச் செய்த ஆயிரமாயிரம் அன்னையருள் அவளும் ஒருத்தி தானே? பிள்ளை மனதின் தவிப்பு அவளுக்குப் புரிந்தது. கூடவே ஒரு பூரிப்பு! தன்னைத், தன் வீட்டை, தன் சுற்றத்தை சுற்றி வட்டம்போட்டு வாழ்கிற இந்த சமுதாயத்தில், சமுதாயத்தை, இந்த மண்ணை, அதன் ஒற்றுமையை, விடுதலையை நினைக்கிற ஒரு பெண்ணைப் பெற்றதற்காக அவள் மனம் பெருமிதம் அடைகிறது. தன் நெஞ்சில் அவள் நினைவுகளும், கரத்தில்துப்பாக்கியுமாய் அந்த வீர மைந்தன் எங்கோ ஒரு களத்தில் போராடுவது அவளுக்கு மட்டும் புரிகிறது. இன்னும் அவள் மனம் சூன்யமாகவில்லை. அந்த வீரனின் தாலிக்காக அவள் கழுத்தும் துணைவனின் அன்புக்காக அவள் மனசும் இன்னும் காத்திருக்கிறது. என்றும் காத்திருக்கும்.

---- ★ ----

*(1990 ஐரோப்பிய தமிழ்சிறுகதைப் போட்டிக்கு அனுப்பிய கதை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் தொடர்கிறது
இந்த - சீதனப் பசி
இன்னமும் தொடர்கிறது

●

இந்த உலகின்
கன்னிப் பூக்களை எல்லாம்
புசிக்கக் கொடுத்த பின்தான்
இந்தப் பசி தீரும்

●

பூக்களே வாருங்கள்
புயலாக மாறுவோம்

- தமிழ்ப்புதல்வன் -

2

# அலைக்கு எட்டிய கரைக்கோலம்

சமையலறையில் நெய்மணம் கமகமத்தது. விசாலாட்சி லட்டு பிடித்துக் கொண்டிருந்தாள். காலாகாலத்திலே வீட்டிற்கு ஒரு மருமகள் வந்துவிட்டால் இப்படித் தள்ளாதவயதில் சமையலறையில் பாடுபட வேண்டியதில்லைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்தி, அவன்தான், அவளது ஒரே மகன். தன் ஒரே, மகனுக்கு இந்தபரந்த உலகத்தில் பெண்ணா இல்லை? இதுவரை பெண்பார்க்கும் படலத்தில் ஏழு பெண்களை சந்தித்துவிட்டு ஒன்றிலுமே திருப்தி ஏற்படாத மனதோடு, இருக்கிறான். சக்கரவர்த்தி. ஒரு கனம் வாசுகி, ஜயந்தி ரசிகா, கௌஷியா, சீதா, மதுரா, மங்களா எல்லாருமே கண்முன் வந்து போனார்கள்:

முதல் வாசுகியைப் பெண்பார்க்கப்போன நினைவுகள். மனச்சாட்சி என்னவோ செய்தது. ஐந்து பெண்களோடு பிறந்தவள் வாசுகி. குடும்பத்தில் மூத்தவள். சுமாரான அழகு என்றாலும் அடக்கமான பெண். தலை நிறையக் கன காம்பரமும், மூக்குத்தியும், அட்டியலுமாக லட்சுமிகரமாக இருந்த அவள் தோற்றம், மனசிலே ஒரு நிறைவை ஏற்ப டுத்தத் தொடங்கியது. சக்கரவர்த்தியின் விருப்பத்தின் பேரில், அவள் முகம் சிவக்க ''இன்பக் கனாவொன்று கண்டேன். தோழி என்னுள்ளம் மகிழ்வு கொண்டே''அவள் இனிமையாகப் பாடி முடித்ததும் விசாலாட்சி பூரித்துப் போனாள். மொத்தத்தில் அவர்களுக்கு வாசுகியை நன்றுகப் பிடித்துவிட்டது. ''பிறகென்ன பெண்ணைப் பிடிச்சுப் போச்சு'' மற்றதெல்லாம் எப்படி?'' விசாலாட்சி பேச்சை ஆரம்பித்தாள். ''மற்றதெல்லாம் புரோக்கரிட்ட கதைச்ச நான்.'' வாசுகியின் அப்பா கூறினார். ''பரவாயில்லை, இப்ப நேரில் சொல்லுங்க.'' விசாலாட்சி தூண்டினாள். ''வாசுகிக்குப் போடப்பட்ட நகை போடுறம். வீட்டில அரைவாசியை எழுதித் தாறம். காசு இருபத்தைந்து தாறம்.''

''பாருங்க, என்ன இருந்தாலும், இத்த நாளைய செல வுக்குக் கட்டாது. ஒன்று கேட்ட நாங்கள், நீங்கள் எழு பத்தைந்து என்றாலும் தரவேணும் பாருங்கோ''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தாறதில ஒன்றுமில்லை பாருங்கோ. ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்றவள் நான். மற்றப் பிள்ளைகளை யும் அல்லே நினைச்சுப் பார்க்கவேணும்.''

''அது உங்கட பிரச்சினை. எங்கட பிரச்சினையைச் சொல்லிப்போட்டம். மிச்சத்தை புரோக்கரிட்ட சொல்லி அனுப்புங்கோ.''

விசாலாட்சி மெல்ல நழுவினாள். கூடவே அந்த வீட்டு சிற்றுண்டிகளை நன்றாக சாப்பிட்ட ''களையில்'' இருந்த சக்கரவர்த்தி அம்மா பின்னால் எழுந்து கொண்டான். ''பின்ன நாங்கள் போயிட்டு வாறம்.''

''தம்பி அந்த இடத்தில் மரியாதை இல்லையென்றுதான் அப்படிச் சொன்னனான். ஆனால், தம்பி பொம்பிளை நல்ல வடிவானவள். குணமானவள். நாலும் தெரிந்தவள். சீத னம் என்று அடம் பிடிக்காமல், செய்வம். குறிப்பும் பொருந்திவிட்டுது. இடமும் நல்லது.'

''இல்லையம்மா பொம்பிளையைப் பிடிச்சிட்டுது, என் றாலும் சீதனம் போதாது. ஒரு லட்சம் தருவினமென்றா ஓம் என்று சொல்லுங்கோ. இல்லாவிட்டால் இந்தக் கல் யாணம் வேண்டாம்.''

''தம்பி உனக்குப் பெண் சகோதரங்களோட பிறக்காத குணமோ தெரியாது. இப்படியெல்லாம் கதைக்க வருகுது.'

''இல்லையம்மா அவையள் கொடுக்கிற காசு எந்த மூலைக்குக் காணும்.''

''அதுவும் சரிதான் மகன்.''

விசாலாட்சிக்கு வாசுகியைப் பிடித்திருந்தபோதும், சக்க வர்த்திக்கு சீதனத்தை அதிகம் பிடித்திருந்தது.

தினமும் புரோக்கரின் வரவை ஆவலோடு எதிர்பார்த்து ஏக்கத்துடன் காத்திருந்தாள் வாசுகி. வாசுகியின் எதிர் பார்ப்புகள், கனவுகள், மெல்ல கலையத்தொடங்கி, நாட் கள் நகரத் தொடங்கின. ஆசைகள் தேய்பிறையானது. ஐந்தைப் பெற்ற வாசுகியின் அப்பா, அடுத்த வரன் தேடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலத்தில் இறங்கிவிட்டார். பலத்த எதிர்பார்ப்புகளோடு தினமும் புரோக்கரை வழிமேல் விழி வைத்துக் காத்திருந்த வாசுகிக்குக் கடைசிவரை புரோக்கர் வராமல் போகவே சக்கரவர்த்தியின் உருவம் சிறுகச் சிறுக மறைந்து மனசு வெறுமையானது.

★ ● ★

சக்கரவர்த்தி உற்சாகமாக செயல்பட்டுக்கொண்டிருந்தான். வாயில் ஒரு சினிமாப் பாடலை முணுமுணுத்தபடி சுளித்துக்கொண்டிருந்தான். அவனது உள் மனம் இன்றைய பெண் பார்க்கும் நிகழ்ச்சியை எப்படி ஒழுங்காக நடத்தி முடிப்பது என்பதிலேயே குறியாய் இருந்தது. 'தாய் தகப்பனுக்கு ஒரே பெண் என்றால் நியாயமாகக் குடுப்பினம். ஒன்றரை என்றாலும் தட்டிப் பார்த்தால்தான் ஒன்றென்றாலும் கிடைக்கும். பெண் எப்படியோ? சே, அவள் எப்படியிருந்தாலும், சரி, இந்த உலகத்தில் முக்கால்வாசிப் பெண்களின்ர குணமும் ஒரே மாதிரித்தான் இருக்கிறது. பெண் கொஞ்சம் நிறமாயிருந்தால் நல்லது. நகை ஒரு இருபத்தைந்து பவுணுக்குப் போடச் சொல்லவேணும். மனுஷன் என்றால் ஆயிரம் வரும். அந்தரத்திற்கு விற்றுச் சாப்பிடவாவது உதவாதே. காணி வீட்டு உறுதி இதுகளில் மக்கு மாதிரியில்லாமல் விழிப்பாக இருக்கவேண்டும்' மனசு தீர்மானங்களை வகுத்தது. சக்கரவர்த்தியைப் பொறுத்தளவில் அவன் ஆயத்தமானான்.

சரியாக நான்கு மணிக்கு வாடகைக் காரில் அவனும் விசாலட்சியும் பெண் வீட்டு வாசலில் இறங்கினர் ''வாருங்கோ, வாருங்கோ'' பெண்ணின் தகப்பனார். வாயெல்லாம் பல்லாக வரவேற்றார். கூடவே, கேக், பற்றீஸ், பலகார வகைகளைத் தொடர்ந்து ஆவி பறக்க போர்ன்வீடா வந்தது. இதன் பின்னே கிளிப் பச்சை நிறத்தில் காஞ்சிபுரம் சரசரக்க கௌதமி வந்து நின்றபோது, ஒருகணம் சக்கரவர்த்தியின் விழிகள் அவளது சிறகடிக்கும் விழிகளுடன் சந்தித்துக் கொண்டது. அடுத்த சில கணங்களில் அவளது விழி மலர்கள் நிலம் பார்த்தன. பெருவிரல் அவளையறியாமல் கோடு கீறியது. கன்னங்கள் மாம்பழங்களாகின. மொத்தத்தில் கௌதமியை இருவருக்குமே பிடித்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எங்களுக்குப் பெண்ணைப் பிடிச்சிட்டுது. மற்றதுக ளைப்பற்றிக் கதைப்பம்.''

''அம்மா எங்களுக்குள்ளது ஒரே பிள்ளை. இந்த வீடு, பேங்கில் உள்ள ஐம்பதாயிரம், போடப்பட்ட நகை, இவ் வளவும் தாறம்.'' கேசவன் மாஸ்டர் முழு உழைப்பை யும் தானம் செய்ய வேண்டிய காலநேரம் வந்து விட்டதை உணர்ந்து சொன்னார்.

''என்ன பாருங்கோ. இந்த நாளில, ஐம்பதாயிரம் எந்த மூலைக்குக் காணும்.? இந்த நாளைய செலவு என்ன'? பிரச்சினை என்னவென்று தெரியாத மாதிரி சொல்லுறி யள்.''

''இதைவிட எங்களிட்ட ஒன்றுமில்லை. ஏதோ சமா ளிச்சு இந்த நல்ல காரித்தை ஒப்பேத்த வேணும் பாருங்கோ''

''அப்படி லேசா சொல்லி நழுவுற காரியமோ கலியா ணம். என்ர பிள்ளை கட் என் ரைட்டா சொல்லிப்போட் டான். சீதனம் ஒன்று ஆகுதல்வேண்டும் என்று. எங்கட காலத்துக்குப் பிறகு அதுகள் சீவிக்கவேண்டாமே?''

''ஏதோ பெண்ணைப் பெத்தவங்க நாங்க. என்ர பிள் ளைக்குப் பார்த்த முதல் வரன் இவர்தான். கலியாணத்தில் முடியவேண்டும் என்பதுதான் எங்கட ஆசை!''

''ஆசை மட்டும் இருந்து ஒன்றும் செய்ய முடியாது பாருங்கோ. எதுக்கும் யோசித்து கடிதம் போடுங்கோ.''

''அப்ப நாங்க் வாறம்''

''போயிட்டு வாருங்கோ! நல்ல பதிலை எதிர்பார்க் கிறோம்!''

இரவு கனநேரமாகியும் நித்திரை வர மறுத்தது சக்கர வர்த்திக்கு. எரிச்சலெடுத்தது கண்கள். மீண்டும் தன் கல்யா ணப் பிரச்சினையை நினைக்க தலையை வலித்தது. இந்தத் தாய் தகப்பன் மார்க்கு பிள்ளைகளைப் பெறத் தெரியும். சீதனமென்று வரைக்க படுறபாடு. அலுத்துக் கொண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரவர்த்தி. எதுக்கும் பார்ப்போம். இவளவையின்ர சிரிப்புக்கும், வடிவுக்கும் மயங்கினால், நடுத் தெரிவில் நிற்கவேண்டியதுதான். முதலில் மனசைக் கல்லாக்கிக் கொள்ளவேண்டும். இனி புரோக்கர் சொன்ன ரஸிகாவை பார்ப்பம். இந்த பரந்த கடலில் ஒரு மீனா இருக்கு? எவ்வளவு ஆயிரம்? நான் ஆம்பிளை. பத்துப் பொம்பிளையும் பார்க்கலாம். சக்கரவர்த்தி நினைத்தமாதிரியே அடுத்த சில வாரங்களில் ஜயந்தி சீதா, மங்களா என்று மூன்று பேரைப் பார்த்தான். எல்லா இடங்களிலும் பண விவகாரம் சற்றேனும் ஒத்து வரவில்லை புரோக்கரின் ரஸிகாவை பெண்பார்க்க தாயார் சகிதம் புறப்பட்டான் சக்கரவர்த்தி. அந்த வீட்டைப் பார்த்ததும் முதல் அதிர்ச்சி ஏற்பட்டது சக்கரவர்த்திக்கு அது ஒரு நவீன வசந்த மாளிகைதான். இரண்டு பெண்கள் என்று புரோக்கர் கதைசசவர் வீடு பாதுயாய் பிரிபடுமோ தெரியவில்லை. பார்ப்போம்' சிந்தனையோடு உள்ளே நுழைந்தான் சக்கரவர்த்தி. வழமையான வரவேற்புக்கள். சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், பெண் வந்து தரிசனம் கொடுத்த போது சற்றே நிதானப்படுத்திக்கொண்டான சக்கரவர்த்தி! இப்படி ஒரு அழகியை அடைய கொடுத்து வச்சிருக்க வேணும்! பாழாய்போன மனதை முதல் தடவையாக சபித்தான சக்கரவர்த்தி. ''தம்பி பிடிச்சிருக்கா''? விசாலாட்சி கேட்கவும் மௌனமாக தலையாட்டினான்.

''அப்ப மிச்சத்தை கதைப்பம்''

''பிள்ளைக்கு எந்தக் குறையும் இல்லை. சின்ன வயசில மூட்டு வாதம் இரண்டு முன்று தடவை வந்தது. வைத்தியம் செய்தநாங்க. இதை ஏன் சொல்லுறனென்றா, உங்கட பிள்ளை மாதிரி வைத்துப் பார்த்துக்கொள்ளுவீங்க என்பதால்தான்!''

''அதில ஒன்றுமில்லை. வைத்தியச் செலவு அது இதென்று வரும். நீங்கள் 'ஓம்' பட்ட ஒன்றோடு ஐம்பதைக் கூட்டித் தந்தால் சரி.''

ரஸிகா அவசரமாகத் திரும்பி வந்தாள். 'மன்னிச்சுக் கொள்ளுங்க, இந்தக் கல்யாணத்தில் எனக்கு விருப்பமில்லை'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏனம்மா அப்படிச் சொல்லுறாய்'' அம்மா அவசரப் பட்டாள்,

''மிஸ்டர் சக்கரவர்த்தி என்னைக் கல்யாணம் கட்டிக் கொள்ள உமக்கு என்ன தகுதி இருக்கு?' இப்படி நான் கேட்டால்தான் உம்மட மூளைக்கு உறைக்கும். எனக்கு உம்மை மாதிரி காசு ஆசை பிடித்த மடையனைக் கட்டிக்கொண்டு வாழ்நாளை வீணடிக்க விருப்பமில்லை. உமக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டுமென்றுதான் ஓம் பட்ட நான். கல்யாணம், கணவன் மனைவி உறவுப் பந்தம் இவைகள் நல்ல இரண்டு மனங்களின் சங்கமிப்பே தவிர, பணத்துக்கு வாங்குகிற பண்டம் இல்லை. நீர் பார்த்த எல்லாப் பொம்பிளைகளையும் எனக்குத் தெரியும். எங்களின்ர காசை வாங்கி, அதிலேயே தாலி, கூறை வாங்கி நடப்பாகத் தாலி கட்டுறது ஒரு பக்கம் இருக்க அடுத்த பரம்பரைக்கும் சேர்த்து வைக்க ஆசைப்படுகிற உம்மை மாதிரி ஆம்பிளையளுக்கு எந்தப் பெண்ணும் ஏமாந்து கழுத்தை நீட்டக்கூடாது என்பதுதான் என்னோட ஆசை. உம்மட ஆம்பிளை என்ற தகுதிக்குப் பெறுமதி ஒன்றரை லட்சமே. மிஸ்டர் சக்கரவர்த்தி, லட்சம் லட்சமாக உழைக்கிறவனுக்குக்கூட இப்படி டிமாண்ட் பண்ணி சீதனம் கேட்கத் தைரியம் வராது. நீர் ஒரு கிளார்க். படிப்படியாகத்தான் முன்னேறவேண்டும், யாரோ பாடுபட்டு உழைத்த உழைப்பில் சுகம் காண நினைக்கிற உம்மை மாதிரி ஆண்களுக்கு என்னைமாதிரி பெண்கள் கிடைக்க மாட்டினம். சும்மா இருந்த எத்தனையோ பெண்களின் மனசில் ஆசைகளைவளரவிட்டு, ஏமாத்தியிருக்கிறீர். நீர் பொம்பிளையைக் கல்யாணம் கட்டவேண்டாம். பணத்தைக் கட்டிக்கொள்ளும்...'' உணர்ச்சி வசப்பட்டு படபடப்புடன் பேசிய ரஸிகா முறைப்புடன் உள்ளே சென்றுவிட்டாள். அதுவரை வாயடைத்துப்போன அனைவரும் பழைய நிலைக்கு வர எத்தனித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்கட வீடு தேடி வந்ததுக்குச் செய்த மரியாதை காணும். நாங்கள் வாறம்.' விசாலாட்சி எழுந்தாள்.

பதில் சொல்ல முடியாத நிலையில் ரஸிகாவின் பெற்றோர் வாயடைத்தபடி நின்றனர்.

'தம்பி உன்ர அளவுக்கு மிஞ்சின ஆசைக்கு இந்த வாய்க்கார பெட்டையிட்ட வாங்கிக் கட்டிக்கொண்டு போறம் இனியாவது நம்மட விரலுக்குகந்த வீக்கமாகப்பார்.''

''ரஸிகா! ஏன் மகள் இப்படி நல்ல நேரத்தில பொரிஞ்சு தள்ளினாய்? விருப்பமில்லாட்டி விடுறதுதானே. அவன் ஆம்பிளை நாலு இடத்தில உன்னைப்பற்றி ஏடாகூடமாகச் சொன்னால் உன்ர வாழ்க்கை என்னாகும்?'

''அப்பா அதுக்காக இவங்களைக் காசு கொடுத்து வாங்கவேணுமே. இந்த ஆளுக்குப் பெண்ணைப்பற்றி சிந்தனையில்லை, எதிர்பார்ப்பில்லை, கற்பனைகள் இல்லை, தங்கத்தாலை ஒரு பெண் இருந்தாலும் கட்டிக்கொள்ள ஓம்படுவார். அப்பா! நான் பழங்காலத்துத் தலையாட்டிப் பொம்மையில்லை. உண்மையான ஒரு நல்ல ஆம்பிளையை வாழ்க்கையில் சந்தித்தால், கல்யாணம் நடக்கும். இல்லாவிட்டால், இப்படியே மீதிக்காலம் போகட்டும். அப்பா விலைக்கு வாங்குகிற மருமகன் உங்களுக்கு வேண்டாம், நீங்கள் விலைக்கு வாங்கித் தரபோகும் கணவன் எனக்கும் வேண்டாம்.'

'ரஸிகா! உனக்கு உலகம் விளங்கவில்லை மகள்.'

'அப்பா! எனக்கு உங்களை விட அனுபவம் குறைவு. ஆனால், உலகம் விளங்குதப்பா. இந்த ஆம்பிளையள் தங்களை ஓரளவு உணர வாய்ப்பு கிடைக்கிறது எப்போ தெரியுமா அப்பா? அவர்கள் ஒரு பெண்ணுக்கு 'தகப்பன்' என்ற அந்தஸ்து பெற்ற பிறகுதான்.' அப்பாவின் கன்னத்தில் வழிந்த நீரை ஒற்றித் துடைத்துவிட்டு சிரிப்போடு அப்பாவைப் பார்த்தாள் அந்தப் புதுமைப் பெண்.

வீரகேசரி

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம்-
கற்றுக் கொடுப்போம்
எம் போராளிகளுக்கு
போராடுவதற்கு அல்ல-
ஒன்றுபடுவதற்கு
நாளைய தலைமுறையின்
தலைகள் தப்புவதற்கு
தமிழீழச் சரித்திரத்தில்
தமிழன் உயிர் வாழ்வதற்கு

- தமிழ்ப் புதல்வன்-

3

# பெற்ற மனம்

சங்கரிக்கு இருப்புக்கொள்ள வில்லை. மனசு 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. அண்மைக் காலமாக திருக்கோணமலை இரவில், கும்மிருட்டில் ஆழ்ந்து விடும். அவள் மனமும் அப்படித் தான் இருண்டு கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பாரத்தைஅழுது தீர்ப்போம் என்றால் கணவன் விசு விடம் திட்டுவாங்கவேண்டும். ''ஆள் ஆளை அடிச்சுக் கொல்லுகிற பிசாசுகளைப் பெத்துப்போட்டு இப்ப ஏனப்பா அழுது வடிக்கிறாய்? அப்பவே இரண்டு சனியன்களையும் கழுத்தைநெறித்துக் கொன்றிருக்க வேண்டும்.''

''இல்லையப்பா, அவன் சிவசங்கர் எந்தக் காட்டுக்கை, என்ன கஷ்டப்படுகிறானோ? அவனைத் திட்டாதியுங்கோ''

''உன்ர இரண்டாவது புத்திரன் பெரிய அரசியல் புள்ளிதானே? கதைச்சு ஒரு அரசியல் முடிவெடன்.'' அவரது வெறுப்பு வார்த்தைகளாக வெடிக்கும். எனவே சங்கரியால் இந்த விஷயத்துக்குக் கணவனிடம் எந்த ஆறு தலும் கிடைக்காதென்று நன்றாய்த் தெரியும்.

மூத்தவன் சிவசங்கர் பிறந்தபோது சங்கரி பூரித்துப் போனதென்னவோ உண்மைதான். தலைச்சன் ஆம்பிளை என்றால் அம்மாக்காரிக்குத் திடீர்ப் பெருமை ஏற்படுவது நம் சமுதாய இயற்கைதானே? இரண்டாமவன் உமாசங்கர் பிறந்த போது, அந்த மகிழ்ச்சி சற்றுக் குறைந்து போனது. 'சே' இரண்டாவது பொம்பிளை பிள்ளையாய்ப் பிறந்தி ருந்தால் எவ்வளவு நல்லது. சரி மூன்றாவது பெண் குழந்தை பிறக்கப்படுமென்றால்... எங்கே? அவ்வளவுதான் தெய்வத் தின் கொடுப்பினை.

அதன்பின் சிவாவும், உமாவும் அவளுக்கு இரண்டு கண்கள்தான். ஒரு வருடம் தாய்ப்பாலின் சுகத்தை இரு வரும் அனுபவித்தவர்கள்தான். நிலாக்காட்டி சோறு தீத் தும்போதும், சரி, தத்தித் தத்தி நடைபோடும்போதும் சரி, மழலை வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தபோதும் சரி, ஒரே மாதிரி சந்தோஷப்பட்டாள் சங்கரி.

ஏதோ ஒரு சஞ்சிகையில் கண்ட பைலட் படத்தைப் பார்த்து அடம்பிடித்து அப்படி டிரஸ் தைத்துத் தாவென சிவா கேட்டதும், ''எனக்கும் ஆமிக்காரன் டிரஸ் வேண் டும்,'' என்று உமாவும் கேட்பான். மொத்தத்தில் அந்த அந்த டிரஸ் போட்டு அல்பத்தை நிரப்பினாள் சங்கரி. சிவாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணா, உமாக்கண்ணா உங்க ஆசைக்காக இச்சட்டை யெல்லாம் தைத்துத் தந்தேன். இது அம்மாவோட ஆசை யில்லை. நீங்கள் படித்து நிறையப் பட்டம் வாங்கி, சமூ கத்தில் ஓகோவென்று திகழ வேண்டும். ''இந்தா, போறாவே சங்கரி, யார் தெரியுமா? சிவா, உமாவோட மதர்'' என்று முத்திரை குத்தவேண்டும். அவளுக்குத்தான் எத்தனை ஆசைகள்.?

நாளைக்கு எப்படியும் மூதூர் போகவேண்டும். விசுவி டம் எப்படி அனுமதி கேட்பது? இளையவன் உமாவுக்குத் தெரியாமல் போகவேண்டும். மூத்தவனின் பிறந்தநாள் வெள்ளிக்கிழமை வருகிறது. யாரோ, அவன் மூதூரில் வந்து நிற்பதாகச் செய்தியும் கொடுத்துவிட்டார்கள். தன் கையால் அவனுக்குச் சோறு ஊட்டி விடவேண்டும். அவனை ஆசை தீரக் கொஞ்சித் தலையை வருடி நெஞ்சின் சுமை களை அழுது கொட்டித்தீர்த்து, அவன் பெயரில் அர்ச்சனை செய்து, இன்னும் என்னென்னவோ நினைப்புகள். நிமிர்ந்து படுத்திருந்தவளின் கண்களில் நீராய் ஓடிக் காதை நனைத்தன. அப்படியே உறங்கிப்போனாள் சங்கரி. விடிந்ததும் பரபரப் பானாள்.

தயங்கித் தயங்கி ''ஏனப்பா, இன்றைக்கு நான் மூதூருக்கு ஒருக்காப் போகவேண்டும்.''

''ஏன்?''

அவளிடம் மௌனம்தான் எஞ்சியது. வார்த்தைகள் இல்லை. அவள் எங்கே போகிறாள் என்று அவருக்குத் தெரியும். தன்னைப்போல் எல்லா உணர்ச்சிகளையும். மன சுக்குள் போட்டு மூடிவைத்துவிட்டுத் திரிய அவளால் முடி யாதென்று அவருக்குத் தெரியும். இருந்தாலும், தன் அற்ப சொற்ப உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்துச் சமா ளிக்க எஞ்சியிருப்பவள் சங்கரி என்பதால், இப்படி இடைக் கிடை ஏதாவது கதைப்பார்.

''சரி போயிட்டு வா.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே போதுமென்று அவள் மனம் துள்ளியது. எள்ளுருண்டை, முறுக்கு, என்று ஏற்கனவே ஆயத்தப் படுத்தி வைத்திருந்தவைகளையும், இறைச்சிப் பொரியலை யும் புளிச்சாதத்தையும் தனித்தனியாகப் பார்சல் செய்து கொண்டாள்.

நேற்றிரவு ஆறுமணிக்கெல்லாம் வாக்கிடோக்கியோடு கிளம்பிபோன உமாசங்கர் இன்றைக்கு வரமாட்டான். தலைவர் வந்து நிற்கிறார் என்று சொல்லிக்கொண்டு போன வன். பின்நேரம் வரை வரமாட்டான். சிந்தித்தபடியே கிளம்பினாள் சங்கரி.

அந்த நாளில் மடத்தடிச் சந்தியில் இரண்டு தமிழர் களைப் பிடித்து வைத்துச் சிங்களவர் மீன்கத்தியால் வெட் டினதைப் பார்த்துவிட்டு, வந்து இரண்டு நாள் தூக்கமில் லாமல் வெருண்டுபோன பிள்ளைகளுக்கு வயது பதினான் கும், பன்னிரண்டும் தான். மூத்தவன் வீட்டை விட்டோடி ஐந்து நாளில் சின்னவனும் ஓடினவன்தான். அந்த சோகத்தை இருவராலும் தாங்க முடியாது அவர்கள் இரு வரும் பட்ட பாடு சொல்லுந்தரமன்று. அதன்பின்பு கடந்த நாலு வருடமாக சிலோன் ஆமி அடிக்கடி வீட்டில் ''கொட்டியா''வைத் தேடியபடிதான். சுவரிலுள்ள படங் 'ளைத் தூக்கியெறிவதும், அல்பங்களை தூக்கிக்கொண்டு போவதும் கதிரை மேசைகளை உடைப்பதும், அவள் அடிக்கடி காளி கோவிலில் அழுது அன்னையிடம் வேண்டு தல் செய்வதும் பழக்கமாகிவிட்டது. எல்லோரும் போன தென்னவோ நம் பொது எதிரியை வீழ்த்தி இந்த மண்ணை காப்பாற்றத்தான்.

ஆனால்! ஆனால்! ஜெட்டியடி வந்துவிட்டது. இந்தியன் ஆமி தாராளமாகச் செக்பண்ணினான். ''நோ மெடிசின்'' அவர்களுக்கு மருந்துவகை அந்தப்பக்கம் போய்விடக்கூ டாது என்பதில் மிகுந்த கவனம்.

'நோ' என்றவள் 'என்ர பிள்ளை தின்ன வழியில்லா மல் காட்டுக்கை நிற்கிறான்' மனம் குமுறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோஞ்ச் ஆடி அசைந்து கிளம்பியது. அவள் எண்ணங் களும் பல மைல் தூரம் முன்னேறியது. இடைக்கிடையே பழைய நினைவுகளும் அலைக்களித்தது. சிவாவின் பத்தா வது பிறந்தநாளுக்கு, சிவாவும், உமாவும் கட்டிப்பிடித்து எடுத்த படத்தில் தான் எத்தனை துல்லியமான பாச உணர்வு கள். இப்போ!......நினைக்க நினைக்க நெஞ்சு வெடிக்கும் போல் இருந்தது. இனி எந்தக் காலத்தில் இருவரையும் ஒன்றாகப் பார்க்க முடியும்?

லோஞ்ச் அக்கரைப்பட்டுவிட்டது. மெல்லத் தன் சாமான் களுடன் இன்னொரு செக்கிங்கை முடித்துவிட்டு, துக்கத்தி லும் சந்தோஷம் மனதை நிரப்பப்பெற்ற பாசம் கால்களை வேகமாக நடக்கவைத்தது. களைப்புத் தெரியவில்லை. நடை, வாகனம் இப்படி, எப்படி, எப்படியோ போய்...... அவனைக்கண்டதும் மனசில் சொல்லவொண்ணா வேதனை! மலையாய் உயர்ந்து நின்ற சிவாவைப் பார்த்ததும் உணர்ச் சிப் பிரவாகத்தில் வார்த்தைகள் நின்றுவிட அழுது தீர்த் தாள் சங்கரி.

''அம்மா! ஏனம்மா அழுகிறீங்கள்? நான் நல்லாத் தானே இருக்கிறேன்.?'' இரும்பாய் மரத்துப்போன இத யத்துக்குள்ளிருந்து தாய்ப்பாசம் அவளைக் கட்டிப்பிடித்து அழவைத்தது. ''அப்பாவும், உமாவும்நல்லாயிருக்காங்கடா'' உமாவின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அவன் முகம் மாறியது.

''வேண்டாம் ராசா இந்தப் பகை. நீயும் அவனும் என் வயிற்றில் பிறந்தவர்கள். இரண்டுபேரும் ஒரு நோக் கத்திற்காகப் போனீங்கள். இப்ப நீங்க இரண்டு பேரும் எதிரிகள். உண்மையான எதிரி நின்று புதினம் பார்க்கிறான். உங்கள் பலவீனத்தைப் பயன்படுத்துறான்.

''இதைப்போய் உங்கட இரண்டாவது பிள்ளையிட் டச் சொல்லுங்கோ.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம்பி, இந்த ஒரு அம்மாவால் உன்னை மாதிரி லட்சம் பிள்ளைகளைத் திசை திருப்புவது கஸ்டம் ராசா. நீ மூத்தவன். பிழையை மன்னிக்கிற மனசை ஏற்படுத்திக்கோ. கடவுள் உன்னை ஆசீர்வதிப்பார்.:' அவனது காயத் தழும்புகளைக் கண்ட சங்கரி மீண்டும் அழத் தொடங்கினாள்.

''என்னம்மா, இவ்வளவு தூரம் இருந்து, அழவே வந்த நீங்கள்?'' அம்மாவின் கண்ணீரை ஆதரவாகத் துடைத்தான். அவனிடமிருந்து விடுபடமுடியாமல் அவள் பட்ட பாடு! எப்படியோ அவனைப் பிரிந்ததும் மனம் சூனியமாகிப் போனது.

''தெய்வமே! இனி, நான் என்ன செய்ய? தள்ளாடித் தள்ளாடி வீடு வந்துசேர, பகல் மாறி இரவின் முழு இருட்டின் பிடியில் திருமலை மூழ்கி இருந்தது. 'மினிக் மினிக்' என விளக்குகளின் நிரந்தரமற்ற ஒளி வீடுகளுக்குள்ளிருந்து எட்டிப்பார்த்தது.

''என்ன, மோனைப் பார்த்தியோ?'' சந்தேகமாய்ப் பார்த்தார் விசு. ''ஓம்.'' ''பின்ன ஏன் உம் என்று இருக்கிறாய்?''

''என்னங்க, என்னால தாங்க ஏலாது.'' என்ர இரண்டு பிள்ளைகளையும் இந்த மண்ணின் விடுதலைக்காகத் தாரை வார்த்தேன். இப்ப மண்ணுக்கும் விடுதலை இல்லை. என் பிள்ளைகளும் எனக்கென்று இல்லை என் மூத்தவன் சாப்பாடு இல்லாமல் கிடக்கிறான். என்ர இளையவன் நிம்மதி இல்லாமல் திரிகிறான். என்னால...... என்னால...'' அவள் அவர் தோள்களில் சாய்ந்துகொள்கிறாள்.

''சங்கரிம்மா!''

''நீ பெத்ததுகள் இரண்டும் வீரத் தமிழன்கள்தான். ஆனால், ஒரு குழந்தை எவனோ ஊதுர மகுடியிலை மயங்கிப்போய்க் கிடக்கிறான். மற்றவன் மனசிலும், உடம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் மயங்காத, சோராத வேங்கையாய் நிற்கிறான். சங்கரி, உனக்குத் தெரியுமா? பிரம்மா தமிழனைப் படைக்கும்போது ஒற்றுமையைப் படைக்காமல் விட்டுவிட்டான். ஏன் தெரியுமோ? தமிழன் தனக்குள்ள அளவுக்கதிகமான வீரம், புத்திசாலித்தனத்தால், இந்த உலகத்தை ஒரு குடையின்கீழ் கொண்டுவந்திடுவான் என்ற பயத்தால்.'' விசு படைத்தற் கடவுளில் பிழையைப்போட்டுத் தன் மனைவியைத் திருப்திப்படுத்தினார்.

விசுவின் கண்களினின்றும் வடிந்த கண்ணீர் அவளது முதுகை நனைத்தது. சங்கரியை அணைத்துக் கட்டிலில் படுக்கவைத்தார். ஆனால்... அந்த இதயம் எதிர்கால விளைவுகளைத் தாங்க முடியாமல் எப்பொழுதோ நின்றுவிட்டிருந்தது. பெற்ற பிள்ளைகள் ஒன்றையொன்று விரோதிக்கும் அவலத்தைப் பார்க்காமல் கண்களை நிரந்தரமாக மூடிக்கொண்டாள்.

''ஏ சங்கரியம்மா நீயாவது உன் பிள்ளைகளை நம்பி ஏமாந்து ஓடிவிட்டாய். ஆனால், நான் உன்னைமட்டும் நம்பியிருந்தவன் தானே? என்னை ஏன் ஏமாற்றிவிட்டு ஓடினாய்?'' விசுவின் அழுகுரல் ஒலித்துக்கொண்டே இருந்தது. இப்போ அந்தத் தாயின் உடலுக்குக் கொள்ளி வைக்க ஒருவன் இல்லை. ஒருவன் காடாளப் போய்விட்டான். மற்றவன் நாடாளப் போய்விட்டான். வீட்டில்...... விசும்பல் விட்டு விட்டுக் கேட்டுக்கொண்டிருந்தது.

✶ ● ✶

(--இலண்டன் 'அலைஓசை'--)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமர்கள் எல்லாம்
இன்று-
இராவணர்களாக மாறி
சீதைகளையே கடத்துகிறார்கள்

●

சீதைகள் இன்று
அசோக வனங்களில்
மட்டுமல்ல-
அயோத்தி நகரில் கூட
அழுது கொண்டுதான்
இருக்கிறார்கள்.

-தமிழ்ப் புதல்வன்-

4

# கூண்டுக் கிளியினைப் போல்....

இந்து ஈஸிச் சேரில் சாய்ந்தபடி 'இந்துமதியின்' கதைப் புத்தகத்தில் ஆழ்ந்திருந்தாள். அந்தக் கதையில் வரும் கணவன் மனைவியின் அன்பை நினைத்து சிலிர்த்துப் போனாள் இந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்து இந்து' என்று நிமிடத்துக்கு நிமிடம் உருகிப் போகிற கணவன். அவனை உயிராய் நேசிக்கிற இந்து கதையை வாசிக்க வாசிக்க மனசு லேசானமாதிரி ஓர் உணர்வு. கற்பனைக்கும், உண்மைக்கும்தான் எத்தனை வித்தியாசம்? கற்பனைகள் இனிக்கிற அளவிற்கு உண்மை இனிக்காமல் போகும்போது மனித மனம் படுகிற பாடு!

அப்படியே பல வருடங்களுக்கு முந்தின கல்யாணம் நினைவுபடமாய் ஓடியது அவளுள்ளே. சீக்கிரம் மாப்பிள்ளை பொம்பிளை, வந்தாச்சி, ஒரு பெரியவர் அவசரப்படுத்தினார். இந்துவின் முகமெல்லாம் பூரிப்பு! நாணத்திரை முகத்தை மூடி மறைத்திருந்தது. கழுத்திலே புத்தம் புதுத் தாலி ஏறியிருந்தது. அருகில் மிதுன் கம்பீரமாக நின்றான். ஆரத்தி பொட்டை சுமங்கலிப் பெண்கள் இருவருக்கும் இட்டனர். கெமராக்கள் ஒருபுறம் கிளிக் செய்தன. வலது காலை எடுத்து வைத்து இந்து முதன்முதல் மிதுனின் இல்லத்துக்குள் நுழைந்தபோது எத்தனை எதிர்பார்ப்புக்கள்? வண்ணக் கனவுகள்? விபரிக்க முடியாத உணர்வுகள்? மகிழ்ச்சியின் உச்சக் கட்டத்தில் இருந்தாள் இந்து. மிதுனின்பார்வையைத் தாள முடியாது நிலம் பார்த்தாள் காலில் உள்ள மெட்டி கொஞ்ச நேரத்துக்கு முதல் மிதுன் போட்டுவிட்டது. அந்த நினைப்பு... எத்தனை இதமாக அவளது கால்களில் போட்டுவிட்டான்? நினைக்கவே கன்னங்கள் சிவந்தன. மெல்லிய மஞ்சளும், இளம் சிவப்பும் கலந்த சேலையில் தங்க நட்சத்திரம் சிதறிக்கிடக்கின்ற விதமாக அழகான பட்டுச்சேலை அவள் உடலைத் தழுவியிருந்தது. கையிலும் கழுத்திலும் நகைகள் தலை நிறைந்த மல்லிகையும், கனகாம்பரமுமாக அழகுச் சிலையாய் அமர்ந்திருந்தாள் இந்து.

பத்து பவுணில் தாலிக்கொடி அது மட்டும் அவளுக்குப் பிடிக்கவில்லை. மாட்டுக்கு மூக்கணாங்கயிறு மாட்டுகிற மாதிரி... மனசுக்குள் சிரித்தாள் இந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மகிழ்ச்சியாகவே இருந்தாள். அந்த மல்லிகைத் தீவுக் கிராமம் பிடித்திருந்தது. அதில் தனித்துவமாய்த் திகழ்ந்த மிதுனின் பழமையான அழகான வீடு பிடித்திருந் தது. அந்தக் கிராமத்து அழகு பிடித்திருந்தது. அங்கு வாழ்ந்த வஞ்சகமில்லாத மனிதர்களைப் பிடித்திருந்தது.

வீதிகளுக்கே மின்சாரம் வராத இரவின் கும்மிருட்டு மட்டும் பயத்தை ஊட்டியது. அதன் பின்... மின்சாரம் வந்து சேராத நிலையில் மண்ணெண்ணெய் விளக்கின் வெளிச்சத்துடன், ஒரு ராமசாமிக் கிழவனின் துணையு டன் மிதுன் இந்துவின் தனிக்குடித்தனம்; மிதுனுக்கு சொந் தமான இன்னொரு வீட்டில் ஆரம்பித்த காலங்கள் கரைந்த கோலம்.

பகலிலே பேச்சுத்துணையின்றித் தனியே இருக்கும் இந் துவுக்கு புத்தகங்களே உற்ற நண்பிகள். அதிலே ஒரு சோம் பல் வரும்போது... வயிற்றில் நாலு மாதக் குழந்தையுடன் அவளே குழந்தையாகி சில்லுக்கோடு விளையாடி, ராமசாமி கிழவனிடம் திட்டு வாங்கிக்கொண்டு, மீண்டும் புத்தகம்... புத்தகம்.

இரவு எட்டு மணிக்குத்தான் மிதுன் வருவான். அது வரை ஊர்வன, பறப்பனவற்றிற்கெல்லாம் பயந்து, கால் களைத் தூக்கிக் கதிரையில் வைத்துக்கொண்டு... சே; துக்கம் நெஞ்சை அடைத்தது.

''பயமாயிருக்கு, கொஞ்சம் நேரத்தோட வர்றீங் களா?'' அவள் சொல்லிப்பார்த்தாள்.

''என்னப்பா விசர்க்கதை கதைக்கிறாய்? இங்க உள்ள வங்களெல்லாம் பிசாசே. நீதான் கண்டறியாத பொம் பிளை'' மிதுன் எரிந்து விழுந்தான். ஒரு சின்ன விசயத் துக்கு இப்படி எரிந்து விழும் மிதுனை ஏக்கமாகப் பார்த் தாள் இந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில், 'ஓ' இந்தும்மா! எதுக்கு பயப்படவேண்டும்? சீக்கரம் வரப்பார்க்கிறேன்.'' இப்படி அணைத்துக்கொடுக்கிற வார்த்தையை எதிர்பார்த்து சொற் சூடுகளை வாங்கிக் கொண்ட வேதனை தெரிந்தது.

''மிதுன் நான் இல்லறத்தை-அன்புக் கோட்டை கட்டி நிறையக் கனவுக் கோலமிட்டு, இப்போ...... இப்போ...... ஏமாந்து போனேனோ? நகையும், பணமும் மூன்று வேளை சாப்பாடும் பொம்பிளை மனசை நிறைவுபடுத்தாது. இங்கிதம் தெரிந்த கணவன், பாசத்தைக் கொட்டுகிற அன்புக் கூட்டுக்குள்ளே அடைப்பட்டு வாழ்கிற வாழ்க்கைதான் சராசரி பெண்ணோட எதிர்பார்ப்புகள்.''

கலங்கிய கண்களைச் சமாளித்தாள் இந்து.

★ ● ✶

அதன்பின் புத்தம் புதுமலராய் மலர்ந்த சரயுவின் வரவால் அவளும் மலர்ந்தாள். தாய்மையின் பூரிப்பில் தன்னை, தன் சுகங்களை மறந்தாள். அன்றொருநாள் மிதுன் நேரத்தோடு வருவதாகச் சொல்லியிருந்தான். தழைய பின்னிய கூந்தலும், நெற்றியில் குங்குமமும் பளிச் சென்று இருந்தாள். இந்து, குழந்தை சரயுவையும் தூக்கி வைத்துக்கொண்டு மிதுனை எதிர்பார்த்து வாசலில் காத் திருந்தாள்.

வந்ததும், வராததுமாக ''யாருக்கு இந்த அலங்காரம்?'' திடீரென்று நெருப்புச்சுட்ட வேதனை அவளுக்கு.

''ஓ'' இந்தும்மா பியூட்டிபுல்'' இதை எதிர்பார்த்த அவளால் அவனது சுட்டெரிக்கும் வசனங்கள் நிலைகுலைய வைத்தன.

''இது ஏன்? ஏன்?'' இப்படி அவள் தனக்குள் கேட்ட கேள்விகளுக்கு இதுவரை பதில் கிடைக்கவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி மனசுக்குள் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த நேரம்தான் இந்துவின் அப்பா வந்தார். ''இந்தும்மா, எப்படி இருக்கே? மாப்பிள்ளை எப்படி? ஒரு அலுவலாகத் தான் வந்தனான்''.

''நல்லாயிருக்கேன் அப்பா''. அப்பா அம்மா கொடுத்து வச்ச அளவுக்கு நான் கொடுத்து வைக்கவில்லை. பெண் சுதந்திரம் பற்றிப் பாடிய கவிஞர் பாரதிகூடத் தன் பெண்டாட்டியை எப்படி நடத்தினாரோ? சந்தேகமாயிருக்கப்பா!" இப்படிக் கேட்டு அப்பா மடியில் விழுந்து அழ வேண்டும் போலிருந்த மன உணர்வுகளை மறைத்துக் கொண்டாள் இந்து.

"இந்தும்மா! டீச்சிங் 'கோல்' பண்ணியிருக்கு. உன்னட்ட கேட்டுப் போட்டு அப்ளை பண்ணலாம் என்றுதான் வந்தனான்.''

''அப்பா இவரிட்ட கேளுங்கோ''

மிதுனுக்கும் மாமனார் முன் மறுத்துச் சொல்ல முடியவில்லை.

''இந்தும்மா, மிதுன் நல்ல பிள்ளை. எங்களோடு ஒத்துப்போகிற குணம்''.

''ஓமப்பா'' அதற்கு முற்றுப்புள்ளி வைத்தாள் இந்து.

இந்து சிலகணம் சிறகடித்துப் பறந்தாள்.

''நிரந்தரச் சிறையிலிருந்து சின்ன விடுதலை'' இப்படித்தான் அவள் மனம் சொன்னது.

உண்மையிலேயே வேலை கிடைத்தபோது, இந்து வானத்தில் மிதந்தாள். அதுவும், திருமலைப் பள்ளிக்கூடம் இந்துவுக்கு அன்றிரவு முழுவதும் நித்திரை இல்லை. இந்த அழகான கிராமத்தின் அழகில் எத்தனை தடவை தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறந்து லயித்திருக்கிறாள். கள்ளங்கபடு தெரியாத மனிதர்கள்.

மிதுனைத்தவிர! அவனது சந்தோஷங்களுக்கு அவள் தேவை. ஆனால் அவளது சின்னச்சின்ன ஆசைகளைக்கூட உதாசீனம் செய்யும் அவனது ஆண்பிள்ளைத்தனம். அப்படி உதாசீனம் பண்ணுகிற மிதுனைக்கூட விட்டுப்பிரியமுடியாத தன் மனசு. இதுதான் பெண்மனசோ? அவளுக்கு தன்னை நினைக்க நினைக்கப் பச்சாதாபமாக இருந்தது. மிதுனின் பூரண சம்மதம்கூட அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த பூரண சம்மதத்தில்கூட ஒரு உள்ளர்த்தம் இருக்குமோ? அவளாள் சிந்திக்க முடியாமல் இருந்தது.

மிதுனுக்கும், இந்துவுக்கும் ஏற்பட்ட இடைக்காலப் பிரிவு, அதில் ஒரு சுகம் தெரிந்தது. அவளுக்கு பள்ளிக்கூடம் சின்னஞ்சிறுசுகளின் மழலைமொழிகள், பள்ளி வாழ்க்கை அவளுக்குப் பிடித்துப்போயிற்று. கல்யாணம் செய்த இத்தனை வருட வாழ்வில் சின்னச் சுதந்திரத்தை அனுபவித்தாள் இந்து. மிதுனை நினைத்தால்... அவன் புரியாத புதிராகத் தெரிந்தான். அவனிடமிருப்பது பெண்ணை அடக்கியாளும் ஆண்பிள்ளைத்தனமா? தன் அழகான மனைவியை மற்றவர்கள் பார்க்கிறார்களே என்ற நமைச்சலோ? தன்னால் முக்காடு போட்டு மூடி வைக்க முடியாத இயலாமைத்தனமா? அவளுக்கு புரியவில்லை. சிலவேளை எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு எங்காவது தனியாய் மிகத் தனியாய் போக சிந்தித்தாலும்... சரயு அவளின் எதிர்காலம்... மெழுகாய் உருகி வாழவேண்டியதுதான். கடந்துபோன பதினைந்து வருடங்களில் அசைபோட்டு மகிழ அந்த இல்வாழ்க்கையில் கிட்டத்தட்ட எதுவுமே இல்லைதான்.

காலையில் நடந்த சம்பவம் கூட ஜீரணிக்க முடியாதது தான். சமையலறை வேலைகளை அவசரம் அவசரமாக முடித்துவிட்டுத் தலைவாரிக்கொண்டிருந்தாள். உச்சந்தலையில் ஒரு நரைமயிர் எட்டிப்பார்த்துச் சிரித்தது. அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த பருவத்துக்கு இழுத்துச் செல்லக் காலம் வரவேற்பளித்தது. நினைக்க சிரிப்பு வந்தது அவளுக்கு. இயற்கையிலேயே அழகாய்ப் பிறந்தது மட்டுமல்லாமல் இளமையைச் சொந்தமாக்கிக் கொண்டவள்பால், அவளது அழகு சற்றும் குறையவில்லை. கண்ணாடிப் பிரேமுக்குள் அகப்பட்டுக்கொண்ட கண்களும், முன் தலையெல்லாம் நரை மயிரும் இழுத்துப்போர்த்திய கோலமுமாய் அவன் பக்கத்தில் இருந்து நினைத்த இந்து இன்னும் இளமையோடு...

''இந்த வயசில கண்ணாடிக்கு முன்னால என்ன சிரிப்பு? இது எப்ப வாங்கின சேலை?'; கண்டிப்பான குரல் கேட்டுத் திரும்பியவள் முகம் சுருங்கிப் போனது. ''இந்த வயசில வேறு ஆண் மகனையா மனசில நினைத்து சிரிக்கமுடியும்? எல்லாம் என் தலையெழுத்தை நினைத்து சிரிக்கிறேன்'' அவள் மனசு சொன்னது. மனச்சுமைகள் பாரமாய் அழுத்த 'ஹேன்ட்பேக்கை' எடுத்துத் தோளில் போட்டாள். செருப்பை காலில் மாட்டிக்கொண்டாள். சோர்ந்துபோன தோற்றத்தில்கூட அவள் ரசிக்கும்படி எளிமை அழகில் திகழ்ந்தாள்.

நெஞ்சுக்குள்ளே அமுக்கிக்கொண்டிருந்த பூகம்பம் என்றோ ஒருநாள் வெடிக்கப்போகிறது என்று மனம் சதா அவளைப் பயமுறுத்தியது. தன் அழகை முதலாக நினைத்து வந்து வாய்த்த அருமைக்கணவன், இப்போ அதுவே அவனை ஆட்டி வைக்கும் பயங்கரம், தன் கணவனை இனம்காண முடியாமல் தவிக்கும் அவளின் நிலை.

இப்போ இருக்கிற அறிவும், சிந்திக்கிற சுதந்திர நினைப்புக்களும், அந்த பதினெட்டு இருபது வயதில் இருந்திருந்தாள்... தொலைதூரம்... மிகத்தொலைதூரம் ஓடிப்போய் தனியாய் வாழ்ந்திருக்கலாம். கோயிலடிகளிலும், சந்தையிலும், கல்யாணவீடு, செத்தவீடுகளில் கொஞ்சநாள் கதாநாயகியாய் இந்து இருந்திருப்பாள். ''அந்தத் தங்கமான மனிசனை விட்டுப்போட்டு ஓடிப்போய்விட்டாள்'' என்று மனித மனங்களின் உணர்வுகளைப்பற்றிக் கவலைப்படாத எங்கட சமுதாயம் விமர்சிக்கும் அவ்வளவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டுக்குருவி ஜோடி ஒன்று சல்லாபித்துக்கொண்டிருந்தது. கீச்சுமொழியில் தன் துணையை சீண்டிக்கொண்டிருந்தது. 'ஓ' இந்தச் சின்னப் பறவைக்குக்கூட தெரிந்திருகிறது தன்துணையை அன்பாய் வழிநடத்த. எங்கட ஆண் ஜென்மங்களுக்கு மட்டும் ஏன் புரியவில்லை.? ஒரு பொம்பளை இல்லறத்தை புனிதப்படுத்த நினைக்கிற அளவுக்கு ஏன் ஆண்கள் சிந்திப்பதில்லை.? இதுகூட அற்பத்தனமானஅடக்குமுறைதான்.

பதினெட்டு வருஷமாய் ரயில்வே தண்டவாளம் மாதிரி ஒன்றுக்கொன்று ஒட்டாமல், ஆனால் ஒரே வழியில் போய்க் கொண்டிருந்த வாழ்க்கை, 'லைப் இஸ் எ சாலஞ்ச்' என்று எதிர்நீச்சல் போடத் தெரியாத இந்து.

கண்களில் நின்று வழிந்த நீரை ஒற்றித் துடைத்தவளின் கண்களைப் பஞ்சுக் கரங்கள் வந்து பொத்தின. அவளது ஒரே பாச உறவு சரயுதான். 'சரயும்மா' உன்னை விட்டு விட்டு என்னால் எங்கும் போக முடியாது. நினைத்தால் சுதந்திரமாய் பறந்தோடி விடலாம்...ஆனா... ஆனால்... சுமந்து பெற்ற குழந்தையை விட்டுப் பிரிகிற வைராக்கியம் இல்லாத தமிழ்ப் பெண்களால் கூண்டைவிட்டுப் பறக்க முடியாது. விரும்பியோ, விரும்பாமலோ சில பறவைகள் கூண்டுக்குள் இருப்பதுதான் நியதி.

★ ★ ★

-வசந்தம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப்புறாவின்
சிறகை ஒடித்து
தமிழன் குருதி
கொஞ்சம் எடுத்து
ஒப்பந்தம் ஒன்று
எழுதிக்கொள்வோம்
வாருங்கள்

-தமிழ்ப்புதல்வன்-

5

# அடம்பன் கொடியும் புத்தாண்டு வெடியும்

காமாட்சி வீட்டைக் கழுவிக் கொண்டிருந்தாள். மூத்தவள் சுவாதி வாயில் ஏதோ பாட்டை முணுமுணுத்தபடி சமையலறைக்குள் வேலையாக இருந்தாள். இரண்டாவது பெண் அம்மாவுக்கு உதவிக்கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமலையில் இருந்து ஐந்துமைல் தொலைவில் இருந்தது. அவர்களது சின்னஞ்சிறு வீடு. ஒரு அறை, அதை யொட்டி சின்னக் குசினி, அது களிமண்ணாலானது மொத்தத்தில் சின்ன வரண்டாவும், ஒரு அறையும்தான். அந்த வீட்டிற்குரியது. குசினி எப்போது விழுவேன் என்றமாதிரி இருந்தது. அந்த சீனக்குடா கிராமத்தில் இந்திய அமைதிப் படை பெரிய பெரிய முகாம்களில் அமைதி காத்துக்கொண்டிருந்தது. மூன்று வருடமாய் அழுது திரிந்த அம்மாவை இந்த வருடம் புதுச்சட்டை தைத்துத் தரவேண்டும் என்று சின்னவள் வைகை அடம்பிடித்தாள். தன் ஒரே மகனின் இழப்பை அவ்வளவு சீக்கிரமாய் அவளால் மறக்க முடியவில்லை. பதின்மூன்று வயது வைகையின் ஆசாபாசங்களும் விருப்பு வெறுப்புகளும் காமாட்சிக்கு தெரியாததல்ல பதினைந்து வயது சுவாதியும், பதின்மூன்று வயது வைகைக்கும் ஏழ்மையிலும் கடவுள் அழகை வாரிக் கொடுத்திருந்தான். ஆனால், அந்த வயதிற்குரிய ஆசைகளை நிறைவேற்றப் பணம்தான் இல்லை. மூன்றுவேளை உணவுக்கே படாதபாடுபடும் காமாட்சி தகைநட்டு, உடுபுடவைக்கு எங்கே போவாள்?

மனித உயிருக்கு விலை குறிப்பிடும் அரசாங்கம் அதிலும் தமிழன் உயிருக்கு மதிப்பு குறைவாய்த்தான் கணித்திருந்தது. காமாட்சியின் மகன் 'செக்கிங்கில்' பிடிபட்டு அப்படியே காணாமல் போய்விட்டான், அரசாங்கம் பிடித்து காணாமல் போனால், அந்த மனிதன் திரும்பி வரவேமாட்டான் எனவே. இறப்புச்சாட்சிப் பத்திரமும் இல்லாமல் நட்ட ஈடும் இல்லாமலேயே போயிற்று. மா இடித்தல், சின்னச்சின்ன எடுபிடி வேலைகள், இப்படிக் குருவி மாதிரி சேமித்து, அதில் சாப்பாட்டிற்குப் போக மிகுதியில் சேர்த்த பணம்! யார் யாரோ பாவப்பட்டுக் கொடுத்த சின்னச்சின்ன அன்பளிப்புக்கள் இவையெல்லாம் சேர்ந்து நூற்றைம்பது ரூபாவை எட்டிப்பிடித்தது. இந்தப் பணத்தையும், புத்தாண்டையும் சுற்றியே சின்னஞ்சிறுசுகளின் எண்ணங்கள் சுற்றி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய விலைவாசி ஏற்றத்தில் நூற்றைம்பது ரூபாயில் இரண்டு பிள்ளைகளுக்கு உடுதுணி வாங்குவது குதிரைக் கொம்பு என மனம் நினைத்தது. அவள் கணவன் காலமாகிப் போனபொழுது, அவள் கழுத்தில் ஒன்றரைப்பவுண் சங்கிலி ஒன்று மட்டும் எஞ்சியது. இத்தனைவருட கஸ்டத்திலும், அவள் சங்கிலியில் கைவைக்கவில்லை. எல்லாம் இரண்டு பெண் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றின சிந்தனைகளில்தான். கல்யாணச் சந்தையிலே இந்த சங்கிலியின் பெறுமதி அற்பம்தான். ஆனால், ஒருத்தியின் கழுத்தை மறைக்கவாவது பயன்படும் என்றளவில் அதன் பெறுமதி பெரிதாகத் தெரிந்தது. அத்தோடு, வீட்டின் பெறுமதி மிக்க பொருள் அது ஒன்றுதான்.

''அம்மா போயிட்டு வாங்கோவன்'' சுவாதி அவசரப்படுத்தினாள். சின்னவள் வைகை ''அம்மா நானும் வர்றேன்'' என்று அடம் பிடித்தாள். ''நீ அக்காவோட நில்! நான் போய் வாங்கி வாறன்''. வைகையைச் சமாளித்து விட்டு காமாட்சி வீதிக்கு நடையைக் கட்டினாள்.

● ★ ●

பஸ் ஏறி சின்னக்கடைக்கு வர மணி ஒன்பதை எட்டிப் பிடித்தது. வைகைக்கும், சுவாதிக்கும் சின்னப் பூப்போட்ட சீத்தைத் துணியைப் பல கடைகள் ஏறி இறங்கி வாங்கினாள் காமாட்சி. இறுக்கிப் பிடித்து வாங்கினதால், கொஞ்சப் பணம் மிஞ்சியது. அதைக்கொண்டு கனகம் மில்லடிக்குப் போனால்...... அவன்கள் விக்கிற கொள்ளை விலையில். நினைத்துப் பார்க்கவே முடியவில்லை அவளால்...... படித்தவனுக்கு உத்தியோகம் இருக்கும். அதன்மூலம் பொருளாதார வளம் இருக்கும். கனகம் மில்லுக்கும் போகலாம். எங்கேயும் போகலாம். அத்தோடு நடுத்தர வர்க்கத்திற்கு நாட்டுப்பற்று, இனப்பற்று இன்னும் வைராக்கியமாய் வாழும் திறனும் இருக்கும். ஆனால்...ஆனால்...ஏழைக்கு... நாட்டைவிட வயிற்றுப்பசிதான் மிகப்பெரும் பிரச்சனை. ஏழையின் ஏகபோக சிந்தனையே வாழ்க்கையை எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுப்பது என்பதுதான். இதெல்லாம் காமாட்சிக்கு நன்கு தெரியும்.

அவளையறியாமல் மணிக்கூட்டுக் கோபுரத்தடிக்குக் கால்கள் நகர்ந்தன. ''தாயட்ட பாஹாய் பொல்கெடி'' ஒரு சிங்களவன் அனாயாசமாக விற்றுத்தள்ளினான். பக்கத்தில் இளநீர் குலைகள் ''என்ட மாத்தயா, என்ட'' ஒருபக்கம் மீன்கள் துண்டாடப்பட்டு தராசில் நிறுக்கப்பட்டுக்கொண்டிருந்தது. ''தாயட துணாய் அன்னாசி, ஹரி லாபாய்''.

ஓ! அந்த ஏழைமனம் - ஏன் எந்த மனித மனம் வாங்க மறுக்கும்? சனம் முட்டி மோதியபடி வாங்கிக்கொண்டிருந்தது. யாரோ விட்ட தவறு, எங்கோ விட்ட தவறு...... தமிழ் மக்களைக் குறிப்பாக ஏழைமக்களை வசியம் போட்ட மாதிரி சிங்கள மார்க்கெட்டை முற்றுகையிட வைத்தது.

மணி ஒன்பது ஐம்பத்தி ஐந்து. காமாட்சி ஒரு அன்னாசிப்பழம் வாங்கிக்கொண்டு தேங்காய்க் கடையில் இரண்டு தேங்காய்களைக் குலுக்கி எடுத்து பேக்கில்வைக்க......

அந்தச் சத்தம்! குண்டுவெடிப்பு!! இரத்தக் களறி!! இரத்த ஆறு ஓடியது! இரு இனமும் இறப்பில் ஒன்று கலக்க, எஞ்சி நின்ற சிங்களவர்கள் கையில் எப்படி கத்தி, கோடரி என்று ஆயுதம் முளைத்தது? காமாட்சி எங்கோ தூக்கி வீசப்பட்டாள். முகம் தீக்காயத்தில் தணலாய்க் கொதிப்பது தெரிந்தது. எஞ்சிய தமிழர்களை முடிந்தவரை அரிந்து கொட்டினர், அந்த வெறிபிடித்த மக்கள்! நொந்தவனை எழுப்பிவிடுகிற மனிதாபிமானம் அங்கிருக்கவில்லை. எஞ்சிய தமிழர்களை வெட்டி விழுத்துகிற அரக்கத்தனம் தலைதூக்கியது.

பெரியதொரு முகாமிட்டு இந்தியப் படையினர் 'அமைதி காத்துக் கொண்டிருந்தனர். ''ஐயா ஒருத்தனை சிங்களவன் இழுத்திட்டுப் போறான். காப்பாத்துங்கோ'' தப்பிய ஒரு உயிர் மற்றவனுக்கு உயிர்ப்பிச்சை கேட்டு இந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய ராணுவனின் கால்களைப் பிடித்தது. ஆனால், அவன் அமைதிகாக்க வந்தவன். அந்த வீரன் அமைதியாகச் சொன்னான். ''நோ ஓடர்''.

ஈனஸ்வரத்தில் முணங்கியபடி காமாட்சி இந்த வயதிலும் எழும்பி ஓடினாள். ''தெமல கேணி துவனவா!'' பளபளக்கும் கத்தியுடன் ஓடி வந்தவன் காமாட்சியின் முதுகில் குத்தினான். ''காளியாச்சி! காப்பாற்று!'' அதன் பின் அவள் அப்படியே சரிந்தாள். கழுத்தை இழுப்பது மட்டும் தெரிந்தது. ஓ! அந்த சங்கிலியை ஒரே இழுவையாக இழுத்துக்கொண்டு போனான் அவன்.

காமாட்சியின் ஆயுட்பலமோ? ஆண்டவன் சித்தமோ? இன்னமும் உயிர் இருந்தது. ஆனால் உணர்வில்லை, மயங்கிப் போனாள். தமிழ் மண்ணில் தமிழரை ஓடஓட விரட்டினர். விரட்டி விரட்டிக் கொன்றனர். ஆவேசத்தோடு எதிரியை அணுக முயற்சித்த சில தமிழ் இளைஞர்களை மட்டும் தடுப்புக்காவலில் வைத்துவிட்டனர் இந்தியப்படையினர். ஏனென்றால் சிங்களவனின் உயிரை எடுக்க யாருக்கும் அனுமதியில்லை. ஆனால் தமிழன் உயிரை நினைத்த மாத்திரத்தில் பறிக்க யாருக்கும் அனுமதி உண்டு. ஒரு இளைஞன் கண்ணில் நீர் அருவியாய் ஓடியது. ''வடக்கத்தியானே, உன்னை இனி நம்பமாட்டோம்.'' ஒரு வெள்ளை வாகனம் எங்கோ இருந்து பறந்து வந்தது. மனிதாபிமானத்திற்கு அர்த்தம் தெரிந்த வெள்ளைக்கார வைத்தியக் குழு. ஓட்டி வந்த தமிழ் டிரைவரை ஒரே இழுவையாக இழுக்க முயன்ற சிங்களக் காடையனிடமிருந்து மயிரிழையில் காப்பாற்றி, கூடவே வெட்டுப்பட்டவர்களை இழுத்துப்போட்டுக்கொண்டு, வைத்தியமனை நோக்கிப்பறந்தது அந்த வெள்ளை வாகனம்.

'லங்கா புவத்' பெரிதாக ஒப்பாரி வைத்து அழுதது. குண்டு வெடிப்பில் முப்பத்தி எட்டு சிங்களவரும், இரண்டு தமிழரும் கொல்லப்பட்டனர் என்று. காமாட்சி வைத்தியமனையில் புலம்பிக்கொண்டிருந்தாள்...... ''ஐயோ, என்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சுகளுக்கு அழகுபார்க்க வெளிக்கிட்டேனே!'' அவளின் புலம்பலை வெளிக்கொணர செய்திகள் இல்லை.

ஓ! ஒன்றை மட்டும் இந்தக் குண்டுவெடிப்பு உணர்த்தியது. 'தமிழன் என்பது ஓரினம்.' புத்தாண்டு நாளில் தீராத அவலம் நிகழ்ந்தாலும், ஏதோ ஒன்றை மக்களுக்கு உணர்த்தியது. ஏதோ ஒன்றைத் தமிழர் உணர்ந்தனர்.

அடம்பன் கொடியும்...........

----★----

(13 - 4 - 89 அன்று புத்தாண்டு தினம் திருமலையில் நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின் நிகழ்வுகள்)

-- தாகம் 4 வது ஆண்டுமலர் --



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைக் கட்டி
கரங்களைப் பிணைத்து
இளையஜீவன்கள்
அழிக்கப்படுவதும்
எரிந்தநிலையில்
சடலங்கள்-
எழுந்துநடப்பதும்
இலங்கை என்ன
சுடுகாட்டின்
மறுமதிப்பா...?

-தமிழ்ப் புதல்வன்-

# மனிதம் இன்னும் மரணிக்கவில்லை....

சாந்திக்கு காமினியைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. பயந்து, பயந்து அவனது முகமே மாறியிருந்தது. எண்பத்து ஏழுக்குப் பிறகு, திருகோணமலை டவுனுக்கை ஒரு சிங்களப் பெடியனை, அதுவும் இருபத்தியொரு வயதுப் பெடியனை வைத்துப் பாதுகாப்பதிலுள்ள சிரமம் அவளுக்குத் தெரியாதா. சுந்தர் கொண்டு வந்து கொடுத்த இங்லீஸ் படத்தை வீடியோவில் பார்த்துக் கொண்டிருந்தான் காமினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்து மூணுக்கு முதல் சாந்திவிடும் இந்த காமினிப் பொடியனின் குடும்பமும் இதே டவனுக்கை பக்கத்து பக்கத்துமாக சந்தோஷமாக வாழ்ந்தவைதான். புதுசா கல்யாணம் நடந்து சுந்தரும் சாந்தியும் குடிவந்தார்கள். அப்பொழுது பன்னிரண்டு வயதுப் பொடியனாய், சாந்தியை ''அக்கே, அக்கே'' என்று உறவு கொண்டாடி இருவர் மனதிலும் இடம் பிடித்தான். ''காமினி ஒடிவா இந்தா உன்ர பங்கு'' இப்படி காமினியை அடிக்கடி கூப்பிடுவாள் சாந்தி. அந்த வீட்டில் ஒரு-பங்கு அவனுக்கு எப்பொழுதும் இருக்கும். அவனது தந்தை சில்வாவும், தாய் சந்திராவதியும் சொல்வார்கள் ''இவன் உங்கட பிள்ளைதானே. அவனுக்கு நீங்கள்தான் தேவை. எங்களை நினைக்கவும் மாட்டான்.'' என்று.

கொடுக்கல், வாங்கல், அரசியல் குடும்ப விவகாரம் இப்படி எல்லா விசயத்திலயும் ஒரு பரஸ்பர நல்லுணர்வு, அந்நியோன்னியம். மனுஷத் தன்மை மனுஷ நிலையிலிருந்து தடம் புரளாதவரை எங்கயும், எப்பவும் மனுஷனாய் வாழலாம்தானே.? எண்பத்துமூன்று ஜூலையில், யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக கண்ணி வெடிக்கை அகப்பட்டு, பதின் மூன்று இலங்கை ராணுவத்தினர் இறந்த போதுதான், மனிதனையும் மனித மிருகங்களையும் இனம் காண முடிந்தது. ''அட ராணுவமும் பெடியளும் தானே அடிபட்டவையள் சும்மா கிடக்கிற சனத்தை தூண்டி விடப்படாது என்ற நல்ல நோக்கம் ஜயவர்தனா அரசிடம் இருக்கவில்லை. துவேஷ தூபம் போட்டு சிங்கள காடையர்களை நாடு முழுவதும் அவிழ்த்து விட்டு 'புதினம்' பார்த்துக்கொண்டிருந்தது அந்த அரசாங்கம். ஐம்பத்தி ஆறிலும், எழுபத்து ஏழுகளில் அனுபவித்ததைவிடவும் படு உக்கிரமாக எண்பத்து மூன்றை அனுபவித்துக் கொண்டிருந்தனர் தமிழர்.

'எங்கே தேர் திருவிழா என்றாலும் 'தீர்த்தம்' திருமலையில் தான்' என்று யாரோ சொன்னது ஞாபகத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது சுந்தருக்கு. இரத்த ஆறு கங்கையில் கலந்து கட லோடு சங்கமிப்பதாக அந்த வசனம் அர்த்தம் சொன்னது திருமலை இரத்தத்தில் குளித்து நெருப்பில் குளிர்காய்ந்தது.

பிஞ்சுகள், காய்கள், மலர்கள் எல்லாமே தீக்குள் அகப் பட்டுக் கருகின, அந்த நிலையிலும் சில்வா சில்வாவாகவே நடந்து கொண்டார். அவரது மனசு இறந்துபோன 'மனி தர்களுக்காக இரக்கப்பட்டது. இந்த ''நாசமாய்ப்போன அரசாங்கத்தால் இதை கட்டுப்படுத்த முடியாவிட்டால் பிற கேன் ஜனநாயகம்?'' விசனப்பட்டார் சில்வா.

''சும்மா இருந்தா இவ்வளவும் நடக்குமே. ஆமியில கையை வச்சா விடுவாங்களா.'' சந்திராவதியால் சில்வா வின் பேச்சை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

''ஆமிக்காரன் சும்மாவே இருக்கிறான். பெடியன்க ளோட மட்டுமில்லை சனத்தோடயும் மோதுறாங்கள். உனக்கு இதுகள் விளங்காது. சும்மாயிரு'' சில்வா முற்றுப் புள்ளி வைத்தார்.

ஆனால் முகத்தை 'உர்' என வைத்தபடி சமைய லறைக்குள் புகுந்தாள் சந்திராவதி.

சிங்களத்தில் உரையாடினாலும் சாந்திக்கும், சுந்தருக் கும் நன்றாகவே புரிந்த படியால் சாந்தி பெரிதும் பயப் பட்டாள்.

''இஞ்சருங்கப்பா எனக்கு சில்வா அண்ணனைப் பற்றிப் பயமில்லை. அந்த மனுசன் நல்லவர். சந்திராவதி ஏதும் காடையருக்கு சொல்லிப்போட்டால்...... இனியும் இந்த சிங்களத்தியை நம்ப முடியாது. நாங்க ஊரோட ஒத்து அகதி முகாமுக்கு போவோம்.''

''சில்வா ஏதும் நினைக்குதோ''......சுந்தர் தயங்கி னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் சொல்லுறன் அவருக்கு . . . சில்வா அண்ணை! சில்வா அண்ணை!! நானும் இவரும் அகதி முகாமுக்கு போகப் போறம்.''

''ஏன் தங்கச்சி! எங்களை மீறி எவன் வாறது? பயப் படாதீங்க!''

''அதில்ல . . . நாங்களிருந்தால் உங்களுக்கும் ஆபத்து. நிலைமை சரியானவுடன் வாறம்.'' அவள் அகதி முகா மிற்கு போவதில் உறுதியாய் இருந்தாள்.

சில்வ மறுக்கவில்லை. வேதனையோடு அவளைப் பார்த் தார். சில்வாவே அகதி முகாமில் கூட்டிப்போய் ஒப்படைத் தார். அவர் விழிகள் லேசாக கலங்கியிருந்தன.

'தமிழ் ஊரில் தமிழர் அகதிகள்' மனம் கனக்க திரும் பினார் சில்வா.

கொஞ்சம் வசதியாய் வாழ்ந்து பழக்கப்பட்ட சாந்தி யும் சுந்தரும் சாப்பாட்டிற்கே சிரமப் பட்டனர். 'ஈழத் தில் தமிழனாய் பிறந்தால் இதுதான் தண்டனையோ மனசு ஓலமிட்டது. உடம்பு பிசுபிசுத்தது. குளித்து கன நாள். உயிர் பாதுகாப்பிற்கு மனிதன் ஒரு கூட்டிற்குள் அகப்பட் டாலும், மனிதன் உயிர் வாழமட்டும் அன்றாட கடமை கள் உண்டல்லவா? . . . தூரத்தில் சில்வா வருவது தெரிந் தது. இந்த ஊரடங்கு நிலையிலும் அவர் உணவு, தேநீர், கோப்பி இப்படி ஏதாவது வரும்போது கொண்டுவர தவறுவ தில்லை. ''ஏன் அண்ணே நாங்கள் சுகமாகத்தானே இருக் கிறம். இந்தப் பயங்கரத்துக்கை ஏன் ஓடி, ஓடி வாறியள்.'' சாந்திதான் கேட்டாள். ''ஓம் சில்வா நிலமை நல்லதில்லை. எங்களைப் பார்க்கவாறது தெரிந்தால், உங்கட ஆக்களால உங்களுக்கு ஆபத்து'' சுந்தரும் சொல்லிப்பார்த்தான். ''ஒரு மனுசன்ற கஸ்டத்தில இன்னொரு மனுஷன் செய்யிற சாதாரண கடமையைத்தான் நான் செய்யிறன். இதற்காக மனித மிருகங்கள் என்னை என்ன செய்தாலும் சரி'' அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில் உண்மையும், உறுதியும் தெரிந்தது. நல்ல மனிதர்கள் எங்குமிருக்கிறார்கள். பிறப்பில் சிங்களவனாய் இருப்பினும் செயலில் 'மனிதனாய்' தெரிந்த சில்வாவை சுந்தர் சாந்தியால் 'கடவுளாக' நினைக்கத் தோன்றியது.

அந்த வேதனையின் சுவடுகள் அழியுமுன்னரே அந்த மனிதனுக்கு கண்டிக்கு மாற்றல் வந்தது. சாந்தி அழுதே விட்டாள். சந்ராவதிகூட தன்மெல்லிய இன வெறியை மறந்து போனாள். காமினி மிகவும் கவலையில் ஆழ்ந்திருந்தான்.

''அண்ணை உங்களை எங்கட சீவியம் உள்ளவரை மறக்க மாட்டோம். உங்கள் குடும்பத்துக்கு என்ன உதவி தேவையென்றாலும் நிச்சயம் செய்வோம்.''

கலங்கிய கண்களோடு காமினிப் பெடியனின் தலையை தடவி விடைகொடுத்த போது அவனும் கலங்கினான்.

★ ● ★

அதன்பின்......ஐந்தாறு வருடங்கள் ஓடிய வேகம். இந்த இடைவெளியில் அரசியல் மாற்றங்கள், தெற்குப் பிரச்சனைகள் இவைகள் பரஸ்பரம் கடிதங்களில் பரிமாறப் பட்டன. அரசு செய்யும் கொடூரங்கள், வடக்கு. கிழக்கில் ஆயுதம் ஏந்திய இளைஞர்களின் நியாயமான கோரிக்கைகள் இவையெல்லாம் கடிதங்களில் விபரமாய் எழுதினார். காமினி யூனிவசிட்டியில் 'வரலாற்றுத்துறை' மாணவனாய் சேர்ந்திருப்பது போன்ற நல்ல விடயங்களை எழுத சில்வா மறக்கவில்லை. காமினியின் யூனிவசிட்டி நுழைவின் பின் கடிதமில்லை...... ஆனால் தந்தி வந்தது.

''சுந்தர் கம் இமீடியட்லி'' - சில்வா என்றிருந்தது தந்தியில். ''சில்வாவின் குடும்பத்துக்கு ஏதோ ஆபத்து இல்லாவிடின் இப்படி தந்தி வராது. எனவே உடனே புறப்படுவோம்''. இருவர் மனமும் அவசரப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களைக் கண்டதும் சில்வாவும் சந்திராவதியும் விசித்து விசித்து அழுதனர்.

''பிளீஸ் சில்வா என்னென்று சொல்லுங்கோ!'' சுந்தர் அவசரப் பட்டான். ''தினமும் ஆமி ரவுண்டப்! எங்கட காமினியையும் தேடுகினம். ஜே. வி. பியில தொடர்பாம் என்று!...... இப்ப உங்களை கடவுளா நினைச்சி கேக்கிறம். உங்கட பிள்ளையா நினைச்சி அவனைக் கூட்டிப் போங்கோ.''

சில்வாவின் கரங்களை ஆதரவாய் பற்றினான் சுந்தர்.

நீங்க சொன்னாலும், சொல்லா விட்டாலும் அவன் எங்கட பிள்ளை மாதிரித்தான். என்ர பிள்ளை என்று கூட்டிப்போகிறேன். இப்ப காமினி எங்கே?''

''இங்க இருக்கிற பிள்ளையார் கோயில் ஐயர் வீட்டில விட்டிருக்கிறம்''. ''சரி! சரி!! நான் பார்த்து ஐயரிட்ட சொல்லிட்டு கூட்டிப்போறன். நீங்கள் இரண்டுபேரும் வந்து ஒருக்கா காமினியை பார்த்து விட்டுப் போங்கோ. இனி நிற்க நேரமில்லை. இரண்டுமணி பஸ்சில் நாங்க மூன்று பேரும் போறம். அங்கயும் இப்ப தமிழ் பெடியலுக்கும் சிங்களவருக்கும் இடையிடையே பிரச்சினைதான். இனி சில்வா......இலங்கை என்று ஒரு நாடு உலகப்படத்திலிருந்து அழியும்வரை இந்தப் பூசல்களும் தொடரும். ஏனென்றால் இதுவரை ஆண்ட இனம் விதைத்ததெல்லாம் துவேஷ விதைகள்தான். வளரும் சமுதாயத்தை ஆண்டவன் தான் காப்பாற்றவேண்டும்.''......

வீரக்தியின் ஓரத்தில் நின்ற காமினியோடு சுந்தரும் சாந்தியும் திருமலை பஸ்ஸில் புறப்பட்டனர்.

''சந்ரா! உன்ர ஆமிக்காக எண்பத்து மூன்றில் பெரிசாய் அழுதாய். உன்ர பிள்ளையை அதே ஆமிதான் தேடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியுது. ராணுவத்தின் இதயம் அவன் கையில் இருக்கும் இரும்பு துவக்குமாதிரிதான். உன்ர பிள்ளை இப்ப படுகிற பாட்டை, தமிழ் பெடியள் வருஷக் கணக்கா அனுபவிச் சவை. மனுசத்தன்மையிலிருந்து விலகாத மனிதர்களின் உதவியைப் பார். இப்பவாவது புரிந்துகொள்!''

மௌனமாக தலை குனிந்தாள் சந்திராவதி.

★ ● ★

நூலகம் -பார்வை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தமிழனைக்கொல்வோம்
தமிழனைக்கொல்வோம்''
தாரகமந்திரம்
இதுவெனக்சொல்வோம்
வடக்கோடு கிழக்கை
சேர்த்தே புதைத்து
வல்லரசின் வேலையை
நாமும் செய்வோம்.

-தமிழ்ப் புதல்வன்-

# வேதனையின் சுவடுகள்....

7

கடல் பெரிதாக இரைந்து கொண்டிருந்தது. இருள் மெல்ல மெல்ல பூமியைத் தன்வசமாக்கிக் கொண்டிருந்தது. கடல் சற்று வேகமாகத் தன் அலைகளைக் கரைக்குக் கொண்டு வந்து தள்ளிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைமாதத்து பணிக்குளிர் உடலை வாட்டி எடுத்தது. அந்த மிதமான குளிருக்குப் பாயைப் போட்டுப் படுத்தால் இதமான நித்திரை வரும் என்று ராசனுக்குத் தெரியும். அவனது வள்ளம் நடுக்கடலுக்குப்போய்விட்டது.

ராசனுக்கு அவன் மனைவியும், மகள் வித்தியாவும், தம்பியும்தான் எஞ்சியுள்ள சொத்து. சிறியதொரு அறை அதையொட்டி விறாந்தை, ஓலைகளால் வேயப்பட்ட குசினி, இவைதான் அவனது அசையா சொத்துக்கள். வீட்டுக்கொரு காவல் நாய், கறுப்பையா, ராசனுக்கு வயது என்னவோ முப்பதுதான். அனால் அவன் வாழ்ந்த காலகட்டத்தில் முதலாம், இரண்டாம் உலக யுத்த காலத்தில் மனிதர்களுக்குக் கிடைக்காத அனுபவங்கள் அவனுக்குக் கிடைத்தது. அந்த விதத்தில் இந்த உலகில் இலங்கைத் தமிழராய்ப் பிறப்பதற்கு மாதவம் செய்திருக்கவேண்டும். வேறு யாருக்கும் இவ்வித புத்தம் புது அனுபவங்கள் கிடைக்கவே கிடைக்காது. ஆமாம், ராசனுக்கு யமனைக்கொண்டு வந்து முன்னால் நிற்பாட்டினாலும் பயம் கிடையாது. அவன் பல யமன்களைக்கண்டு சொற்ப வினாடி மனமாற்றங்களினால் பாசக் கயிற்றில் இழுபட்டுப்போகாமல் மீளவும் பூமியில் வாழ்பவன்.

எண்பத்துமூன்றுகளில் அவன்பட்ட அனுபவங்களை மற்றவர்களிடம் சொல்லி முடியவில்லை. அதற்குள் புதுப்புது அனுபவங்கள். ''இத்தனை சோதனைகளையும் கடந்து அபிராமியைக் கைப்பிடித்து, வித்தியாவுக்கும் தகப்பனாகிவிட்டான். அதற்குள் அரசியலிலும் ஏகப்பட்ட மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. இலங்கை இராணுவத்தாரின் பிடியில் நின்று விடுபட்ட வடக்கு கிழக்கு மாகாணங்கள் புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் இந்திய இராணுவத்தினர் பிடியில் இருந்தன. ஊரடங்குச் சட்டம் எப்பவும்போல் தொடர்ந்துகொண்டு இருந்தது. ராசன் எல்லாவற்றையும் இழந்து. உடுத்த உடைக்கு மாற்றுடை கிடைக்காத நிலையிலும், அவன் கலங்கவில்லை. நெஞ்சில் உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. மீன்பிடித்தொழில் அவனது பரம்பரைத் தொழிலாய் இருந்தது தோனியில் கடல் செல்வங்களை அள்ளிப் போட்டுக்கொண்டு களைப்பை உதறி எறிந்துவிட்டு புது உற்சாகத்தோடு வீடு வரும் ராசனை வரவேற்க, அபிராமி விடிகாலையிலேயே விழித்தெழுந்து விடுவாள். ஒவ்வொரு நாள் மாலையிலும் அபிராமி படும்பாடு. கணவனை வழி அனுப்பிவைத்துவிட்டுத் தனிமையில் தவித்துப்போவாள். அந்தக் குடும்பத்தில் பணத்திற்குப் பஞ்சம் வந்தாலும், நல் இதயங்களின் பாச உறவுகளுக்கு இதுவரை பஞ்சம் ஏற்பட்டதில்லை.

அன்று மணி மாலை நான்கு இருக்கும். ராசன் பாயைப் போட்டுப் படுத்திருந்தான். நினைவுகள் ஏனோ கடந்த காலத்திற்குத் திரும்பியது... எண்பத்துமூன்றில், ராசன் மூன்றாம் கட்டைக்குப் போறவழியில் அகப்பட்டுக்கொண்ட நேரம், கனவிலும் நினைக்கவில்லை, திரும்பவும் உயிர்வாழ முடியும் என்று, நெற்றியிலே பட்டைத்திருநீரும், அடுத்து நடப்பதை முன்னரே சொல்லிவிடும். தெய்வீகத்தன்மை பொருந்திய செட்டியாரை அப்போழுதுதான் நட்டநடு வீதியில் வெட்டிச் சரித்து விட்டார்கள், எங்கள் அரக்கர் வழித் தோன்றல்கள் சிலர். அரைவாசி வழிக்குப் போயாச்சுது, இனி சான் என்ன முழம் என்ன? அங்கால போனால் சிறிமாபுரம், இஞ்சால வந்தால் திருமலைச் சுடலை, அது அந்த நேரம் தமிழருக்குக் கொலைக்களமாக விளங்கியது. குறுக்கால பாய்ந்தால் ரெயில்வே ஸ்டேஸன், கத்தி கோடாலியுடன் ஆயத்தமாக இருப்பது தெரிந்ததே.

எந்தப் பக்கம் போனாலும் யமன். கடைசி ஆசையாகக் காலமாகிப்போன அம்மா, அப்பாவை நினைத்துக்கொண்டான். இதுவரை வழிநடத்திய பத்திர காளி அம்மானை நினைத்து வணங்கினான். முன்னேற முடியாமல் கால்கள் தயங்கின. ''அட மென்ன தெமல பல்லக் எனவா'' என்ற குரலைத் தொடர்ந்து அவன் மேல் விழுந்த சில வெட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தொடர்ந்து கீழே சரிந்தான் ராசன். அதற்குப் பிறகு அரைகுறை உயிருடன் யாரோ, ஒரு எ. எஸ். பி. கொஞ்சம் மனிதாபிமானத்துடன், வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு போனான். மூன்று மாதங்கள் சிகிச்சை பெற்றான் ராசன். அந்த சிகிச்சை வாட்டுக்குப் பக்கத்தில்தான் சவச்சாலையில் உயிரடங்கிப்போன உடல்கள் அடுக்கப்பட்டிருக்கும். சில வேளை ஒரு வித துர்நாற்றம் அடிக்கும். உறவினர் வந்து போக முடியாமையினாலும் சவச்சாலைக்கு எடுத்துச் செல்ல வீதிகளில் பாதுகாப்பு இன்மையிலும் மனிதச் சடலங்கள் அவலப்பட்டுக்கொண்டிருந்தன.

எல்லாவற்றையும் கண்டு அனுபவித்து விட்டுத் தன்னை அன்புடன் பராமரித்த வைத்தியசாலை உடன் பிறப்புகளுக்கு நன்றி கூறி விடைபெற்ற பொழுது மறு பிறப்பெடுத்த நினைப்புத்தான் ராசனுக்கு. அந்த மூன்றுமாத இடைவெளிக்குள் கத்தி, கோடாரி, இரும்புப் பொல்லு, டயர், பெற்றோல் இவற்றின் மதிப்பு குறைந்துபோய் இருந்தது. வெறி அடங்கிப்போன நிலை. நிலாவெளி பஸ்ஸில் போய் அமர்ந்தான் ராசன். பொலிஸ் காவலோடு பஸ் புறப்பட்டது. மடத்தடியால் திரும்பியவன், விஸ்ணு கோயிலைப் பார்த்தான். அங்கே காத்தல் கடவுளும், நியாயமான தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார் எதிரே சாத்திரக் கணிப்பின் படி வேறு வீட்டிற்குப் போகாவிட்டாலும், தன் ஆலயத்தில் இருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டிருந்தார் சனிஸ்வர பகவான். தெய்வங்களுக்கே இந்த நிலைமை என்றால் மனிதர்களுக்கு...? அந்த ஓநாய்களுக்கு எந்த நேரம் இறைச்சி தேவைப்படுதோ...? அதுக்கு முதல் நிலாவெளிக்குப் போய் சேர்ந்திடவேண்டும். உள்மனசு அவசரப்பட்டது.

''இஞ்சாருங்கோ, உடம்புக்கு ஏலாதே, அப்படியென்டால் கடைக்குப் போகாம விடுறது'' அபிராமி ஆதங்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடன் கேட்டாள். ''சே, இல்லை அபிராமி, சும்மா பஞ்சித்தனம். இடையிலே எண்பத்திமூன்று ஞாபகம் வந்திட்டுது.

''ஏன் 'நடந்ததை நினைத்து கவலைபடுறியள்? இப்ப நாங்க சந்தோஷமாத்தானே இருக்கிறம்?''

''யார் இல்லையென்டது அபிராமி? மணி அஞ்சரையாகுது. வெளிக்கிடுறன் என்ன?'' ''சுடுதண்ணிப் போத்தலில கோப்பியும் இருக்குது, சாப்பாடும் கட்டி வைச்சிருக்கிறன் பசி வேற வாட்டுது. இந்த மப்டரைத் தலையில் கட்டிக் கொள்ளுங்கோ'', அப்படிச் சொல்லும்பொழுதே அவளது விழிகள் கலங்கியது. பனியும், மழையும் பார்க்காமல், நித்திரையில்லாமல் ராசன் உழைப்பது அவளுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது.

அவன் கடலுக்குப் போய்விட்டான். அவனது உத்தியோகத்திற்கு அவனே உயரதிகாரி. ஆனால் வருஷக் கணக்காய் ஊரடங்குச் சட்டத்திற்கு ஏற்பப் பழக்கப்பட்டிருந்ததால், நேரத்துக்குப் போகப் பழகியிருந்தான். மாலையில் பிரியும் நேரம், உணர்ச்சிக் கொந்தளிப்புக்களின் விளைவால், வாய் வார்த்தைகளின்றி, கடைசி நிமிடத்தில் கை காட்டி விடைபெறுவான் ராசன். இன்றும் அப்படித்தான். ஆனால், மனசு துணுக்குற்றது. ராசனின் உள்மனசு ஏதோ ஒரு தீமை நடக்கப் போவதை விளக்கிக் கொண்டிருந்தது. ராசன் போனதை விழிகள் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தை வித்யாகூட அப்பாவுக்குக் கைகாட்டிக்கொண்டிருந்தாள். கறுப்பையா வாலை ஆட்டிக்கொண்டு கடற்கரைக்குப் புறப்பட்டது. ''அண்ணி என்ன யோசிக்கிறிங்க?'' வேணு வந்து கேட்கவும் தன்னிலையடைந்தாள் அபிராமி. ''இல்லையடா தம்பி. இவர் பகலிலையும் நித்திரை கொள்ளுறதில்லை. இரவெல்லாம் கடலுக்கு. என்னாலதான் இவருக்கு இத்தனை கஸ்டம்.'' ''என்ன அண்ணீ ஆம்பிளையன்டா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கவேண்டும். அது புருஷ லட்சணம். எனக்கு ஒரு சின்ன வேலை கிடைக்கும்போலிருக்கு அதுக்குப் பிறகு அண்ண கடலுக்குப் போகத் தேவையில்லை வளவுக்க பயிர் பச்சை செய்யட்டும்.'' அவனது சிறுபிள்ளைத்தனமான கதையைக் கேட்டு விரக்தியாகச் சிரித்தாள் அபிராமி.

* ● *

விடிகாலை நான்கு மணி குளிருக்க வெளியில் வரக் கஸ்டமாயிருந்தது. சுருண்டு படுத்திருந்தாள் அபிராமி. மனமெல்லாம் ராசனையே நினைத்துக்கொண்டிருந்தது. நான் சுகமாகப் படுத்திருக்கிறன். என்ற ராசா இந்தப் பனிக் குளிருக்க கடலில் போராடிக்கொண்டிருப்பார். இப்படி நினைத்ததுமே விழிகள் கலங்கி தலையணையை நனைத்தது. இரண்டு மூன்று துவக்குச் சூட்டுத் சத்தம். துடித்து எழும்பினாள் அபிராமி. ''தம்பி, தம்பி, வேணு! துவக்குச் சத்தம் கேட்குதா?''

''அண்ணி வாங்கோ கதவைத் திறந்து பார்ப்பம்'', அண்ணி பின் தொடர வெளியே வந்தான் வேணு. வெளியே வந்தவன் முற்றத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்த ராசனையும் இன்னும் இருவரையும் கண்டான். முற்றத்தில் மீன்கள் சிதறிக் கிடந்தன. அவளது அலறல் சூழலையே ஆக்கிரமித்தது. அருகில் நின்ற இந்திய இராணுவ வீரர்கள் திகைத்து நின்றனர்.

''நாசமாப் போவாரே, என்ர ராசாவை என்னடா செய்தீங்க? அழிஞ்சி போவாரே''. கத்தியபடி ஓடிச்சென்று ராசனைத் தூக்க முனைந்தாள்.

''என்ர ராசா, இந்தக் கண்கெட்டுப்போவார் சுட்டுப் போட்டான்களே'' தலையிலடித்துக்கொண்டு கதறினாள்.

ராசன் முணங்குவது கேட்டது. உயிர் இருப்பது தெரிந்தது. இரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. இந்திய இராணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தினர் அவசரமாக ராசனைப் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

உடனடியாகச் சத்திர சிகிச்சை பலமணி நேரமாகத் தொடர்ந்தது. வெளியே அபிராமியும். குழந்தை வித்தியாவும், வேணுவும் காத்திருந்தார்கள். அபிராமி சத்திர சிகிச்சை நிலையத்தில் இருந்து வெளியேவரும் ஒவ்வொருவர் முகத்தைப் பார்த்து அழுது அழுது கேட்டாள். ''என்ர அவர் எப்படியிருக்கார்? உயிருக்கு ஒன்றுமில்லையே'', வழமையாக ஆஸ்பத்திரி ஊழியர்கள் சொல்லும் 'பயப்படத் தேவையில்லை' பதில்கள் தான் மீண்டும் மீண்டும் வந்தது.

இந்திய இராணுவத்தினர் இரத்தம் கொடுக்க முன் வந்தனர். ''என்ர அண்ணேக்கு நான் குடுப்பன் இரத்தம்'' அவசரமாக முன்வந்தான் வேணு. ''எங்களை சுடவும் வேண்டாம், எங்களுக்கு உங்கட இரத்தமும் வேண்டாம், நாங்களெல்லாம் ஏமாந்தது போதும்'' மனதிற்குள் நறுவினான் வேணு. எல்லாம் நல்லபடியாக ராசனின் உயிர் காப்பாற்றப்பட்டது. ஆனால்... அவனது இடுப்புக்குக் கீழே நிரந்தர ஊனம். உண்மையை ராசன் அறிந்த போது குழந்தையைப்போல் அழுதான். ''என்ர ராசா, என்ர கையும், காலும் இருக்குமட்டும் பிச்சை எடுத்தாவது உங்களைக் காப்பாற்றுவேன்''. அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு அபிராமியும் கூடவே அழுதாள். வேணு மௌனமாக அழுதுகொண்டிருந்தான்.

''புலியென்று சந்தேகப்பட்டு இந்திய ராணுவம் கடலுக்குப் போய்வந்த ராசனை சுட்டு அவன் ஆஸ்பத்திரியிலயாம்''. இது அதிகாலையில் ஊரில் பரவிய செய்திகளின் சாரம்.

''இலங்கை இராணுவத்திற்கும், இவர்களுக்கும் என்ன வித்தியாசம்......? இவர்கள் எங்களைக் காப்பாற்ற வந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களா? இல்லை பனையால் விழுந்தவனை ஏறி மிதிக்க வந்தார்களா?'' அபிராமியைப் பொறுத்த மட்டில் இந்திய இராணுவத்தின் மேலிருந்த நல்லெண்ணம் மெதுவாக இறங்கி சந்தேகச் சகதிக்குள் மூழ்கிக் கொண்டிருந்தது. அவர்கள் பலரது வாழ்க்கையில் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்... இப்பொழுது அபிராமி எதிர் காலத்தை நினைத்துக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறாள் கூடவே மேகமும் அவளோடு சேர்ந்து அழுகிறது.

★ ● ★

-கோணைத்தென்றல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி!
வா
இந்த சமுதாயத்தின்
கட்டுமானங்களை
உடைத்தெறிவோம்.!
ஆண் ஆதிக்க
சமூகத்தின்
சிதலக் கட்டிடங்களை
தகர்த்தெறிவோம்!

-தமிழ்ப் புதல்வன்-

8

# பலவீனங்கள்

பூரண சந்திரன் வானத்தில் ஊர்வலம் வந்துகொண்டிருந்தான். அந்த ஒளி பிரவாகத்தில் கதிர்கள் கடலின் மேற்பரப்பைத் தங்கத் துகள்களாக மின்னச் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில காலமாக அமைதியுடன் காணப்பட்ட கோணே சர் ஆலயத்தில் மணிகள் குலுங்கியபடி, பூஜை சற்று விசே ஷமாயிருந்தது. மாதுமை கடற்கரை மணலில் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். அவளது வேதனை தோய்ந்த முகம் பிரச்சினைக்கு முடிவு தெரியாத குழப்பத்தில் ஆழ்ந் திருந்தது. பக்கத்தில் அவளது கணவன் விக்ரமன் சற்றே கடுகடுப்புடன் அமர்ந்திருந்தான்.

விக்ரமன் மாதுமையின் திருமணம் நடந்து நேற்றுடன் ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. ஊரும், உறவினரும் எதிர்க்க ஐந்தாண்டு காதலுக்கு இவர்கள் முற்றுப்புள்ளி வைத்து ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது. ஐந்து ஆண்டு பழக் கத்தில் விக்ரமனுக்கு மாதுமையைப் புரிந்துகொள்ள முடி யாமல் போய்விட்டதா? அல்லது மாதுமையால் தன் வருங் காலக் கணவனை விளங்கிக்கொள்ள முடியவில்லையா? என்பதுதான் இருவரது கேள்வியும். கடற்கரைக்குப் பின்னால் தான் இவர்கள் வீடு அமைந்திருந்தது. என்றாலும் ஏழு மணியாகியும் எழும்பிச் செல்ல மனமின்றி இருவரும் அமர்ந் திருந்தனர்.

''மாது! முடிவாச் சொல்லுறன் நீ வேலைக்குப் போறது எனக்குப் பிடிக்கவில்லை'' சற்று இடைவெளி கொடுத்தான் விக்ரமன். அவளது கண்ணில் முட்டிக்கொண்டுவந்த கண் ணீர் மணலில் தெறித்தது. அவளிடமிருந்து எந்தவிதப் பதிலும் வரவில்லை.

மாதுமை அரசாங்க நிறுவனமொன்றில் டைப்பிஸ்டாக வேலை. அன்று வேலைவிட்டு வரும்பொழுது எங்கோ பார்த்தபடி வந்த விக்ரமன்; அவளது தோளில் மோதிவிட் டான். அடுத்த நிமிடம் மாதுமையின் விழிகள் அனல் கக் கின. ''உமக்கு கண் இல்லையே? ''மனஸ் தெரியாத ஜென்மங்கள்'' சில கண அதிர்ச்சிக்குப் பின் ''சொறி மேடம்'' அவனது வாய் மெல்ல உதிர்த்தது. ''வேணு மென்று செய்துவிட்டு சொறி வேறு...'' முறைத்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று விட்டாள் அவள். அந்தக் கண்ணகியின் காரக்டரை நன்றாக விளங்கிக்கொண்டான் விக்ரமன். ''பெரிய கற்புக் கரசி, நான் வேண்றுமென்றே மோதினனான்?'' தனக்குள் முணுமுணுத்தான் விக்ரமன். ஆனால் அன்றிரவு உறக்கம் வரவில்லை. அவளின் நினைவு மீண்டும் மீண்டும் வந்தது.

அவளது அழகிய விழிகளில் தான் எத்தனை கோப உணர்வு? கோபத்தில் கூட இவள் எவ்வளவு அழகாயிருக் கிறாள்? அவளது கன்னங்களில் திடீரென சிவப்பேறிய வேகம்? அவளது ஆராய்ச்சியின் முடிவு பெண் ஒரு உணர்சி யின் கலவை என்பது தான். அன்பையும், அரவணைப்பை யும், கண்டிப்பையும் இப்படி எல்லாவற்றையும் தர ஒரு பெண்ணால்தான், முடியும் ஒவ்வொரு ஆனின் வாழ்க்கை யிலும் பெண்ணின் பங்களிப்பு நிச்சயம் இருக்கும். என் வாழ்க்கையில் பங்கெடுப்பவளாக இவள் ஏன் இருக்கக் கூடாது? அவன் மனம் தீவிர சிந்தனையில் ஈடுபட்டது. இவளை நெருங்குவது அவ்வளவு இலகுவான விஷயம் இல்லை, என்பது விக்ரமனுக்கு நன்றாகத் தெரியும். மிகச் சிறந்த அழகி என்று அவளை வர்ணிக்க முடியாவிட்டா லும், பார்த்த மாத்திரத்தில் கவரும் சக்தி அவளிடமிருந் தது. இரவின் தனிமையில் அவன் உணர்வுகள் மானசீக மாய் அவளிடம் உறவாடின.

நேற்றைய தினம் எந்தத் தபால் ஆபீஸ் சந்தியில் எதிர்பாரா சந்திப்பு ஏற்பட்டதோ, அதே சந்தியில் அவ ளுக்காகக் காலை சரியாக ஏழு மணிக்குக் காத்திருந்தான் விக்ரமன். தூரத்தில் அவள் வருவது நன்றாகத் தெரிந்தது. மஞ்சள் நிற ஜோர்ஜட் புடவை, அவளுடலைத் தழுவி யிருந்தது. இரு இமைகளும் பொருந்துமிடத்தில் சிவப்பு சாந்துப் பொட்டு இட்டிருந்தாள். நீளமான தலைமயிர் ஒற்றைப் பின்னலாய் அவள் முதுகில் தவழ்ந்துகொண்டி ருந்தது. விக்ரமன் கடைக்கண்ணால் அவளைப் பார்த்தான் நெஞ்சு படபடவென அடித்தது. ''சாம்பல் தீவு'' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்டைத் தாங்கிய பஸ் அவசரமாக வந்து நின்றது. அவள் பஸ்ஸில் ஏற அவசரப்பட்டாள். இதை அறிந்த விக்ரமன் ஓடிச்சென்று ஒரு சீட்டில் அமர்ந்துகொண்டான். அவள் நெருக்கத்தில் நசிவதை அவனால் சகிக்கமுடியாமல் இருந்தது.

''மேடம், இதில இருங்கோ'' அடக்கமாக எழுந்து அவளுக்கு இடம் கொடுத்தான். அந்தச் சில கணங்களில் அவள் சொல்லிய ''தாங்ஸ்'' குளிர்ந்த பார்வை ஆயுளுக்கும் இது போதும் என்ற நிறைவு ஏற்பட்டது. அவள் பக்கத்தில் மிகமிகக் கவனமாக நின்றான். திடீரென பிரேக் பிடித்ததால், பஸ்ஸில் ஏற்பட்ட குலுக்கல் காரணமாக அவள்மேல் ஒரு சின்ன மோதல், அதன் பிரதிபலனை எண்ணிக் கலங்கிய விக்ரமனின் மனம் ''இட்ஸ் ஓகே'' அவளது இனிய குரலின் இன்ப அதிர்ச்சி மனதைக் குதூகலிக்கச் செய்தது.

மொத்தத்தில் அன்றைய அனுபவத்தை நினைச்சுச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. ஒரு பெண்ணுக்காகத் தேவையில்லாத பஸ் பிரயாணம் அதில் இப்படி நெருக்குப் பட்டு எங்கே போகிறோம் என்று தெரியாத அவஸ்தை. இப்படி நான் மட்டுமா பையித்தியகார வேலை பார்க்கிறன்? ஒவ்வொரு மனிதனும், தனது இளமை வாழ்க்கையில் குடும்ப அஸ்திவாரம் அமைக்கும்போது இப்படி நாயாய் அலைவதென்னவோ ஒத்துக்கொள்ளவேண்டிய உண்மை. இப்படி நினைத்துத் தன்னைத் திருப்திப்படுத்திக் கொண்டான் விக்ரமன்.

கோணேசப் பெருமானின் தேவியின் பெயரையே தன் மகளுக்கு வைத்து, தீவிரமான மத அனுட்டானங்களுடன் வாழும் பரம்பரை இந்துக் குடும்பம் அது. விக்ரமன் குடும்பமோ ''எல்லாம் யேசுவே!'' என்ற நம்பிக்கையில் வாழும் கிறிஸ்தவர்கள். இந்த இரண்டு குடும்பமும் நிச்சயம் கல்யாணத்திற்கு ஒத்துவராது என்பது இருவருக்குமே நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்த விசயம். முடிவை நினைக்கப் பயமாயிருந்தாலும், அவர்களின் காதல் தீவிரமானது.

''மாது! நீ எதுக்கும் பயப்படாதே. உன்னைப் புரிந்து கொண்ட கணவனாக என்றும் நடப்பேன். உன் நடை, உடை, பாவனை, மத நம்பிக்கை எதையும் நீ இழக்க வேண்டாம். நீ சுதந்திரமாக செயல்படலாம். எனக்கு நீ மட்டும் வேண்டும் மாது. உன்னை மட்டும் இழக்க என்னால் முடியாது'', அவன் சற்று உணர்சிவசப்பட்டுக் கூறினான்.

இப்படி ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, இரு வீட்டாரின் ஏகோபித்த எதிர்ப்பைச் சம்பாதித்தபடி, ஒருநாள் இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். ஒருவர்மேல் ஒருவர் செலுத்திய அன்பு இல்லற வாழ்க்கையை மகிழ்வோடு நாட்களைக் கடத்தியது. கோணேஸ்வரரும் அந்தோணியாரும் அம்மாளும், அன்னைமரியாளும் அவர்கள் சுவாமியறையில் ஒன்றாக வீற்றிருந்தனர்.

அவளது அன்பும், கவனிப்பும் விக்ரமனைப் பிரமிப்பிலாழ்த்தியது. பொல்லாத கோபக்காரியாக அறிமுகமான இவளிடம் இத்தனை பரிவும், பாசமும் இருக்கிறதா? விக்கிரமன் ஆச்சரியப்பட்டிருக்கிறான்.

''குழந்தையாய், குமரியாய் குடும்பப் பெண்ணாய் அன்னையாய் இப்படி எல்லாம் பரிணமிக்கப் பெண்ணால் தான் முடியும். அதிலும் என் மாதுகிரேட்'' மனதிற்குள் ஆனந்தக் கற்பனையில் மிதந்தான்.

மாதுமையின் ஒவ்வொரு செய்கையிலும் பராதியின் கவிதைப் படைப்பில் வரும் கண்ணம்மா உயிருடன் நிற்பது போலிருக்கும் விக்ரமனுக்கு. அத்தனை வேலைகளையும், சுறுசுறுப்பாக முடித்துவிட்டு சரியாக எட்டு மணிக்கெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெற்றி நிறைந்த குங்குமம், வாய் நிறையச் சிரிப்புமாய், அவனுக்கு முன்னதாக அவள் வந்து வாசலில் ஆயத்தமாய் நிற்கும்போது பூரித்துப் போவான் விக்ரமன்.

இப்படிப்பட்ட வாழ்க்கையில் விரிசலா? இந்த ஆண்கள் தங்கள் தேவைகளுக்காக எப்படி எப்படியெல்லாமோ மாறி விடுகிறார்களே. கல்யாணத்திற்கு முன்னர் என்னென்னவோ சொல்லிட்டு பின்னால் எத்தனை சுயநலம் வந்துவிடுகிறது· என்ன நடந்ததென்று விக்ரமன் இப்படி நச்சரித்துக்கொண்டிருக்கிறான்?

அன்றொருநாள் விக்ரமனின் உற்ற நண்பன் விசு, ''டேய் விக்கி நீ கொடுத்து வச்சவண்டா. என்ன இருந்தாலும் உன் மனைவி பியூட்டிபுல். இது மட்டுமல்ல எந்த விஷயத்திலும் கெட்டிக்காரி'' இப்படி அவன் முன்னாலேயே புகழ்ந்து நாலு வார்த்தை சொல்லிவிட்டான். அந்தச் சம்பவத்தின் பின் அன்றிரவு விக்ரமன் கேட்ட முதல் முதல் கேள்வி.

''மாதுநீ கட்டாயம் வேலைக்குப் போக வேண்டுமே?''
''இதென்ன விக்கி திடீரென, இன்றையப் பொருளாதாரப் பிரச்சினைகளை யோசிச்சுப் பாருங்கோ. நான் வேலைக்குப் போறதால் வீட்டு வேலைகளிலோ, இல்லாவிட்டால், உங்களுக்கு செய்யிற கடமைகளிலோ தவறுகிறனா விக்கி?''

''சே, அதில்ல மாது. பொம்பிளையள் வேலைக்குப் போவதால வீட்டுப் பொறுப்பு வராது. அதோட குழந்தை குட்டி என்று வந்துவிட்டா பிறகு கஷ்டம் அதுக்கு முன்னேற்பாடா இப்பவே நிக்கிறது. நல்லதுதானே·''

''விக்கி, நீங்க எதையோ மனசில வச்சுக்கொண்டு சொல்லுறீங்க.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படி ஒன்றுமில்ல''

''அப்போ இவ்வளவு காலமும் நான் வேலைக்குப் போகைக்குள்ள பிழையாய்பட இல்லையே விக்கி.? ஏன் நான் ஒரு வேக்கிங் கேள் என்று தெரிந்த பிறகுதானே லவ் பண்ணினநீங்க.''?

''ஓம், உமக்கு கதைக்கத் தெரியும்.''

"நியாயத்தைக் கதைக்கிறது பிழையே விக்கி''?

"அப்ப அந்த முடிவு சரியென்று பட்டுது. இப்ப இந்த முடிவு சரியென்று பட்டுது.''

"அப்ப உங்களைப் போல ஆம்பிளைக்கு அடிக்கடி குணம் மாறும். அதற்கேற்றபடி நாங்கள் மாறிக்கொள்ள வேணும், என்று செல்லுறீங்க.''

"ஓம், ஓம்... எத்தனை தடவை சொல்லுறது?''

மாதுமையின் கன்னங்கள் கோபத்தில் சிவப்பேறின.

"விக்கி! ஒரு பராதியார் பிறந்தார். பக்கம் பக்கமாகப் விடுதலை, சுதந்திரம் பற்றிப் பாடி வச்சிட்டுப் போய் விட்டார். அவரது கவிதைகளை மேற்கோள்காட்டி, இன் றைக்குப் பல ஆண் எழுத்தாளர்கள் எழுதிப்பிழைக்கின்ற னர்.. ஆனால் எத்தனை ஆண்கள் பெண்களின் சுதந்திர வாழ்வுக்கு அனுசரணையாய் நடக்கின்றனர்! விக்கி, அதிகம் ஏன்? நீங்கள் அந்த நாளில் எழுதின கடிதங்களில், உன் அன்பைக் கட்டி ஆள நினைக்கிறேனே அல்லாது உன் சுதந்திர வாழ்விற்குக் கட்டுப்போட விரும்பவில்லை'' இதெல்லாம் உங்கள் பேனையில் வடித்த வார்த்தைக் கோவைகள். விக்கி நான் அப்பொழுது கண்ட கனவுகள் எத்தனை கோடி? எனக்கு வரப்போகும் துணைவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துப் பெருமிதப்பட்டேன். ஆனால், இப்ப உங்க மனசைப் புரிந்துகொள்ள முடியவில்லை விக்கி.''

விக்ரமன் உம்மென்று முகத்தை வைத்துக்கொண்டிருந்தான். கன கன நேர அமைதிக்குப் பின்னர்......

''மாது, எல்லாரும் உன் வடிவை ரசிக்கிறது, நீ வேலைக்குப் போற தாலை. இப்போ விளங்குதா?''

''விக்கி, ஓ! நீங்க இவ்வளவு குறுகிய மனம் படைத்த மனிதரா? எவ்வளவு கேவலமான வார்த்தைகள். படித்த படிப்பு கூடவா உங்களை விட்டு விலகிவிட்டது. விக்கி இன்றைக்கு வேலை வேண்டாம் என்று சொல்லுவீங்க. நாளைக்கு மாது வேண்டாம் என்று ஒதுக்கி விட்டீங்களெண்டா? நான் பெற்றாரை ஒதுக்கி விட்டு உங்களிடம் ஓடி வந்தவள்.''

''அப்ப, நீ கட்டாயம் வேலைக்குப் போகப் போகிறாய்?''

''விக்கி எனக்குக் கணவனும் தேவை. உத்தியோகமும் தேவை.''

''யோசித்து ஒரு முடிவை எடு.''

ஆத்திரமும், வேதனையும் நெஞ்சை அடைக்க அன்று வேலைக்குப் போகவில்லை மாதுமை. விக்ரமனை வாசல் வரை வந்து வழி அனுப்பிவைக்கவும் இல்லை. அவனுக்கும் மன நிலை சரியில்லாததால் அவள் வராமல் இருந்தவரை சரியென்று கிளம்பிவிட்டான். ஆனால், உள்ளூர மனசு உறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்ரமன் நேரத்தோடு அலுவலகத்திற்குச் சென்று விட்டான். ஆனால் அங்கே அவனுக்கு எதிர்பாராத அதிர்ச்சி காத்துக்கொண்டிருந்தது.

★ ● ✶

''குட்மானிங் சயந்தன்.''

''குட்மானிங் விக்கி! என்னடா அது, மனேஜர் உன்னைச் சந்திக்க வேண்டும் என்று கதைச்சவர். நேற்றையக் கணக்கில் ஏதோ பிழையாம் என்றும் ஒரு கதை அடிபடுது. எதுக்கும் மனேஜரை சந்தியன்.''

''என்ன சயந்தன்?'' திகைத்தான் விக்ரமன்.

''முதல்ல போய் மானேஜரைச் சந்தியப்பா.''

''யேசுவே, என் தன்மான உணர்வை மேலும் சோதிக்காதே. வீட்டில் எந்தப் பிரச்சினைபற்றிப் பிரச்சினை எழுந்ததோ, அதே பிரச்சினையில் என்னை மாட்டி வேடிக்கை பார்க்காதே.''

பல தடவை யேசுவை மன்றாடிக் கேட்டுக்கொண்ட பின், மனேஜரின் அறைக்குள் பிரவேசித்தான் விக்ரமன்.

''குட் மானிங் சார்.''

''குட்மானிங் விக்ரமன். பிரச்சினை என்னவென்றால், நேற்றைய கணக்கில் ஒரு பத்தாயிரம் மிஸ் பண்ணுது. என்னால செய்யக்கூடிய உதவி ஒன்றுதான். நீங்கள் கொண்டு வந்து கட்டிவிடுகிறதென்றால் இரண்டொரு நாளைக்கு வெயிட் பண்ணலாம். இல்லாவிட்டால் ''சஸ்பென்ட்'' பண்ண வேண்டியது என்னோட கடமை.''

''சார் இந்தத் தவறு எப்படி நடந்ததென்று யோசிக்கிறதைவிட, இனிமேல் இப்படி தவறு நடக்காதபடி முயற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கிறன். ஒரு வாரத்துக்குள்ள கட்ட வேண்டிய பணத்தைக் கட்டி விடுறன் சார்.''

''ஒகே, போகலாம் விக்ரமன்.''

கனத்த இதயத்தோடு அறையை விட்டு வெளியேறினான். சில நிமிட சிந்தனைக்குப் பிறகு நிதானத்திற்கு வந்தான், விக்ரமன்,

பல சந்தர்ப்பங்களில் தங்கள் பலவீனங்கள், குறைபாடுகள் அவர்களுக்குள்ளேயே மறைக்கப்பட்டு, வெளியில் இவரைப்போல நல்ல மனிதர், முற்போக்கானவர் யாருமே இல்லை'' என்று சொல்லுமளவிற்கு நடந்து கொள்வதை ஒரு கலையாகக்கொண்டு காலம் கழிக்கின்றனர் பல ஆண்கள்.

விக்ரமனும் தன் மனைவிக்குப் புது வேஷம் போட முடிவு செய்தான். தன் பலவீனத்தை மறைக்க நினைப்பது இதுவென தன் மனச்சாட்சிக்கு நன்கு விளங்கியது. வரும் பொழுதே விக்ரமன்......... ''மாது!'' என கூப்பிட்டபடி வந்தான்.

''என்ன......'' அவள் பார்வை கேட்டது.

''மாது, நான் காலையில் அப்படிச் சொல்லிப் போட்டேனென்று முகத்தை உம்மென்று அப்படி வைத்திருக்கிறீர்? யோசிக்க வேண்டாம் மாது.''

''மாதுவின்ர ஆசைக்கு குறுக்க நிற்கிற பிற்போக்குவாத கணவன் நானில்லை''

''என்ன 'விக்கி, உண்மையாகவா சொல்லுறீங்க?''

''உண்மையாகவா விக்கி? ''சத்தியமா! மாது மேல் ஆணை!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்ப ஏன் விக்கி காலையில அப்படியெல்லாம் கதைச்ச நீங்க.''

''எல்லாம் இந்தப் பெண்களின்ர குணத்தை அறியத் தான்.''

அவள் விக்கியின் கரங்களைக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். எவ்வளவு படித்தாலும் பெண்களுக்குக் கணவன் சொல் மந்திரமாகி விடுகிறது. அப்படியே நம்பவைத்து விடுகிறது.

ஒருமாதிரி எங்கேயாவது லோன் எடுத்துக் கட்டினாலும் இரண்டுபேருடைய சம்பளமும், ஒருமாதிரி குடும்பத்தை இழுத்துக்கொண்டு போகும். அவனது மூளை சிந்தித்தது.

''என்ன விக்கி யோசனை?''

''ஒன்றுமில்லை மாது. உன்னை அழப்பண்ணிப் போட்டன்.''

''சும்மா இருங்கோ. இப்ப வாங்க சாப்பிட.'' அவள் அவன் கரங்களைப்பற்றி இழுத்தாள்.

''மாது இந்த மனப்பான்மையோட நான் இனிமே ஒருநாளும் வாழ மாட்டேன். நிச்சயமா நான் முற்போக்கு வாதக் கணவனா மாறத்தான் போறன்.''

★ ★ ★

- வீரகேசரி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ......!
போலிமனிதர்களே
உங்கள்
முகத்திரைகள்
கிழியத்தான் போகிறது.
உங்கள்-
கனவு மயக்கங்கள்
கலையத்தான் போகிறது
ஒரு வரலாற்று நகர்வில்
நீங்கள் காணாமல் போகும்
நாள்-
வெகு தூரத்திலில்லை.

*- தமிழ்ப் புதல்வன்*

Acc No:
CL No:

# முகம் இழந்த மனிதர்கள்

காலையில் பெய்த மழையில் மரங்களும், செடிகளும், வீதிகளும் குளித்து தங்கள் தூசிகளைக் கழுவிக் கொண்டன. அதன் பின் சூரியக் கதிர்கள் பூமியில் பட சூழல் தான் எத்தனை தூய்மையாய் இருந்தது? சில்லிட்ட தென்றலும் மெல்லிய வெய்யிலும் சேர்ந்து நிர்மல மான வானத்துக்கும் பூமிக்கும் இடையில் வினோதங்கள் செய்தன.

மழையோ வெயிலோ வண்டில்களில் கொள்ளி விற்பனைக் காரர்கள் நகரத்துக்கு வந்து கொண்டிருந்தனர். காளை மாடுகளின் சலங்கை ஒலியினை கேட்ட பெண்கள் படலை யடிக்கு வந்து எட்டிப்பார்த்தனர். பேக்கரிக்கார பைய ன் கள் 'பாண், பணிஸ்' இவைகளை விற்பனைக்கு எடுத்துச் சென்றனர். ஒரு பக்கம் விடியுமுன்னரே வெள் ளைச் சீருடை சிறார்கள் புத்தகச் சுமைகளை தோளில் சுமந்தபடி சுமைதாங்கிகளாய் போய்க்கொண்டிருந்தனர். பிறிமா பஸ்ஸுக்காக ஊழியர்கள் சந்திகளில் காத்திருந் தார்கள். திருக்கோணமலையின் விடிவு எப்போதோ......? ஆனால் அதன் நாளாந்த விடிவுகள் இயந்திர கதியில் நடந்து கொண்டுதானிருந்தன. ''தேசம் விடுதலை பெற வேண்டுமென்றால் ஒரே இயக்கமும் ஒரே தலைமையும் தான் தேவை. ஒன்பது வகை இயக்கம் ஒன்பது வகை தலைமை ஆயிரம் காரணங்களுக்காக பதினாயிரம் கட்சி கள் போராடும்போது 'தேசம்' என்கிற சக்தி எவ்வளவு பலவீனமாய்ப் போகின்றது?'' என்ற கருத்தை சொல்லிய மாபெரும் எழுத்தாளன் பாரதத்துக்கு அக்கருத்தை சொல் லியிருந்தாலும் தற்கால ஈழத்துக்கும் எப்படி பொருத்த மாயிருக்கிறது. ஒருகாலத்தில் கோயில் திருவிழாக்களும், அமைதியான வாழ்க்கையும், பக்தி பூர்வமான மனிதர்க ளுமாயிருந்த திருகோணமலை மண்ணில் வெறும் வாகன ஓட்டங்களும், அடிக்கடி துவக்குச் சூட்டுச் சத்தங்களும், ஊரடங்குச் சட்டங்களும், ஹர்த்தால்களும் நிரந்தரமாகி போன நிலையில் மனித மனங்கள் அங்கலாய்க்கத் தொடங் கின.

இந்த நிலையிலும் கூட சில மனிதர்கள் நிலையற்ற செல்வம் தேடி குறுக்கு வழி போகின்றனர் இவர்களிடையே இந்த மண்ணிற்கு தங்களை உரமாக்கிக் கொண்ட இளை ஞர்களும் இருக்கிறார்கள். 'தம்பையா' மாஸ்டரின் இனப் பற்றும் நாட்டுப் பற்றும் தன் குடும்பத்தில் நடந்த சம்பவ மும் அவர் மனதை என்னவோ செய்தது. பச்சை பியட் கார் அவரது வீட்டைக் கடந்து போய்க் கொண்டிருந்தது. 'இஞ்ஜினியர்-அல்பிரட் பொன்னுத்துரையரை ஒருக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைக்கு சந்திக்கத்தான் வேணும்' மனதிற்குள் நினைத்துக் கொண்டார் தம்பையா மாஸ்டர்.

பொன்னுத்துரை இஞ்ஜினியர் கனகமில் மார்க்கட்டுக்கு வந்திறங்கினார். முதலில் தன் கண்ணாடியை சரிப்படுத்தியவர் மீன் விற்பனைப் பகுதிக்கு போனார். ''ஐயாவோ! வாருங்கோ கணவா அரைக்கிலோ இருபது. கெழிச்சல் இருபத்தைந்து ஐயாவுக்கு குறைச்சி தருவன் தானே'' இரத்தினம் பணிவு மேலிட சொன்னான். ஐயாவின் வழமையான மீன்காரர் இரத்தினக் கிழவன் தான். 'ஐயா தன் மூத்தவனுக்கு வேலை போட்டுத் தாரனென்று சொல்லி ஒரு வருஷமாகுது.' ஆனாலும் அவனுக்கு ஒரு நம்பிக்கை பெரியவர்கள் ஏமாத்த மாட்டினம் என்று ஐயாவுக்கு கண்களை மூடிக்கொண்டு வியாபாரம் செய்தது அந்த ஏழை மனம், ஒரு எதிர் பார்ப்பில்......

போர்டிகோவில் அவரது கார் நிற்கவும், வேலைக்கார சின்னையா ஓடி வந்து எதிர் கொண்டான். ஐயா எங்கே போனாலும் நட்டப்படமாட்டார் என்று சின்னையாவுக்கு தெரியும். சனிக்கிழமை முழுவதும் ஐயாவுக்கு வேலைதான். அதனால் வீட்டு அலுவல்களை நேரத்தோடு முடித்துவிடுவார். ஐயாவுக்கு எத்தனையோ செல்வமிருந்தும் பொம்பிளை விசயத்தில் மட்டும் ஐயா நம்பகமானவர். அந்தளவில் ஏனைய தில்லுமுல்லுகளை சின்னையா கண்டு கொள்ளமாட்டான். அம்மா கூட வீட்டுக்கடங்கின பெண்மணிதான். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வெளியில் அம்மாவைக் காணலாம். அது கூட முதலில் சர்ச், பிறகு தான் பொழுது போக்கு எல்லாம்.

✶ ● ✶

அன்று ஞாயிற்றுக்கிழமை!

கோயில் மணியோசை பெரிய கடையெங்கும் கேட்டது. மாதா கோயிலை நோக்கி நாலா பக்கமிருந்தும் குழந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ,பெரியவர்கள் என்று 'சர்ச்சை' நோக்கி சென்று கொண்டிருந்தனர். இதில் எத்தனைபேர் மனச்சுத்தியுடன் போகிறார்கள்? என்பது தெரியாத கணக்குத்தான். சிலர் மனச்சாந்திதேடி செல்கிறார்கள். சிலர் கட்டாயக் கடமைகள்; இன்னும் சிலர்... பாவமன்னிப்பு; கருணையே உருவாய் வீற்றிருக்கும் இயேசு பிரான்; மேரிமாதா, இவர்களின் சுருவங்கள் ஆண்டவனுக்கு தம்மை முழுவதும் அர்ப்பணித்து அவரது சேவையை செவ்வனே ஆற்றிவரும் சீராளன் பாதர் இயேசு பாலனின் முகம் போல களவும், பொய்யும்' தீய குணங்களையும் அறியா குழந்தை முகம் அவர் ஆற்றும் பிரசங்கத்தில் தங்களை மறந்து இறைவனோடு ஐக்கியப்படும் கிறிஸ்தவ மக்கள்;

பச்சை பியட்டில் அல்பிரட்-பொன்னுத்துரையும், அவரது குடும்பமும் வந்திறங்கினர். ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாது வந்திறங்கும் அவரது கடமை உணர்வை அதாவது கிறிஸ்தவனின் தலையாய கடமை உணர்வை சிலர் வெளிப்படையாகவே புகழ்ந்திருக்கிறார்கள். ''இதுதான் அப்பா கடவுளும் அந்தாளுக்கு கொட்டிக் கொடுக்கிறார்'' இப்படி சொல்கிற ஜனங்களும் இருந்தனர்.

''நாட்டில் அமைதியும் சமாதானமும் கிடைக்க வேண்டுமென்று மன்றாடுகின்றோம். மக்களின் ஐக்கிய வாழ்வுக்காக மன்றாடுகின்றோம்... எம் மன்றாட்டை நீர் கேட்டருளும்.''

குண்டூசி விழுந்தாலும் கேட்கிற அளவு அமைதி குடிகொண்டிருந்தது. சீராளன் பாதர் பீடத்திற்கு குமைஞ்சான் காட்டிக் கொண்டிருந்தார். அதன்பின் அவரது பிரசங்கம் ஆரம்பமானது. ''அன்பான மக்களே! நீங்கள் எல்லாவற்றிலும், எப்போதும் சம்பூரணமுடையவர்களாயும், உங்களிடத்தில் சகலவித கிருபையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கின்றார். மேலும், நீங்கள் ஒரு பொல்லாங்கும் செய்யாதிருக்கும்படியாக தேவனை நோக்கி விண்ணப்பம் பண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணுகின்றேன். வாரி இறையுங்கள், ஏழைகளுக்கு கொடுங்கள். அன்பு காட்டுங்கள். பகையை கைவிடுங்கள். பேராசைகளே பல அழிவுகளுக்கு காரணம். சகோதரரே சந்தோஷமாயிருங்கள். ஆறுதலடையுங்கள். சமாதனமடையுங்கள். அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணமாகிய தேவன் உங்களோடே கூட இருப்பார். சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடும் கூட இருப்பராக! ஆமென்''.

இயேசு பாலன் நேரே சொல்வது போல அப்படி ஒரு மென்மை, அன்பு அந்த முகத்தில்... முழந்தாளிட்டு பொன்னுத்துரையரும் தன் வேண்டுதல்களை சொல்லிக் கொண்டிருந்தார். பூஜை முடிய பாதர் அனைவருக்கும் தேவ நற்கருணை வழங்கினார். பக்தியோடு பொன்னுத்துரையரும் பெற்றுக் கொண்டார்.

* * *

''பூஜை முடிந்தது அனைவரும் சென்று வாருங்கள்'' ஏதேதோ சுமைகளுடன் போனவர்கள் சுமைகளை இறக்கின நிம்மதியுடன் ஆலயத்தை விட்டு வெளியேறினர். தம்பையா மாஸ்டரை வழியில் கண்டு சுகம் விசாரித்தார் பொன்னுத்துரையர். ''சுகத்தை ஏன் கேப்பான். தங்கச்சியின்ர மகனை மூன்று நாளாய்க் காணவில்லை. யாரிட்ட கேக்கிறது?... உங்களுக்கென்றால் நாலுபேரைத் தெரியும்'' ஏதோ எதிர்ப்பார்ப்பில் கேட்டார் மாஸ்ரர்.

''என்னால் முடிந்ததென்றா கட்டாயம் செய்வன் பாருங்கோ. இந்த நாளில இதெல்லாம்...... எல்லோரும் தலையிடுறதும் நல்லாயில்ல? அதோட எனக்கு அரசியல், கொலை, களவு காணாமற் போறது இந்த மாதிரி விசயங்களில தலையிடுறதும் பிடிக்கிறதில்ல நான் வாறன் பாருங்க.'' மெல்ல நழுவினார் பொன்னுத்துரையர்.

'ஒருத்தனை திடீரென காணவில்லை என்பது எத்தனை பெரிய விசயம். ஒரு படித்தவன் சமுதாயத்தில் ஒரு அந்தஸ்தில் உள்ளவன் என்று உதவி கேட்டால் இந்த மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணின் பதில்...... சே! இந்த உலகம் எதை நோக்கிப் போகிறது? மனித நேயம் அர்த்தம் புரியாத விசயமாகிப் போய்விட்டதே. ஒரு அனுதாப வார்த்தை!' மனசுக்குள் நொந்து கொண்டார் தம்பையா மாஸ்டர்.

''ஏதோ இயக்கப் பிரச்சனையாம்'' என்று யோசித்துக் கொண்டிருந்தவன். இப்போ காணாமல் போய்விட்டான். மார்பில் தூக்கி வளர்த்த பிள்ளை. ஈழம் தேடிப்போன இளைஞர்கள் பலர் இன்று மண்ணோடு கலந்து விட்டனர். ஈழமும் கிடைக்கவில்லை பெற்றவர்க்கு பிள்ளைகளும் கிடைக்கவில்லை. ''நெஞ்சு பொறுக்குதில்லையே! இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்... கொஞ் சமோ பிரிவினைகள்......? தம்பையா மாஸ்டரை புதுமைக் கவி நினைவு கூர்ந்து கொண்டிருந்தான்.

* * *

''செய்யும் தொழிலே தெய்வம்'' என்று முற்று முழு தாக நம்பும் பொன்னுத்துரையர் கந்தோருக்கு கிளம்பிக் கொண்டிருந்தார். கந்தோர் வாசலில் ஒருபக்கமாக நிழலில் காரை நிற்பாட்டிவிட்டு உள்ளே நுழைந்தவர்...... மாறி மாறி சொல்லிக்கொண்டிருந்த ''குட்மோனிங்'' களுக்கு பதில் குட்மோனிங் சொல்லிக் கொண்டிருந்தார். முகமெல் லாம் சிரிப்பு! உத்தியோகத்தோரனை என்று சொல்வார் களே, நலுங்காத உடை, சப்பாத்தில் முகம் பார்க்கும், கண்ணாடியின் பளபளப்பு, உச்சந்தலையில் கொஞ்சம் மயிர் குறைவு, அதை ஈடுசெய்ய அப்படி இப்படி இழுத்தி ருந்தார், காதருகில் நரைத்திருந்த மயிர் அப்படியே நடுத் தர வயதை தாண்டி விட்டதை காட்டிக் கொண்டிருந்தது.

சுபவைசர் இராசையாவும் கிளாக்கர் வேதமுத்துவும் பவ்யமாக கந்தோருக்குள் நுழைந்தனர். ''சார்... வந்து'' கிளாக்கர் முடிக்கவில்லை.

''சொல்லும்! சொல்லும்!!'' அந்தக் குரல் அதிகாரமா? அலுப்பா? எதுவென்றே புரியவில்லை. பற்றிக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது பொன்னுத்துரையருக்கு ''என்னன்று போகுமப்பா? இதென்ன பகிடி விளையாட்டே எல்லாத்திலையும் கவனம் வேணும். அரசாங்க சொத்துக்களை உந்தமாதிரி கையாட விடப்படாது. எல்லாத்துக்கும் ஒரு அளவு வேணும்'' பொரிந்து தள்ளினார் பொன்னுத்துரையர். ''சரி சரி!'' நான் பார்க்கிறேன் இராசையா கொஞ்சம் நில்லும்'' அதன் அர்த்தம் தெரிந்து விலகிப் போனார் வேதமுத்து.

''இராசையா! அலுவல் சரியா மோனே. விசயம் என்னென்றா இந்த எண்பத்து ஏழில பெடியல் முதல் முதல் ஊருக்குள் ஏதோ பிரச்சனையென்று மதில் பாஞ்சான்கள் பிறகென்னடா என்றால் மதிலை அல்லே உடைச்சி போட்டான்கள் போக்குவரத்து வசதிக்காம். இவையின்ர 'மதில்' போக்குவரத்துக்கு..... சரி சரி!! இரண்டு கிழமையால அந்த சீமெந்தை அனுப்பிப்போடு மோனே.'' எத்தனை விளக்கம் எத்தனை குழைவு! நா க ரீ க மா க களவெடுக்கிறவனுக்கு பக்க துணைகளும் தேவைதானே? லாப மில்லாவிட்டாலும் அவரும் வரட்டு செல்வாக்கிற்காக இராசையா தா ள ம் போட்டுக் கொண்டிருந்தார். மேசையில் கிடந்த தி ன ப் பத்திரிகையை விரித்தார் பொன்னுத்துரையர். தலைப்புக் கள் அடி வயிற்றை கலக்கின. ''தெற்கு களனி கங்கையில் சடலங்கள் மிதப்பு!'' ''வடக்கில் இந்திய இராணுவம் சுற்றி வளைப்பு!'' ''கிழக்கில் இயக்க மோதலில் ப த் து பே ர் இறப்பு ஐவரைக் காணவில்லை. கண்டியில் வர்த்தக பிர முகர் சுட்டுக்கொலை......''

மனிசரே காணாமப் போகெக்குள்ள இந்தாள் சீமெந்து பேக்கை காணவில்லை என்று விடியக்காலையில் ஒப்பாரி வைக்குது'... சிரித்துக்கொண்டார் பொன்னுத்துரையர். ''சேர் இரத்தினம் என்றொருத்தர் உங்களைக் காண வந் திருக்கிறார்'' பியோன் வந்து சொல்லிப் போனான்.

''வரச்சொல்லு'' காத்திருந்தார். ''இரத்தினக் கிழவ னுக்கு ஏதும் நல்ல மீன்கள் பட்டுதோ தெரியாது. மனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குப் போட்டார். "வா! வா!! இரத்தினம் என்ன கந் தோருக்கே தேடி வந்திட்டாய் என்ன விசயம்?"

"ஐயா, குறை நினைக்கப்படாது என்ர மூத்தவனை ஒரு இயக்கம் கூட்டிக் கொண்டு போனது. ஊருப்பட்ட இயக்கங்கள் வந்து எதுவென்று தெரியவில்லை ஐயா. ஐயா வைத்தான் நம்பி வந்திருக்கிறன்" இரத்தினக் கிழவனின் பூஞ்சைக் கண்கள் கண்ணீர் உகுத்தன.

"சரி! சரி!! முடிந்த மட்டும் பார்க்கிறன் பேரைச் சொல்லிப் போட்டு போ."

"நான் வச்ச பேர் வில்வராசா இயக்கப்பேர் என்னவோ ராசா வோ"......

'இவனும் இயக்கமே' பொன்னுத்துரையரின் முகம் சில செக்கன்களுக்கு சுண்டங்காயாய் குறுத்தது. பெடியல்ட நேர்மை ஒழுக்கத்துக்கு இல்லை. அவர்களின் 'இளமை' வேகத்திற்கு தன்னால் ஈடுகொடுக்க முடியாததற்கு தான்'

"என்ன இயக்கமடாப்பா"?

"அது தெரியாதய்யா"......

"சரி! சரி! நீபோ! நான் பார்க்கிறேன்."

"தம்பையா மாஸ்டர் மாதிரி இல்லை, இவன் ஒரு மாதிரி நம்பிக் கொண்டிருப்பான். இத்தனை பேர் காணா மப் போகெக்குள்ள இவன் எப்படி வரப்போறான்.,"

வேலைகள் முடியவும் நேரமும் கணக்காய்த்தான் இருக்கிறது. மணி பன்னிரண்டு... கோயில்மணியும் நேவி விசிலும் அதை பறை சாற்றுகின்றன.

"ஞாயிற்றுக் கிழமை கோயிலுக்கு போக வேணும்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாவங்களை செய்து கொண்டே பாவமன்னிப்பு கேட்கிறவனுக்கு கர்த்தரின் ஆசீர்வாதம் கிட்டாது. மக்களே நீங்கள் திருந்துங்கள் உங்கள் பாவங்களை கர்த்தர் ஏற்றுக் கொள்வார். ஓ! கர்த்தரே மனிதன் தன் படைப்பிலிருந்து முற்றும் மாறிக்கொண்டு போகிறான். அவர்களை நீங்கள் உங்கள் வழியில் கொண்டு வரவேண்டுமென்று மன்றாடு கின்றோம்... ''சகோதரர்களே நீங்கள் முகம் இழந்தவர் களாக இல்லாமல் முழுமனதுடன் இறைவனை நோக்குங் கள்'' பாதர் சீராளனின் குரல் ஒலி பெருக்கி ஊடாக கேட்டுக்கொண்டிருக்கிறது............

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்புச்சட்டைக்காரர்களின்
துப்பாக்கிநாகரீகங்கள்
ஒரு இனத்தின் வரலாற்றை
தீயில் எரிக்கிறது!

●

'சத்திய'யங்கள்இன்று
சிலுவையில் அறையப்படுகின்றன
நாளைஉயிர்த்தெழுவதற்காய்!

●

தியாகங்கள் என்றும்
வீண்போவதில்லை-
என்றவேதத்தின்கூற்று
பொய்யாவதில்லை!

-தமிழ்ப் புதல்வன்-

# கிராமத்து மண்கள் சிவக்கின்றன...!

சத்யன் வயல்வெளிகளைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு இருந்தான். நெல்மணிகள் வளர்ந்து பசுமை படர்ந்திருந்தது. ''தம்பி! சத்யன் இந்த நெல் மூட்டையை வீட்டில் இறக்கி விடப்பா'' சின்ன போடியாருடைய மூத்த மகன் கேட்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுக்கென்ன அண்ணா'' சத்யன் மாட்டு வண்டியை எடுத்துக்கொண்டு அனாயாசமாகச் செல்கிறான். கறுத்துத் திரண்ட அவனது கம்பீரமான உடம்பு வியர்வை வழிந்து வெய்யிலில் மினுமினுக்கிறது.

அந்தக் கிராமத்துக்கு இந்த ஒரேயொரு சத்யன்போதும் என்பது பலரின் அபிப்பிராயம். உதவிக்கு சத்யன், முரட்டுத் தனத்திற்கு சத்யன், அன்புக்கு சத்யன், ஆபத்துக்குச் சத்யன், மொத்தத்தில் அந்தக் கிராமத்தின் ஏகபோக சொத்தாக மதிக்கப்பட்டு வருபவன் சத்யன். அக்கிராமத்து இளம் பெண்கள் பலர் இவனது அழகான சிரிப்பிற்கு இன்னும் அடிமையாகத் தயார். ஆனால், சத்யன் ஒவ்வொரு இளம் பெண்ணுக்கும் பாதுகாவலன். காலப்போக்கில் ஒருத்தி மட்டும் அவனது இதயத்தில் இடம்பிடித்தது, உண்மை.

"இந்தக்காலத்தில் நம்ம கிராமத்தில் இப்படியும் ஒரு பிள்ளை இருக்கிறான் என்கிறதே பெருமைப்படவேண்டிய விடயம்'' சின்னப் போடியார் அடிக்கடி பெருமைப்பட்டுக் கொள்வார். ''மீனாட்சி'' அதை விடப் பெருமைப்பட வேண்டியவன் நான், ஏனென்டால் அவன் நம்ம இனத்தவன்''.

''ம், அவன் புகழ் பாடினது போதும், கை, கால், முகம் கழுவிப்போட்டு உள்ளே வாருங்கோ மணி ஒன்பதாப் போச்சுது. சாப்பிடவேணும்.''

அன்று பூரணை நிலவு பூமியில் ஒளிவட்டம் பாச்சிக் கொண்டிருந்தது. கங்கைநதி எப்போதும்போல் ஒரே சீராக ஓடிக்கொண்டிருந்தது. மக்கள் கங்கையைக் கடக்க உதவும் இழுவைப் படகான பாதையும் அக்கரையில் நின்றது. அதை இக்கரைக்கு விட்டால்தான் அதில் ஏறி அக்கரைக்குப் போகவேண்டியர்கள் போகலாம். சிலருக்குக் கோபம் கூட வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அங்காலை நின்று என்ன செய்கினமோ தெரிய வில்லை?'' ''பாதை போய் எவ்வளவு நேரமாச்சு.?''

சிலரின் நியாயமான முணுமுணுப்பு அது. ஒடத்தில் போகலாமெண்டால், இந்த இரவு நேரத்தில் முதலை கவிழ்த்தாலும் கவிழ்த்துவிடும் இந்த கையாலாகாத வசனங்களைக் கேட்டுக்கொண்டிருந்த சத்யனிடம் இருந்து ஒரு முரட்டுச் சத்யன் வெளிப்பட்டான். எப்படிப் பொங்கிப் பிரவாகித்த கங்கையில் பாய்ந்து நீந்தினான், என்பது எல்லோருக்கும் அதிசயம்தான். ஆனால் உண்மை, அக்கரைக்கு சில நிமிடங்களில் சென்று பாதையை இக்கரைக்கு அனுப்பிவிட்டுக் கங்கையில் மீண்டும் மூழ்கினான். சில நிமிடங்களில் சத்யனைக் காணாது கிளிவெட்டிக் கிராமமே அந்த நிசப்தமான இரவில் ஓவென்று அழுதது. ஏன்.? அந்த பூரணை நிலவுகூட ஒரு சில நிமிடங்கள் தன் அனுதாபத்தை வெளிக்காட்டிப் பின்னர் பிரகாசித்தது. நிமிடங்கள் கரைந்தன. சில நிமிடங்கள்...... கைகளில் குருதி தோய இக்கரைக்கு வந்து சேர்ந்தான் சத்யன். கூடவே ஓர் உயிரற்ற முதலையையும் கரைக்கு இழுத்து வந்தான். அன்றைய இரவெல்லாம் கிராமத்து ஜனங்கள் முதலையைப் பார்க்க வந்த வண்ணமிருந்தனர்.

கதறி ஓடிவந்த மீனாட்சி மட்டும் சத்யனின் குருதி தோய்ந்த கரங்களைத் தன் நெஞ்சில் அணைத்தபடி ஓவென அழுதாள்.

''தம்பி! இந்த ஊருக்கு நீ உபயோகமான பிள்ளையாக இருக்கலாம். ஆனால் நான் நொந்து பெத்தவளடா! உனக்கு ஒண்டெண்டால், நான் செத்துப் போயிடுவேன்.''

''சே! என்னம்மா? கொஞ்ச ரத்தம், அதுக்கு இப்படிப் பயப்படுறியே அம்மா'' அம்மாவின் கண்களைத் துடைத்து விட்டான் சத்யன். அந்த இரவு நேரத்தையும் பாராது மூதூருக்குப் போய்க் கார் பிடித்து வைத்தியரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டி வந்தான் சின்னப் போடியாரின் கடைசி மகன் ஜனகன்.

அடுத்த ஒரு வாரமாகக் கிளிவெட்டி கிராமமே ஓய் வெடுத்த மாதிரித்தான். அந்த மண்ணின் ஏகபோக சொந் தமான சத்யனுக்கு வந்த வருத்தம் பலரைச் சோகத்தில் ஆழ்த்தியது. எங்கோ ஒரு மூலையில் விசாலியின் மனம் மட்டும் விடாமல் அழுது கொண்டிருந்தது. காதலும், கத் தரிக்காயும் என்று உதறி எறியும் சத்யன் மனசுக்குள்ளும் ஒரு பெண்ணுக்கு இடமிருக்கா? இதை சத்யனே எண்ணி வியந்திருக்கிறான்.

★ ★ ★

விசாலியைப் பொறுத்தவரை அவள் அப்பா, அம்மா வுக்கு ஒரே பெண். நான்கு ஆண் சகோதரங்களுக்குக் கடைசிச் சகோதரி. இருபது ஏக்கர் வயல்காணிக்கும் வீடு வளவென்று ஊருப்பட்ட சொத்துக்கு உரித்துக்காரி. ஆத னால்தானோ என்னமோ ''நீ படிச்ச படிப்புப் போதும். பேசாம வீட்டில் இரு'' என்று அண்ணன்மார் போட்டகட் டளைக்கு எதிர்ப் பேச்சுப் பேசவோ, விவாதிக்கவோ முடியாமல் பள்ளிக்கூடத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு வீட்டிலிருக்கிறாள் விசாலி. படிப்புத்தடை அவளுக்குப் பெரும் நட்டத்தை ஏற்படுத்தாவிட்டாலும், தினசரி பாதை யடிக்கு வந்து வழியனுப்பி தன் அழகான சிரிப்பின் ஆயி ரம் அர்த்தங்களுக்கு மனதிற்குள் அகராதி தேடி, அந்த லயிப்பிலேயே பஸ் ஏறி பாடசாலையடியில் பஸ் நிற்பது கூடத் தெரியாமல் சிலநேரம் பஸ் கண்டக்டரிடம் ஏச்சுவாங் கும் நிலைமைகளை அடிக்கடி மனதிற்குள் நினைத்து அசை போட்டாள் விசாலி. இந்தக் கிராமத்து ஜனங்கள் ஒவ்வொ ருவர் மனதிலும் அசையா இடம் பெற்றிருக்கும் சத்யனின் இதயத்துக்குள்ளேயே இருக்கும் ஒரே ஒரு ஜீவன் விசாலி தான் என எண்ணும்போது அவளால் பெருமைப்படாமல் இருக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பெண்ஜாதி என்றால் புருசனுக்கு எல்லா விதத்திலும் அடங்கினவள்தான்' என்ற புதிய அர்த்தம் கற்பித்து அது பழைய கதையாகி மாறாத வழக்கமாகியுள்ள கிளிவெட்டி கிராமத்து ஆண்களிடையே சத்தியனின் பல்வேறு முற் போக்குக் குணங்கள் விசாலிக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்தக் கிராமத்தில் அன்றுதொட்டு வரும் ஆண்களின் அடி மைத்தனங்களிலிருந்து விடுபட்டுத் தனக்குப் புதுமையான தொரு வாழ்வு கிடைக்குமென்று விசாலி தினமும் கனவு கண்டுகொண்டிருந்தாள்.

அவள் ஒருநாள் அரசடிப் பிள்ளையாருக்கு பொங்கல் பூசைக்கு வந்திருந்தபோது சத்யன் ரகசியமாகக் கேட் டது, இப்பொழுதும் அவளைப் பெருமை கொள்ளச் செய் தது.

''விசாலி! இப்ப ஏன் பள்ளிக்குப் போறதில்லை. நான் எத்தனை நாள் பாதையடியில் காத்திருந்தனான்.''

''அண்ணாச்சிமார் விடுகினமில்லை, படிச்சது போதும், பெம்பிளையள் இதுக்கு மேல் படிச்சு ஒன்றும் ஆகப் போறதில்லையாம்'', அவளும் ரகசியமாகக் கிசுகிசுத்த போது அவன் அவளை வேதனையோடு பார்த்தான்.

''விசாலி, நான்கூட ஓ/எல். தான் படிச்சநான். ஆனால்; எனக்கு வரப்போறவள் அதைவிடப் படிக்க வசதியிருந்து படித்தால் அதுகூட எனக்குப் பெருமைதான்''.

இந்த இருபதாம் நூற்றாண்டில் இப்படிச் சொன்ன ஆம் பிளை சத்யனாகத்தான்இருக்கவேண்டும். மனதிற்குள் சொல் லிக்கொண்டாள் விசாலி. நகர்ப்புறங்களுக்குப் போய்ப்பார்த் தால்தான் தெரியும் ஒவ்வொரு ஆண் பிள்ளையின்ர குணா திசயங்களை ''பொம்பிளையள் நம்மைவிடப் படிச்சி ருந்தா எங்களை ஆட்டிப் போடுவாளவை'' இப்படி பஸ் ஸில் அவள் காதுபட சில ஆண்கள் கதைத்ததைக் கேட்டி ருக்கிறாள் விசாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதுக்கு நான் குடுத்து வைக்கவில்லை''. அந்த அகன்ற விழிகளில் சோகம் கப்பிக்கொண்டது.

''அதுக்கு ஏன் இப்ப முகம் இப்படிப் போகுது?......... அதை விடும். நாளைக்கு வேட்டைக்குப் போறன். மரை ஏதும் அகப்பட்டா அண்ணாச்சியிட்ட அனுப்புறன். விசயம் பிடிபடுறவரையும் பயமில்லை என்ன?''

அவள் முகத்தில் நெளிந்து வந்த நாணத்தின் சிவப்பை ரசித்தபடி சைக்கிளில் பறந்தான் சத்யன்.

நினைவுகள் எங்கோ இழுத்துச் செல்ல அவள் மட்டும் பூஜையறையில் வெள்ளைச் சீலைத்துண்டில் மஞ்சள் நீர் நனைத்து இருபத்தைஞ்சு சதக் காசை நேர்ந்து விளக்கின் அடிப்பாகத்தில் கட்டிக்கொள்கிறாள். வெருகலப்பதியானே, இவருக்கு சீக்கிரமாகக் கை சுகமாகவேணும். பிறகு இவரே வந்து அங்கப் பிரதட்சனை செய்வார், என்றும் வேண்டிக் கொண்டாள்.

அந்நேரம், ''விசாலி, விசாலி''. என அம்மா அடுப்பங் கரையில் இருந்து கூப்பிடும் குரல் தெளிவாகக் கேட்கவே, ''இதோ வாறேம்மா'' அம்மாவிடம் ஓடினாள் விசாலி.

''பிள்ளை வாறியாமனே, பின்னேரம் போல பிள்ளை யாரிட்டப் போய், அப்படியே உவன் சத்தியனையும் ஒருக்கா பார்த்துவிட்டு வருவம்? அந்த வசனம் அவளுக்குத் தேனாய் இனித்தது. நெஞ்சிலே பாலை வார்த்தது. என்றாலும், ''பின்னேரம்தானே, பார்த்துப் போவமே'' சர்வ ஜாக்கி ரதையோடு சொன்னாள். மனசு அடிக்கடி வெருகலம்பதி யானுக்கும், அரசடி பிள்ளையாருக்கும் நன்றி சொல்லிக் கொண்டது.

மீனாட்சி என்ன, இந்தக் கிளிவெட்டிக் கிராமமே சத்தி யன் காதலிக்கிறானென்றால் நம்பாது, என்பது விசாலிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகத் தெரியும். கால ஓட்டத்திலே எல்லாம் சரிவரும் என்று அசைக்க முடியாத நம்பிக்கையிருந்தது. விசாலிக்கு.

மூத்தண்ணையின்ர கல்யாணம் நடந்து மூன்று மாதம் தான். அன்றைக்கே அண்ணியைப் பார்க்க அவருக்குப் பரிதாபமாக இருந்தது. அவ முகத்தில் சரியான குழந்தைத் தனம். இருந்தும்கூட மூத்தண்ணாவிடம், அம்மா கிசுகிசுத்தது இப்போமாதிரிக் கேட்டது. ''டேய் தம்பி! உன்ரை மனுஷி மலையில் டவுனில் படிச்சவளாம். ஆரம்பத்திலேயே முறையா அடக்கி வச்சுக்கொள்''. மூத்தண்ணா சிரித்த சிரிப்புக்கு அவளுக்கு மட்டுமே அர்த்தம் புரிந்தது. ஒருத்தியின்ர வாழ்க்கை சுதந்திரத்திற்கு இன்னொருத்தி முட்டுக்கட்டைபோடுற வரையில் மேடையில் சுதந்திரம் கேட்டு முழங்கிப் பயனில்லை. பத்துப் பாரதியார் பிறந்து வந்தாலும் உருப்படாத சமுதாயம். அப்பவே மனதிற்குள் ஆத்திரப் பட்டவள் விசாலிதான். இந்த உலகத்தில் தாய்மைக்கு அபரிமிதமான பாசம் உண்டுதான். ஆனாலும் அது தாய்பிள்ளை வரையில்தான் இருக்க வேண்டும். புருஷன் பெண்சாதி என்று வரைக்குள்ள அது அந்த இரண்டுபேரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ்றதில்தான் சந்தோஷமே தங்கியிருக்கு.

● ★ ●

பத்துநாள் இடைவெளிக்குப் பின் சத்யன் கையில் கட்டுடன் நடமாட ஆரம்பித்தான். மீனாட்சி முச்சந்தி மண் எடுத்து செத்தல் மிளகாய் சேர்த்து சத்யனுக்கு திருஷ்டி சுற்றிப்போட்டாள்.

''ஏனம்மா சின்னப் பிள்ளைக்கு செய்கிற மாதிரியெல்லாம் எனக்கும் செய்யிறியள்''. அம்மாவைப் பார்க்கச் சிரிப்பும் கூடவே வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம்பி டேய்! ஒவ்வொரு தாய்க்கும் தன் பிள்ளை எப்பவும் சின்னப் பிள்ளை தான்'' அவள் தலையை வருடி விட்டாள். சத்யனைத் தெரியாத சின்ன ஜீவன் கூட அந்தக் கிராமத்தில் இல்லாத அளவு பிரபல்யமானவன் என்றாலும் அவனது வீடு பாரதியின் கற்பனை வீடாக மட்டுமே திகழ்ந்தது. ஏழெட்டுத் தென்னைமரங்கள் வீட்டைச் சுற்றி நின்றன. இரண்டு சின்ன அறைகள், அதையொட்டி குசினி கொண்ட சிறிய வீடு, இவற்றை அண்மித்து ஒரு மாட்டுத் தொழுவம். வீட்டுத் தாழ்வாரத்தில் ஓர் கிளிக்கூண்டு, சுற்றிலும் பசுமை சூழ்ந்த வயல்வெளி. அங்கே கூட்டம் கூட்டமாக வரும் கிளிக்கூட்டம். அவற்றின் ''கீச் கீச்'' ஒலிகள், முற்றத்து நிலத்திலே பன்பாய் விரித்து நெல் பரப்பப்பட்டிருந்தது ஒரு புறம், மறுபுறம் பழுத்த மிளகாய்ப் பழங்கள் செத்தல் மிளகாயாக உருமாறிக்கொண்டிருந்தது. சத்யன் தன் கட்டுப்போட்ட கரத்தை மடியில் வைத்து மறுகையால் ஒரு தடியை வைத்துக்கொண்டு நெல்மணிகளைக் கொத்தவரும் குருவிக் கூட்டங்களைக் கலைததுக் கொண்டிருந்தான். தூரத்தே விசாலியும் அவள் அம்மாவும் வருவதைக் கண்ட சத்யன் தன் பரந்த மேனியை ஒருமுறை பார்த்துவிட்டு உள்ளேபோய் டவலை எடுத்து உடம்பைப் போர்த்திக்கொண்டு வெளியே வரவும், அவர்கள் முற்றத்திற்கு வரவும் சரியாக இருந்தது.

''வாங்க, வாங்க'' சுந்தரச் சிரிப்புடன் வரவேற்றான் சத்யன். ''தம்பி! இப்ப எப்படி சுகம்? நோவெல்லாம் குறைஞ்சிட்டுதே?'' ''இல்லை இப்ப எவ்வளவோ தேவையில்லை''.

''அம்மாதான் ஓரிடமும் போக விடுறதில்லை''. ''இளரத்தம் இப்படியெல்லாம் தான் சொல்லும். கொஞ்சம் சுகமாகட்டும்'' அச்சமயம் குரல்கேட்டு குசினி வேலையை அப்படியே நிற்பாட்டிப்போட்டு வாசலுக்கு வந்தாள் மீனாட்சி.

''வாருங்கோ! வாருங்கோ!!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கன நாளாச்சு உங்களைக் கண்டு. உவன் செய்த வேலையால வெளியாலையும் வெளிக்கிட நேரமில்லை.

''மெய்ய தங்கச்சி இப்ப படிப்பை நிற்பாட்டிட்டி'' யாமே''

''ஓம் மாமி, அண்ணாச்சிமார் படிச்சது போதும் என்று நிற்பாட்டிப்போட்டினம்.''

''அதெண்டால் சரிதான் பிள்ளை' பொம்பிளையல் படித்துத்தான் என்ன செய்யிறது? எல்லாம் போறவன் வீட்டில அகப்பை பிடிக்கத்தானே?'' என்றதும் விசாலியும் சத்யனும் ஒருவரில் ஒருவர் கனவுலகில் கலந்தனர்.

அரை நூற்றாண்டுக்குப் பின்னோக்கிய கதை பேச்சுக் களில் சற்றும் முன்னேற்றமில்லாத மனிதர்கள்! என்று மனதில் அசைபோட்டனர்.

மீனாட்சியும் கனகம்மாவும் பலதும் பத்தும் கதைக்க விசாலிக்கும், சத்யனுக்கும் அது சாதகமாகப் போயிட்டுது.

''மெய்யாத்தான் கேட்கிறன், இப்ப எப்படி இருக்கு?''

''நான் என்ன பொய்யா சொல்றன். ஓரளவு சுகம் விசாலி. பின் தோட்டத்து மரத்தில் கறுத்தக் கொழும்பான் ஆஞ்சு தரட்டே.''

''உங்கட கையை சும்மா வைச்சுக்கொண்டு இருந்தால் போதும்''.

''...............''

''என்ன சிரிப்பு?'', அவள் கேட்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சும்மாதான், உன்னைப் பார்த்ததும் மனசு சந்தோஷத்தில் சிரிச்சுது. அதை உன் முகம் பிரதிபலிச்சது அவ்வளவுதான்''.

''ஆளைப்பாரன், மனசில ஏதோ கண்ணதாசன், வைரமுத்து என்ற நினைப்பு.''

''உன்னைப் படைத்ததும் பிரமன் ஒரு கணம் திகைத்து நின்றிருப்பான். — தங்கச் சிலைபோல் உந்தன் சிந்தும் அழகில் தன்னை மறந்திருப்பான்''.

''இப்ப என்ன பாட்டு வேண்டிக்கிடக்குது.?''

''பின்ன என்ன? உன்னைப் பார்த்ததும் அப்படி மட்டுமல்ல, புதுக்கவிதை கூட எழுத வருகுது.''

இருவரும் அந்தப் பகிடியில் ஒருமித்துச் சிரிக்க......

''என்ன மனே! உவன் ஏதாவது முசுப்பாத்திக் கதை சொன்னவனே?'' மீனாட்சி பசுப்பாலை இரண்டு குவளைகளில் எடுத்து வந்து சத்யனுக்கும் விசாலிக்கும் கொடுத்துவிட்டு உள்ளே கனகம்மாவை நோக்கி நகர்ந்தாள்.

அடுத்த அரைமணி நேரத்துக்குள் விசாலியும் கனகம்மாவும் வெளிக்கிட, சத்யன் தனியனானான். அந்தத் தனிமையிலும் அவளின் நினைப்பு மனதில் வியாபித்திருந்தது. 'என்ன பெண் இவள்? எப்படி எப்படியெல்லாம் என்னை மனசுக்குள் வைத்துப் பூஜிக்கிறாள். தன் உணர்வுகளை எவ்வளவு அனாயாசமாக மறைத்துக்கொள்கிறாள்? ''தம்பி! முச்சந்தி கடைக்குப் போயிட்டு வாறன். ஒரிடமும் போகாதே''. அம்மா சொல்லிவிட்டுப் போகிறாள். சத்யன் தலையை ஆட்டி நினைவு ஓட்டத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கிறான்.

✶ ● ✶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, நாட்கள் கிழமைகளாக, கிழமைகள் மாதங்களாக, ஐந்தாறு மாதங்கள் கடந்தன. சத்யனும், பழைய சத்யனாக மாறிவிட்டான். ''மூதூரில் நீச்சல் போட்டியாம்'' என்னும் செய்தி கேட்டுப் பூரித்துப்போன சத்யன் ஆசை தீர நீந்தி எவ்வளவு நாளாச்சு என்ற நினைப்பில் போட்டியில் பங்குபற்றுவதற்காக அவ்வூர் கிராமசேவகர் ஊடாகப் பேர் கொடுக்கவேண்டியதால், அவரின் உதவியுடன் பேர் கொடுத்துப்போட்டு வந்தபின் தான், நிதானத்துக்கு வந்தான். 'இதில் வெற்றிபெற்றால் மலையில் போய் நீச்சல் போட்டியில் கலந்துகொள்ளவேணும். மூதூரைப் பொறுத்த மட்டில் கட்டைபறிச்சான், மல்லிகைத்தீவு, வெருகல், சம்பூர் கிராமங்களில் இருந்தெல்லாம் இளைஞர்கள் பங்குபற்றுவார்கள்.'

''அம்மா! பேர் குடுத்திட்டன், வார கிழமை நீச்சல் போட்டியில் பங்கு பற்றுவதற்கு''.

அதைக் கேட்ட மீனாட்சி ஒரு கணம் பதறினாள். ''தம்பி இப்பத்தான் கையை உடைச்சிக்கொண்டு படுக்கையில் கிடந்து எழும்பி அஞ்சாறு மாதமாகிறது. ஏன் உனக்கு இன்னுமா புத்தி வருகுது இல்லை?''

''என்ற அம்மா அல்லே! ஏனம்மா பயப்படுற?''

''இதில் எப்படியாவது முதலிடம் எனக்குத்தான் அம்மா அதை வந்து நான் சொல்லும்போது நீ சிரிக்கத்தான் போறே'' அம்மாவின் நெற்றியில் தன் பாச முத்திரையைப் பதித்துவிட்டுக் கிணற்றடிக்குப் போனான் முகம் கழுவ.

''இவனுக்கு ஒரு கால்கட்டு போட்டுத்தான் இவனை அடக்கவேணும்''. அம்மா சிரித்துக்கொண்டே சொல்லிக் கொண்டு மாட்டுத் தொழுவத்திற்குப் போவது அவனுக்கு விளங்கிற்று. சத்யன் தனக்குள்ளே விசாலியை நினைத்துச் சிரித்துக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்காத தன் சுருள் சுருளான கேசத்தை மெலிதாக எண்ணை தடவி வாரிவிட்டான். தன் கறுத்த மேனியைப் பார்க்க அவனுக்கு சிரிப்பு வந்தது. 'உங்களைப் பார்க்க கிருஷ்ணர், கோவில் கிருஷ்ணபகவானைக் கல்லால் செதுக்கி வச்சிருக்கே, அதுமாதிரி என்று என்றோ சொன்ன விசாலி யின் கற்பனையை எண்ணி.

''என்னடா சிரிப்பு?''

''ஒன்றுமில்லையம்மா, நான் உங்கால போயிட்டு வாரன்.'' ''ஓமடா! போற வழியில அரசடி பிள்ளையா ரையும் கும்பிட்டுக்கொண்டு போ.''

''ஓமம்மா.''

அன்று மாலை சத்யனின் வெற்றியைக் கொண்டாட நண்பர்கள் அவனை தூக்கிக்கொண்டு ஆனந்தக் கோஷம் எழுப்பி வீதிகளில் திரிந்தார்கள். நாட்டில் எத்தனை எத் தனையோ அசம்பாவிதம் நடக்கிற நேரத்தில் அந்தக் கிரா மத்தை ஏதோ ஒரு அமைதி வாழ்க்கைக்கு வழி வகுத்துப் பாதுகாத்தவர்கள் சத்யனும் அவன் நண்பர்களும்தான்.

நகரத்தில் மாலை ஆறுமணிக்குப் பிறகு மனுஷர் நட மாட முடியாவிட்டாலும், கிராமத்து மக்கள் சாதாரண மாகத்தான் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

மாட்டுத் தொழுவத்தில் லஷ்மி அழுது கொண்டிருந் தாள். ''கன்றைக் காணவில்லை போல லஷ்மி அழுது கொண்டிருக்கு'' சத்யன் அம்மாவிடம் சொல்லிக்கொண் டிருந்தான். ''தம்பி, எனக்கும் மனம் சரியில்லை. இரவு அப்பா வந்து எல்லாரையும் கூப்பிடுமாப்போல கனவு கண்டேன். அப்பா செத்து இத்தனை வருசத்துக்கு இப்ப டிக் கனவு கண்டதில்லை.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா, உந்தக் கனவுகளை நினைச்சு யோசிக்கா தீங்க, நடக்கிறது நடந்தே தீரும்.''

''அதில்ல தம்பி, ஆமி செக்கிங் என்று கதைச்சவை. எனக்கு அதைக் கேட்ட நேரத்தில் இருந்து நெஞ்சு பதறின படி. என்னைப்பற்றியில்லை. உன்னைப் பற்றித்தான்.''

''அம்மா எங்கட பெடியளுக்கு இருக்கிற மன உரம் உவன்கள்ர ஆயுதங்களுக்கு இல்லை. அப்படியே செத்தாலும், நெஞ்சில் சூட்டோடுதான் சாவம். முதுகில் சூடு வாங்கி சாகிற பரம்பரையில்லை''.

''தம்பி, ஏன் இப்படியெல்லாம் கதைக்கிறாய் ராசா?''

ஆமாம்!

அன்றிரவு அந்தக் கிராமத்தின் அமைதியைக் குலைக்குமாப்போல தமிழ்ச் சமுதாயத்தின் உயிரை உறிஞ்சிக் குடிக்கும் வெறிபிடித்த கூட்டம் வேட்டையாட வந்துவிட்டது. அந்த நடுநிசியில் குழந்தைகளும், பெண்களும் திக்குத் தெரியாமல் ஓடினர். ஆடு, மாடு, கன்றுகளும் கூட ஓடின. சிலமணி நேரங்களுக்குள் அக்கினித்தேவன் அந்தக் கிராமத்தை அணைத்துக்கொண்டான். பலர் அக்கினித் தேவனுடன் சங்கமமாயினர். இன்னும் பலர் துப்பாக்கி ரவைகளுக்குப் பலியாயினர். செழிப்பான அந்தக் கிராமம் பாலைவனமாகிக் கொண்டிருந்தது. இந்த எதிர்பாராத தாக்குதலைச் சந்தித்த கிராமத்தின் அரணான சத்யன் மண்ணில் சாய்ந்தான். அவனது குருதி அந்தப் புனித மண்ணோடு சங்கமித்தது. ''வி......சா.........லி!'' அவனது இறுதி மூச்சு அத்துடன் அடங்கிப்போனது.

அடுத்த இரு நாட்களில் மயானமாகிப்போன கிராமத்துக்கு, நடுகாட்டில் தஞ்சமடைந்து உயிர் தப்பி விசாலி வந்தபோது, அவளுக்கு உரிமையாகவேண்டிய சொத்து காலனுக்கும், கிராமத்து மண்ணுக்கும் உரிமையாகிப்போன கதையைக்கேட்டு, கோவெனக் கதறி அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஐயோ! என்ர சத்யன்! என்ர சத்யன்!! நான் என்ன பாவம் செய்தேன்? உடுப்பின்ர நிறம் அழுக்குக் கலர் என்றாபோல மனமும் அழுக்காகப் போச்சாடா? என்ர சத்யன்ர உயிரை எங்கே கொண்டு போனியள்? ஐயோ! என்ர சத்யனுக்கு கங்கைக்குள்ள சீவிக்கிற முதலைகளும் காட்டுக்க சீவிக்கிற மிருகங்களும்தான் எதிரிகள். ஆனால் ஆறு அறிவு படைச்ச மனுசர் எதிரி என்று இப்பத்தான் தெரியும்'' சத்யனின் உடலைக்கூடக் காணாத விசாலி யின் புலம்பலைக்கேட்டு, தப்பிப் பிழைத்திருந்த பசுமாடு ஒன்று கண்களில் ஈரம் செரிந்தது. அதன் பின்னே அழுது அழுது உணர்வுகளும் செத்துப்போனது.

''சத்யன்! உங்கள் விசாலி கோழையாய் சாகமாட் டாள். இந்த மண் விடுதலையடையிறதைப் பார்த்து வந்து உங்களிட்ட சொல்லுவன்''

''விசாலி! உண்மைகள் என்றும் தோற்பதில்லை! அநீதி வென்றதுமில்லை. சத்தியம் சாவதில்லை.'' அவளுக் காக அவன் மானசீகமாய்ச் சொல்வது அவளுக்கு மட்டுமே புரிந்தது.

—'தாகம்'—

★ ★ ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமெங்கும்
தமிழன் பாதச் சுவடுகள்
சாதனைகளினால்
அல்ல—
அகதி முத்திரையால்!
சோகங்களைச் சுமந்த
ஒரு இனத்தின்
வரலாற்றுச் சுவடுகள்
இங்கே அழிக்கப்பட
நாளைய தலைமுறைகள்
தலையில் கைவைத்தபடி
தேசத் தெருக்களில்
பிச்சைப் பாத்திரத்தோடு அலையும்

- தமிழ்ப் புதல்வன் -

11

# தலைமுறைகள்

பொசுக்கும் வெய்யிலில் நடந்து வந்துகொண்டிருந்தார் கந்தசாமி மாஸ்ரர். மறந்து போய் குடையை விட்டு விட்டு வந்ததின் பலன் உடம்பு வியர்வையில் குளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைவிட மடத்தனம் சைக்கிலை விட்டு விட்டு வந்தது. அவரோடு கூட வேலைபார்த்த சின்னத்தம்பி மாஸ்ரரின்ர மகளுக்கு இன்று கல்யாணம். விடிகாலையில் பட்டு வேட்டியும் சால்வையுமாய் புறப்பட்டவர்தான் திருமலை வில்லூன்றி கந்தசாமி கோவில்வரை நடந்துபோய் திரும்பவும் பிரதான வீதிக்கு வருவதென்றால்...... அவருடைய வயது கொஞ்சமும் இடம் கொடுக்கவில்லை.

ஒரு காலத்தில் ஒரு வாத்தியாரின் சம்பளத்தில் ஆறு பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவது என்பது பெரிய விசயமாக இருந்தது. ஆனால் இப்போ அவருக்கு பிச்சல் பிடுங்கல் இல்லாத வாழ்க்கை. மனைவி இராசாத்தியின் சிக்கனமும் அவரது நேர்மையான உழைப்பும் சேர்ந்து இழுத்துப் பறித்து வாழ்க்கை வண்டியை கனதூரம் இழுத்தாயிற்று. ஐந்து ஆண்பிள்ளைகள் ஒரேயொரு மகள் நிகிலா மூத்தவன் சந்திரன். கனடாவிற்கு அகதியாய் போய் இப்போ 'சிற்றி சென்னும்' கிடைத்து வேலையும் கிடைச்சுட்டுது. இரண்டாவது சுந்தரன் இலங்கையில் பிரச்சனைகளில் சிக்குப் படாமலே ஜேர்மனியில் அகதி அந்தஸ்து கிடைத்து விட்டது. மூன்றாவது மகன் பகீரதன் பல நாடுகளை தாவிக் கடந்து நோர்வேயில் அகதியாக வாழ்கின்றான். மகள் நிகிலாவுக்கு மூத்த அண்ணன் சந்திரன் கனடாவிலேயே ஒரு மாப்பிளை பார்த்து வைத்திருக்க, நிகிலா இங்கிருந்து தாலிக் கொடியுடன் பிளேன் ஏற்றப்பட்டவள் தான் இப்போ கனடாவில் குடும்பம் நடத்துகிறாள். கடைசி மகன்மார் பாரதத்தும், வர்மனும், இந்தியாவில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கந்தசாமி மாஸ்ரர் அந்தநாளில கட்டின மூன்று அறை வீட்டில் தற்சமயம் வாழ்வது அவரும், அவர் மனைவி இராசாத்தியும் தான். எட்டு ஜீவன்கள் கலகலப்பாய் வாழ்ந்த வீடு இப்பொழுது, தினசரி தபாற்காரரை எதிர் பார்க்கும் மனங்களுடன் வாழ்கிறார்கள். மாறி மாறி ஒவ்வொரு நாட்டிலிருந்தும் வரும் கடிதங்களே இருவர் மனசுக்கும் பெரிய ஆறுதலாய் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்கு பதில் எழுதுவது இருவரின் முக்கியவேலையாய் இருந்தது. மூத்தவன் எழுதியிருந்தபடி பழைய வீட்டை இப்பொழுது சற்று திருத்தம் செய்து இருந்தார். மூத்தவன் காசும் அனுப்பியிருந்தான். பிள்ளையளின் கௌரவத்திற்கு நல்லது தான், அவர்கள் தகுதியை சற்று உயர்த்திக் காட்ட இது நல்ல விசயமாய் பட்டது. நாலு இடத்திலிருந்து சம்பந்தம் பேசி வந்தாலும் வீடுவாசல் நல்லாய் இருக்க வேண்டும். மாஸ்ரருக்கு வீட்டு திருத்தவேலைகளில் கொஞ்சம் பொழுதுபோயிற்று. இராசாத்தி ஒரு குளிர் சாதனப் பெட்டியும் வாங்கிவிட்டாள்.

''இஞ்சரப்பா இந்த குளிர் பெட்டிக்க சமைச்ச கறிகளை வைச்சுடாதே எனக்கு என்னமோ ருசி கெட்டுப் போற மாதிரி இருக்கு'' சுடச்சுட சாப்பிடுவதில் அவருக்கு ஒரு திருப்தி ''வயசும் போயிட்டுது முந்தி மாதிரி ஓடி ஓடி சமைக்க இயலாது அந்தரத்திற்கு சமைத்து வைத்தால் சூடாக்கிறது தானே'' அவளது பதிலிலிருந்து கந்தசாமி மாஸ்டருக்கு ஒன்றுமட்டும் புரிந்தது அவள் நவீனகாலத் தேவைகளை விரும்புகிறாள் என்பதுதான் தனக்குள் சிரித்துக்கொண்டார், மாஸ்ரர். அவர் கலியாண வீட்டு அழைப்புகட்கு தவறாமல் போய் வந்து கொண்டு இருந்ததிற்கு காரணம் இப்படி போய் வரக்குள்ளதான் நல்ல பெண் பிள்ளைகள் தட்டுப் படுவினம் இவன் சந்திரனுக்கு கெதியில் கால்கட்டு போட வேண்டும். அதோட நிகிலா மாதிரி தாலிக் கொடியைக் கொண்டு கனடா போற அளவிற்கு புத்திசாலித்தனமும் பாசையும் இருக்கவேண்டும். இப்படி ஒரு உள் நோக்கத்துடன் தான் அவர் போய் வந்துகொண்டிருந்தார்.

வியர்வை உடலை நனைக்க வாசல் படியில் ஏறவும் இராசாத்தி அவரை எதிர்கொள்ளவும் சரியாக இருந்தது. ''ஏன் இராசாத்தி ஒரு மாதிரி இருக்கிறாய்?'' மாஸ்ரர் அவளின் முகத்தைப் பார்த்துக் கோண்டே மனதை அறிந்து கொண்டார். அவள் மௌனமாக கடிதம் ஒன்றை அவரிடம் நீட்டினாள். ''ஓ சந்திரனிடம் இருந்து வந்திருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுக்கு ஏன் இவள் இப்படி இருக்கிறாள்? ''விசயத்தை சொல்லன் இராசாத்தி'' ''நீங்களே படியுங்கோ''

அன்பான அப்பா அம்மாவிற்கு,

நீங்கள் நலமாய் இருப்பீர்கள் என்று நினைக்கின்றேன். அம்மா எனக்கு நீங்கள் பொம்பிளை பார்த்து அவளை அனுப்பிவைக்க கஸ்ரப்பட்டு, எல்லாம் பிரட்சினை தானே? இங்கே ஒரு யாழ்ப்பாணத்து பிள்ளைதான், அவர்களும் அகதிகளாய் வந்தவைதான் நல்ல குணம் உங்களுக்கு ஏற்ற மருமகள் தான் 'நட்சத்திரா' அவள் பெயர். வடிவானவள், அடக்கமானவள், இதைவிட என்ன தேவை? எனக்கு பிடிச்சிட்டுது உங்களுக்கு எழுதி ஒரு வார்த்தை கேட்டுவிட்டு (நீங்கள் மறுக்கமாட்டீர் கள் என்று எனக்கு தெரியும்) இங்கேயே திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருக்கின்றேன். உங்கள் ஆசிகளுடன் கூடிய கடிதத்தை எதிர்பார்க்கும்

அன்பு மகன்

சந்திரன்

கந்தசாமி மாஸ்ரருக்கு தலையை சுற்றியது சே என்ன பிள்ளையள் அவன் முடிவு செய்துவிட்டானாம் பிறகு ஒரு கடிதம் ஏன்? விசனப்பட்டார். யாரும் கனடாப் பெட்டையை கட்டப்போறன் என்று எழுதாதவரை மனசில் நிம்மதிப் பட்டது. மூத்தவனைப் பற்றிய கனவுகள் அப்பொழுதே அவரை விட்டு கலைந்து விட்டது. கனநேர மௌனத்தை அவள் தான் கலைத்தாள்.

''அவனின்ர விருப்பப்படி போகட்டும் இன்னும் நாலு பெடியனுகள் இருக்கிறான்கள் தானே?'' அவள் அவருக்கு ஆறுதல் சொன்னாள். இந்த சமுதாயத்தில் ஐந்து பெடிய னின் தகப்பன் அதுகும் பிள்ளைகள் வெளி நாட்டில் என் றால் எத்தகைய மரியாதை? அதை பேணி வைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள முடியாமல் போனது அவருக்கு தாங்க முடியாத கவலை. ஊரறிய தன் மருமகளை பிளேன்லை ஏற்றி அனுப்பும் தன் கனவு நனவாகாததில் பெரும் கவலை அவருக்கு. மாஸ்ரரும் இராசாத்தியும் அன்று முழுவதும் ஒருவரோடு ஒருவர் அதிகம் பேசிக்கொள்ளவில்லை.

அடுத்த நாள் நிகிலாவின் கடிதம் வந்தது. அதில் அவள் எதிர்கால அண்ணி நட்சத்திராவை பற்றி எழுதி இருந்தாள். தானே முன்னின்று திருமணம் நடத்தப்போவ தாயும் பெற்றாரை ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம் என்றும் எழுதி இருந்தாள். கூடவே அவளின் இரு குழந்தை களின் வைதேகி, பிரிந்தாவனனின் போட்டோக்களை அனுப்பி இருந்தாள். தன் பேரன் பேத்திகளை படத்தில் பார்த்து கொஞ்சம் சகஜ நிலைக்கு வந்திருந்தனர். ''என்ன வடிவான பிள்ளைகள் ஒருக்கா பார்க்க கொடுத்துவைக்க இல்லையே'' அவள் ஆதங்கப்பட்டாள்.

''ஏன் கனடா போகப் போறியே?'' கந்தசாமியின்ர கேள்விக்கு அவள் பதில் சொல்லவில்லை அவளுக்கு தெரி யும் அவரது கோபத்தை வெளிக்காட்டும் விதம் இதுதான் என்று.

அடுத்த நாள் வந்த கடிதம் இருவருக்கும் ஒரு பயத்தை ஊட்டியது. ஜெர்மனியில் இருந்து சுந்தரம் எழுதி இருந் தான் இந்தியாவில் படிக்கும் தம்பி பாரத்தை ஜேர்மனிக்கு அழைத்துக்கொள்ளப் போவதாக அந்த மண்ணின் உப்புச் சப்பு — இல்லாத வாழ்க்கை பற்றி சிரித்துப்பேச நண்பர் களோ உறவினர்களோ அருகில் இல்லை என்பது பற்றி இன்னும் என்னவோ எழுதியிருந்தான். ஒரு நவீன வசதி படைத்த ஜெயில் என்று எண்ணத்தோன்றுவதாக குறிப் பிட்டு இருந்தான். அண்ணா செய்தது சரி என்று தனக்கு பட்டதாகவும் எழுதி இருந்தான்.

கந்தசாமி தனது இரத்த அழுத்தம் கூடுவதாக உணர்ந் தார். ''இராசாத்தி எனக்கு ஒரு மாதிரியாக இருக்கு தலை யணை இரண்டை கொண்டுவா இப்படி கொஞ்சம் படுக்கப் போகின்றேன்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன என்ன செய்யுது'' பரபரப்பானாள். ''நீ ஒன்றுக்கும் பயப்படாதே உந்தப் பெடியனுகளை பெத்து வளர்த்ததிற்கு ஐந்து ஆறு நாய்க்குட்டிகளை வளர்த்திருந்தாலும் எம்மைச் சுற்றிக் கொண்டாவது திரியுங்கள்'' ''ஏன் அப்பா இப்படி சொல்லுறியள் எங்களில் பிழையை வைத்துக்கொண்டு அவர்களை நொந்து என்ன செய்வது? பிரட்சினைக் குட்பட்ட பெடியள் உயிர்பாது காப்பிற்காக வெளி நாடுகளுக்கு ஓடியதிற்காக சரியான வயது வந்தபிள்ளைகளையும் பிடிச்சு அனுப்பியது யாற்றை பிழை. கடைசி இரண்டும் தான் சின்னவங்கள் மற்றதுகளை அனுப்பிப் போட்டு நானும் நீங்களும் ஊருக்க வரட்டுக் கௌரவம் பார்த்துக்கொண்டு இருந்தால் ஒரு பிள்ளையின் கலியாணத்தையும் பார்க்க இயலாது. எங்களின் கடமையை மறந்திற்று பெடியன்ர பிழையை சொல்லி திட்டக் கூடா தப்பா'' அனுபவப்பட்ட வாத்தியாருக்கு இராசாத்தி எடுத்துக்கூறினாள். அவர் மௌனமாய் சிந்தனையில் ஆழ்ந்தார்.

''சுந்தரனின் கடிதத்தில் மறைமுகமாய் பொதிந்துள்ள விசயம் தலைக்கு மேல் போகுமுன் ஒரு கடிதம் எழுதிப் போட வேண்டும். இங்கே அவனுக்கு ஒரு பொம்பிளை பார்ப்பதாக எழுதவேண்டும்' என்று நினைத்துக்கொண்டாள். இனி நோர்வேக்காரன் என்ன இடியைத்தரப் போகிறானோ என அச்சமாக இருந்தது.

கொஞ்ச நாளாய் அவனிடமிருந்து கடிதங்களையும் காணவில்லை. பாவம் அவன் இருக்கும் நாட்டில் குளிர் காலத்தில ஒரே பனி மூட்டமாம், சூரியனைக் காண பத்து மணிக்கு மேலாகுமாம். கம்பளிக் கோட்டுக்கள் போட்டு வெள்ளைக் காரனாட்டம் படம் எடுத்து அனுப்பியபோது எத்தனை வீட்டிற்கு அதை காட்டி இருப்பாள். அவனுக்கு அம்மாமேல் அதிக விருப்பம் அவனது எண்ணத்திலேயே அவள் உறங்கிப்போனாள்.

● ★ ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு காலை எழுந்திருக்க முடியாமல் ஒரே சோர்வு, மருமக்கள்கள் வந்து வீட்டை நிரப்புகிற நேரம் தானும் இவரும் இப்படி எத்தனை நாளுக்கு? ஆக குறைந்தது ஒரு பேரப்பிள்ளையை கொஞ்சுகிற நிம்மதி? வீடு கடந்த இரண்டு நாளாய் ஒழுங்கு படுத்தாமல் குப்பையாய் கிடந்தது. நேற்றய மிச்ச சாப்பாடுகள் குளிர்பெட்டிக்க கேட்பாரில்லாமல் கிடந்தது. அதை சூடுகாட்டினால் போதும் இன்றைக்கு சமைக்கிற வேலைகள் இல்லை அவள் முடிவு எடுத்தாள்.

இப்பொழுது தபாற்காரனை காணவே அவளுக்கு விருப்பம் இல்லாமல் இருந்தது. தினசரி ஒரு அதிர்ச்சிதந்து கொண்டிருந்த கடிதங்களால் இருவருமே வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தார்கள். அன்று வந்த கடிதம் இதயமே நிற்க வைக்கும் அளவுக்கு இருந்தது. திருமதி கந்தசாமி என்றிருந்தது இவன் பகீரதனின் எழுத்து அவசரமாய் உடைத்துப் படித்தாள்.

''என்ர அன்பு அம்மாவுக்கு'' என்று ஆரம்பித்து அம்மா அதிர்ச்சி அடையாதீர்கள் அப்பா துள்ளிக் குதிப்பார் அவரை சமாளிப்பது உங்கள் பொறுப்பு. டென்மார்க்கைச் சேர்ந்த வெள்ளைக்காரப் பெண் ஒருத்தி இங்கு வந்த இடத்தில் என்னை விரும்பி விட்டாள். நானும் அவளை விரும்பி கலியாணம் செய்துட்டேன். அவளுக்கு நல்ல குணம். சாறி எல்லாம் கட்ட பழகுகிறாள், எங்கட பொம்பிளைகள் மாதிரி. அவள் பெயர் 'கரோலின்' அவளுக்கு ஒருக்கா மாமா மாமியை பார்க்க வேணுமாம், இலங்கை வந்து திரும்பவும் அவளது நாட்டில் 'செற்றில்' பண்ண உள்ளோம். உங்கள் ஆசியை வேண்டி நிற்கும் அன்பு மகன்,

பகீரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற் வாசலிலேயே சாய்ந்து கொண்டாள். அவளுக்கே தலையை சுற்றியது. இப்ப இந்த மனுசனிட்ட எப்படிக் காட்டுறது. சின்னவங்கள இந்தியாவிலிருந்து கூப்பிடலாம், மன ஆறுதலாக இருக்கும், அவன்களும் வட இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் போயிட்டாங்களாம் கடிதம் பதினைந்து நாளுக்கு போடவேண்டாம் என எழுதி இருந்தாங்கள். இது என்ன சோதனை? கடவுளே ஆறை பெற்றுப்போட்டு இப்படி நிம்மதி இல்லாம உதவிக்கு ஒரு பிள்ளையும் இல் லாத ஒரு நிலை எவருக்கும் வரக்கூடாது.

''என்ன இராசாத்தி வாசலிலேயே நின்றுட்டாய் என்ன இது கடிதம்? யாரிட்ட இருந்து......'' இனி அவரிட்ட ஒழிக்கிறதுக்கு வழி இல்லை. கடிதத்தைக் கொடுத்தாள். கடிதத்தை வாசித்துவிட்டு நெஞ்சை பிடித்துக்கொண்டு படுத்தவர்தான் எழுந்திருக்கவில்லை. இராசாத்தியின் அழுகைச் சத்தம் கேட்டு அயலவர்கள் தான் வந்தார்கள். உற்றாரும் உறவினரும் நண்பர்களும் வந்திருந்தார்கள். அவர்களே கடைசிக் காரியத்திற்கு ஆயத்தம் செய்த னர். மத்தியான செய்தியின் பின் மரண அறிவித்த லில் அவரின் பெயரையும் வாசித்தார்கள்.

இளைப்பாறிய ஆசிரியர் கந்தசாமி காலமானார். இவர் இராசாத்தியின் அன்புக்கணவரும் சந்திரன் (கனடா), சுந்தரன் (ஜேர்மனி), பகீரதன் (நோர்வே) பாரத்(இந்தியா), வர்மன்(இந்தியா), நிகிலா (கனடா, ஆகியோரின் அன்புத் தந்தையும். நட்சத்திரா (கனடா) கரோலின் (நோர்வே), தீபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும். பிரிந்தாவனன், வைதேகி ஆகி யோரின் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிரதான வீதியிலுள்ள அவரது இல்லத்தி லிருந்து திருமலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல் லப் படும்.

வானொலி அறிவித்தல்கள் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.........

● ● ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழனின்
தலைவிதி
கொழும்பிலே
சிங்களத்திலாலும்
டில்லியிலே
ஹிந்தியிலாலும்
எழுதப்படுகிறவரை
இந்த—
கண்ணி வெடிகளும்
இந்த—
மரணங்களும்
தொடர்கதைதான்.........

-தமிழ்ப் புதல்வன்-

12

# தலைவிதி

இருள் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருக்க கீழ் வானம் சிவப்பேறிக் கொண்டிருந்தது. என்றாலும் பனிக்குளிர் உடலை சில்லிடவைத்துக்கொண்டிருந்தது பனிமுத்துக்களில் மூழ்கிய மலர்கள் பூஜைக்கு உரியனவாய் பரிணமித்துக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரு சோம்பல் முறித்தபடி படுத்திருந்தாள். சுவர் மணிக்கூடு நான்கு மணியோடு நின்றிருந்தது. 'எல்லாம் புதுசில ஒழுங்காய்த்தான் வேலைசெய்யும்...' மனதிற்குள் நினைத்தவள் ரேடியோவை திருப்பினாள்.

''வடக்கு, கிழக்கு மாகாணங்களை மேற்கோள் காட்டி 'லங்கா புவத்' அறிவித்தது'' செய்தி வாசிப்பவர் தன் கடனை ஒழுங்காக செய்து கொண்டிருந்தார். கேக்கிறவன் 'விசரன்' என்ற நினைப்பில் 'லாங்காபுவத்' கடந்த பல வருடங்களாக சொல்கிற விசயங்களை விடாமல் சொல்லிக்கொண்டிருந்தது. போதாக் குறைக்கு இப்பொழுது 'மாநிலச் செய்திகள்' லங்கா புவத்திற்கு ஈடு கொடுத்து பணிகளை தொடர்கிறது.

''ம்...'' சாருவிடம் பெருமூச்சு வெளிப்பட்டது. ''அம்மா நான் இன்றைக்கு ஏ. ஜீ. ஏ. யோட சாம்பல் தீவு போக வேணும்; அகதிகள் நிவாரண விடயமாக'' அம்மாவுக்கு முன் அறிவித்தல் கொடுத்தாள்... ''பொம்பிளை விதானை இல்லை என்று அழுகுதே பிள்ளை... உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. உன்ர அப்பா விட்ட இடம் உன்னை என்னட்ட விட்டுட்டு அந்த மனுஷன் போயிட்டுது.'' ஊர் கிடக்கிற நிலைமையில் பொம்பிளைப் பிள்ளைகள் தனியாக நடமாட முடியாத பிரச்சனைகளால் ஒவ்வொரு தாயின் புலம்பலும் இப்படித்தான் இருந்தது.

'' நான் என்ன தனியவே போறன். தகப்பன் மாதிரி ஏ. ஜீ. ஏ. அவரோடதானே போறன் இந்த அம்மாவுக்கு எல்லாத்துக்கும் பயம்தான்.''

''இஞ்சபார், போனன், வந்தன் என்று இருக்க வேணும். சாரு, போற இடத்தில உதவாக்கரை, அரசாங்கங்கள்ர கதையும், உருப்படியில்லா இயக்கங்கள்ர கதையும் உனக்குத் தேவையில்லை. என்ன நான் சொல்லுறது கேக்குதே'' அம்மா சற்று காரமாகச் சொன்னாலும் அதன் உள்ளே பொதிந்துள்ள பொருளை சிந்தித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தெரியாவிட்டாலும், இரண்டு வரியில் அம்மா சொல்வதில்தான் எத்தனை உண்மைகள்?

ஒரு காலத்தில் ஏதாவது ஒரு இயக்கப் போராளியை சந்தித்து சில நிமிடமாவது பேச, எத்தனை ஆசைப் பட்டிருக்கிறாள் சாரு? ஒவ்வொருவரும் தன் அன்னை, தந்தை, அக்கா, தங்கை, இப்படி இரத்த உறவுப் பந்தங்களை அறுத்து எறிந்து விட்டு பிறந்த மண்ணின் விடுதலைக்காக, தன்னுயிரை துச்சமாக மதித்து போராடும் வீரச் செம்மல்கள் அல்லவா? அந்தத்தியாகத்திற்கு அந்த வீரத்திற்கு அவள் எப்பவும் தலை வணங்கினாள். பல போராளிகளின் மரணங்கள் அவளை நிலை குலைய வைத்தது உண்மை. சிலரின் சாதனைகளைக் கேட்டு மெய் சிலிர்த்திருக்கிறாள் சாரு. ஆனால் இன்றைய கால கட்டத்தின் நிகழ்வுகளை நினைத்து ஏன் இந்தக் கொடுமைகளைப் பார்க்க உயிரோடிருக்கிறோம் என்று விசனப்பட்டிருக்கிறாள். சாருவின் மனம் அறுபட்ட பட்டமாய் திசைதெரியாமல் போக ஜீப் அலஸ் தோட்டத்தை கடந்தது.

மீண்டும் அவள் மனம் கணதூரம் சென்றது. நேற்று இரண்டு இந்திய இராணுவத்தினர் ஒரு தமிழனிடம் சொன்ன வசனங்களைக் கேட்ட மனசை வேதனை பிசைந்தது. ''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம், என்றார் பாரதியார். அவருடைய கனவு பலித்திருப்பதைப் பாருங்கள்'' என்று, பாரதியார் இரு நாட்டுக்கும் தொடர்பு படுத்தி நல்லுறவை நினைத்துப் பாடினாரே தவிர வடக்கு கிழக்கின் இன்றைய நிலை அந்த தீர்க்கதரிசி கவிஞனுக்குக் கூட தெரிந்திருக்க நியாயமில்லை.

இத்தனை நினைவோட்டத்தின் மத்தியிலும் 'விக்ரம் வருவார்' என்ற நினைப்பு மனசின் ஒரு மூலையில் ஒரு சின்னச் சந்தோஷத்தை தந்தது.

''சாம்பல் தீவு விதானையார் விக்ரம் வருவார். நீ அதுக்குத்தான் சந்தோஷப்படுகிறாய்'' மனசு சொன்னது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்ன விசர் நினைவு: நான் அவரோட சிந்தனை, திறமை என்னை மாதிரியே சரி பிழைகளை நறுக்கு தெறித்த மாதிரி கதைக்கிறதிற் திறமானவர், ஒரு அறிவுஜீவியை சந்திக்கிற பூரிப்பைவிட வேற களங்கமில்லை?.' இப்படி அறிவு இடித்துக் கூறியது.

இரண்டில் எது சரி பிழை என்று குழப்பமாயிருந்தது. அவளுக்கு.

தன் அலங்காரத்தை மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொண்டாள். உடலெல்லாம் ரோஜாப் பூப்போட்ட சேலை நீண்ட கூந்தலில் ஒரு ரோஜா. கால ஓட்டத்தில் சாந்துப் பொட்டையே மறந்து போனதால், ஒட்டவும் கழட்டவும் இலகுவாக ஸ்டிக்கர் பொட்டிற்கு பழக்கப்பட்டிருந்தாள் சாரு. "இப்ப ஜீப்பில் போறதும் பயம்தான் யார், யாருக்கோ வைககிற 'லேண்ட் மைண்டில்' யாரோ அகப் படுகிறான்" ஏ. ஜீ. ஏ. யின் பேச்சிற்கு ஒரு 'உம்' கொட்டி விட்டு யோசனையில் ஆழ்ந்தாள்.

ஒரு இயக்கம் மற்ற இயக்க உறுப்பினரை பரம வைரியாய் நடத்தும் போக்கு.

சகிப்புத் தன்மையும், எதிர்கால சிந்தனைகளுமற்ற இளைஞர்களின் போக்கு.

சில மாதங்களுக்கு முன் தன்னை அணு அணுவாய்ச் சாவடித்து சின்னஞ் சிறு வயதிலேயே உயிர்விட்ட தியாகி திலீபனின் கடைசி நாட்கள். மக்களின் உணர்ச்சிக் கொந் தளிப்புக்கள்.

ஒற்றுமையாய் வாழ்ந்தால் இந்த உலகத்தையே ஆட்டி வைக்கும் அளவிற்கு அதிக அறிவின் காரணமாகவோ என் னவோ, ஒருவரை ஒருவர் அடிபட்டுச் சாகும் சாபத்தை நிரந்தரமாகப் பெற்ற தமிழ் சமுதாயத்து தலையெழுத் துக்கள். ஒற்றுமைப்படுத்தி வைத்தால் நட்டம் நமக்குத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வாடாவிருக்கும் அரசியல் தந்திரிகள். எந்த நோக்கத்திற்காக புனிதமான இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டதோ? உயிர்ப் போராட்டங்கள் நடந்ததோ? அவற்றை மறந்து எதையோ நோக்கி புதுமைப் புரட்சி செய்யும் வியப்புக்குரிய இளைஞர் கூட்டத்தின் செயல்கள்.

தங்கள் வாகனங்களில் கட்டியுள்ள வெள்ளைக் கொடிக்கு அர்த்தம் தெரியாத இந்திய இராணுவத்தின் அறிவுத்திறன், வீரச்செயல்.

''யாராயிருந்தாலும் நம்மட பொடியல் அடிபட்டுச் செத்தாப் பிறகு கேக்க ஆக்கள் இல்லாமல் கிடக்கும் தமிழ்ப் பெம்பிளைகளுக்கு யார் காவல்?'' இப்படிப் புலம்பும் தாய்க்குலத்து குமுறல்கள்.

ஜீப் குலுங்கி நின்றது!

சாரு. தன்னிலை அடைந்தாள். இவர்களை எதிர் கொள்ள விக்ரமே வந்திருந்தார். மெல்லிய இள நீல சேட்டும். கறுப்பு காற்சட்டையும் நெற்றியிலே சின்னத் திரு நீற்றுக் கீறு. நேர்த்தியாக வாரப்பட்ட தலை மயிர். முக மெல்லாம் சிரிப்பு.

''குட்மானிங் சார்.''

''குட் மானிங் சாரு'' பதிலுக்கு குட்மானிங் சொன்னார்கள்.

பார்க்கவேண்டிய பைல்கள் நிவாரண நிதிகள். பர்மிட்டுக்கள். அவற்றிற்கு அனுமதி கையெழுத்துக்கள். இப்படி அவன் வேலைகளை முடித்த நேர்த்தி ஏ. ஜீ. ஏ. க்கு மட்டுமில்லை. சாருவுக்கே மகிழ்ச்சியாய் இருந்தது. ஏ. ஜீ. ஏ. சில ஊர்ப் பெரியவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்தார்.

''சாரு, இன்றைக்கு நல்ல வடிவாய் இருக்கிறியள்...''

சாருவின் முகம் சிவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சாரு எனக்கு சினிமா வசனம் பேசத்தெரியாது. நேரடியாக சொல்லுறன் உங்களை நான் விரும்புறன்''

அவள் மனம் சிறகடித்து தொலை தூரம் பறந்து சென்றது. அவள் சிரித்தபடி மண்பார்த்தாள். அவள் முகம் குங்குமமாய் சிவந்திருந்தது.

'ஒரு பொம்பிளையின்ர முடிவுக்கு அவள் வாய் திறந்து பேசத் தேவையில்லை.' அவன் புரிந்து கொண்டான்.

''சாரு நீங்க எதையோ சொல்ல நினைக்கிறீங்க.''

என்ன புத்திசாலி. என்ர மனசை படம் பிடித்தமாதிரி. அவள் வியந்தாள். சொல்லுங்கள் சாரு.''

''விக்ரம், என்ற வாழ்க்கையில இணைகிற துணை, வெறும் ஆசா பாசங்களுடன் நின்று விடாமல், பிறந்தோம். வாழ்ந்தோம் என்றிராமல் எங்கட பங்களிப்பு, ஏதோ ஒரு விதத்தில எங்கட சமுதாயத்திற்கு சேர வேணும்-''

''நிச்சயமாய், சிந்தனைச் செல்வம் மிக்க ஒருத்தி எனக்கு கிடைக்க நான் கொடுத்துவைத்திருக்கவேண்டும்.''

எங்கேயோ வெடித்த கண்ணி வெடி சாம்பல் தீவையே அதிர வைத்தது, மட்டுமில்லை. இருவரின் கதைக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. ஏ. ஜீ. ஏ. அவசரமாக வந்தார்.

''சாரு கிட்டடியில வெடிச்ச சத்தம் மாதிரி கேட்டது.''

''ஓம் சேர், பார்த்துப்போகலாம். அவசரப்படாதீங்க.'' விக்கிரம் சொன்னான்.

''அம்மா பயப்படுவா, நான் போகவேணும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ர வீட்டயும் யோசிப்பினம்.''

''சேர் இந்திய இராணுவம் இலங்கை ராணுவத்திற்கு சளைத்ததில்லை. யாழ்ப்பாணத்து நிலமைகளை கேள்விப் படுறியள். அவசரப்படாதீங்க.''

''ஓம் விக்ரம், என்றாலும் இஞ்ச ஒன்றும் நடக்கயில்லை, ஏதோ கடவுள் விட்டவழி. இந்தப் பிள்ளையை ஒழுங்கா வீடுசேக்கிறது தான் பெரிய வேலை'' அவரது பொறுப் புணர்ச்சி அவளுக்கு நம்பிக்கை யூட்டியது. அவன் மனம் சாருவுக்காக பிரார்த்தித்தது.

சாரு சோர்ந்த முகத்தோடு ஜீப்பில் ஏறினாள். ஜீப் வேகமாய் பறந்தது. பாலத்தடி வந்தபின்தான்...... எதிரே தலைப்பாக்களும் மீசைகளுமாக உக்கிரமாக நிற்கும் இந்திய வீரர்களைக் கண்டு மனம் திடுக்கிட்டது.

''ஸ்டொப்''

அவர்கள் கத்திய சத்தத்திற்கு ஜீப் ஒரு குலுங்கு குலுங்கி நின்றது. ஏ. ஜீ. ஏயை தொட்டுத் தொட்டு செக் பண்ணி னார்கள். தடவிப் பார்த்தார்கள். அடுத்து சாரு, தோளில் கையை வைத்தான் ஒருவன். அவவளவு தான். ''டேய்'' எடு கையை ஈழத்துப் பெண்கள் கௌரவமாக மண்ணுக்கு உரமாவார்களே தவிர, உங்களிட்ட தங்களை இழக்காத தமிழச்சிகளடா நாங்கள்''

அவள் கண்கள் அனல் கக்கின. பாஷை புரியாவிட் டாலும் ஏசுவது புரிந்தது அவனுக்கு. கை கட்டி, வாய் பொத்தி, அடிவாங்கி வெய்யிலில் நின்ற கூட்டம் பயத்தில் நின்றனர். விழிகள் வியப்புடன் அவளைப் பார்த்தன.

மிக உக்கிரமாக ஒருவன் அவள் கையைப்பிடித்தான். அவள் ஒரு கையால் அவனை அறைந்தாள். அடுத்த நிமி டம் ''டுமில்......டுமில்'' துப்பாக்கி ரவைகள் நெஞ்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடறுத்தது. குருதி வழிய மண்ணில் சாய்ந்தாள் சாரு. பத்துப் பேருக்கு ஒருவனாக நின்ற ஒரே ஒரு தமிழ் இந்திய வீரனின் விழிகள் கலங்கி சில சொட்டு நீர் மண்ணில் தெறித்தது. அவனது......கையில் துவக்கும், உடம்பில் இராணுவ உடையுமாக, மனதைக் கட்டிப்போட முனைந்தாலும்.........

இரத்தம் கொதித்தது. ஆனால் அந்த தமிழனின் கரங்களும் ராணுவத்தின் கட்டளைகளால் கட்டப்பட்டிருந்தது ஏ. ஜீ. ஏ. பிள்ளையை பறிகொடுத்தவராக கதறினார். அங்கே கன்றை இழந்த பசு, கன்று வராததால் கதறிக் கொண்டிருந்தது.

மேலே...............

ஏற்கனவே எழுதிவிட்ட ஈழத்தமிழனின் தலைவிதியை மாற்ற பிரம்மா தீவிர ஆலோசனை செய்து கொண்டிருந்தார்.

❋ ❋ ❋

— கோணைத் தென்றல் —
(ஆண்டுமலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பூ அழுகிறது
ஒரு பூ அழுகிறது
காதல் பூ ஒன்று
உலாக்காக அழுகிறது!
கனவெல்லாம் தினம்
கண்ணீரில் நனைகிறது.
கவிதையும் கூட
காதலினால் துடிக்கிறது.
இங்கு பூக்களின் மீது
புயல்வந்து போர்தொடுக்க
இதயம் மீது
இடிவந்து விழுகிறது!

— *தமிழ்ப் புதல்வன்* —

# எப்பொழுதுங் கவலையிலே....!

பரத்தின் விசும்பல் ஒலி விட்டு விட்டு ஒலித்தது. அதிலே தொனித்த துயரம்! வேதனை! நெஞ்சைத் தொடுகிற சோகம். அப்பப்பா! அதை அவன் போன்ற அடுத்த நேர சாப்பாட்டிற்கு வழியற்ற ஒரு ஏழையால் தான் உணரமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பத்து வருட உலகவாழ்க்கை அந்த பிஞ்சு நெஞ்சுக்கு போதும் போதும் என்றாகி விட்டது. தினசரி எதிர் நீச்சல்......! அந்த சின்னஞ் சிறிய சைக்கிள் கடையில் பகல் முழுவதும் வேலை. தாயின் அணைப்பிலும், தந்தையின் பாசத்திலும் சிக்கித் தடுமாறி சிட்டுக் குருவியாய் பறந்து திரிய வேண்டிய வயது. மூச்சைப் பிடித்து கையை மடித்து, நீட்டி, சைக்கிளுக்கு காத்தடிப்பதென்றால்......! அவனது தோல் மூட்டில் ஏற்படும் நோ பகலில் தெரிவதில்லை. இரவில் துண்டை விரித்துப் படுத்தால்...... உடல் நோவின் காரணமாக எத்தனை நாட்கள் நித்திரை இன்றி தவித்திருக்கிறான், பரத். இதமாக அவன் தோளில் ஒத்தனமிட அன்னையில்லை. பாசத்தைப் பொழிய தந்தையில்லை ஒருவருமில்லாத ஏழையாக இந்த உலகத்தில் உருவாகி விட்டால் வாழ்க்கைப் பாதை எத்தனை கரடு முரடாக அமைந்து விடுகிறது.

புத்தக பையை தோளில் மாட்டிக்கொண்டு தண்ணீர் போத்தலை ஒரு கையில் பிடித்தவாறு காலைப் பொழுதிற்குரிய உற்சாகத்துடன் வீதியில் சாரி சாரியாக செல்லும் பள்ளி மாணவர்களை தினசரி ஏக்கத்தோடு பார்ப்பான், பரத். அம்மாமாரின் கைகளைப் பிடித்தவாறு காலைப் பொழுதில் செல்லும் சிறுவர்கள்! அப்பாமாரோடு சைக்களின் முன் ஒய்யாரமாய் அமர்ந்து செல்லும் சிறுவர்கள்...... எல்லாம் தினசரி அவன் கண்ணில் தெரியும் காட்சிகள் தான். ஆனால் இதைப்பற்றி கற்பனைப் பண்ணிக்கூட பார்க்க முடியவில்லை, கண்களை அந்த இடத்திலிருந்து எடுத்து தன்னை ஒருமுறை பார்த்துக் கொள்வான். எண்ணையும் ஏதேதோ அழுக்குகளையும் பலமாக நம்பியிருக்கும் அவனது சேர்ட், அதுகூட உருப்படியாயில்லை. போன தீபாவளிக்கு புதுச் சட்டையைக் கண்டபின் இன்றுவரை காணவில்லை. பரத்தின் விழிகளும் மனசும் நிம்மதியின்றி தவித்தாலும் அவனது பிஞ்சுக் கரங்கள் மும்முரமாக வேலையில் ஈடுபடத் தான் செய்தன.

யாராவது அவனை ஏமாற்றி விட்டால் அவன் வாயில் சர மாரியாக வரும் கெட்ட வார்த்தைகள்! எங்கேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றானோ அது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். கெட்ட வழிகளை சீக்கிரம் பற்றிக் கொள்ளும் வயதல்லவா? இந்த வயதில் தானே நிச்சயம் பாதுகாப்புத்தேவை!

அவனுக்கு இருப்பது சிற்றன்னை என்ற உறவுப்பந்தம் தான். அந்த உறவு—அவனது ஊதியத்திற்கும், சற்று சுய நலத்துக்குமாக செயல்படும் உறவு. இந்தச் சிற்றன்னையிட மிருந்து வருடா வருடம் ஒரு புத்தாடை கிடைக்கும். இரண்டு நேரச் சாப்பாடு கிடைக்கும். இரவுச் சாப்பாடு......? அது பெரிய பிரச்சனை அவனுக்கு. தினசரி கடைக்கார ருக்கு கணக்குக் காட்டி விட்டு அவர் தரும் இரவுச் சாப் பாட்டிற்கான ஒரு ரூபாயில் இந்த நாளில் எதை வாங்கித் தின்பது? பேக்கரியை எட்டிப்பார்த்தால் கண்கள் அகல விரி யும் வாய் திறந்தபடியே இருக்க கண்கள் ஆபூர்வமாகப் பார்க்கும். விதம் விதமாக உணவுப் பண்டங்கள் கண்ணா டிப் பெட்டியில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். வண்ண வண்ணமாக கேக்குகள், பணிஸ்வகைகள், பிஸ்கட்வகை கள், இவை எல்லாவற்றையும் ஆசைதீரப் பார்த்துவிட்டு கடைசியில் ஒரு றோஸ்பாணோடு சைக்கிள் கடைக்குத் திரும்பிப்போவான், பரத்.

பக்கத்துக் கடையிலிருந்து வந்த நெய்மணம் மூக்கைத் துளைத்தது. நோன்புக்காரர்கள் வகைவகையாய் சமைத் திருக்கிறார்கள் போலும். ஓயாத வியாபாரத்தில் நோன் புச் சாப்பாட்டைக்கூட பின்போட்டுவிட்டு மும்முரமாக வியாபாரத்தில் கண்ணாயிருந்தார் கடைமுதலாளி. இந்த உலகில் பணம் பத்தும் செய்யுமே. பரத் றோஸ்பாணை ஒருபுறமாக வைத்துவிட்டு அவனது நண்பன் கிரியோடு பெரியமனிதத் தோரணையில் படவிமர்சனம் செய்து கொண்டிருந்தான். எப்போதோ ஒரு படம் அதுவும் ஒரே ஒருபடம், ரஜனியின் படம் பார்த்ததிலிருந்து அவரையே தன் வீர சாகசங்களுக்கு மானஸீக குருவாக மதித்துவந் தான் பரத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிக்கும், பரத்திற்கும் விமர்சனம் விவாதமாகி இருவரும் கைவரிசையை காட்ட ஆயத்தமாயினர். கிரிக்கு வந்ததே கோபம். பவுத்திரமாக சுற்றி வைக்கப்பட்டிருந்த றோஸ்பாணை தூக்கி வீசிவிட்டான். அதை வீதியில் விழாதவாறு லாவகமாக பிடித்துக்கொண்டது தெரு நாய் ஒன்று. தெரு நாய் ஓட்டம் பிடிக்க அதன்பின்னே ஐந்தாறு நாய்கள் படையெடுத்தன. பரத்தின் ஆவேசம் அடங்கி, முட்டிக் கொண்டுவந்தது, அழுகை. கிரி வேகமாக ஓடிவிட்டான். பரத் பசியில் ஓவென்று அழுதான். அழுதபடியே பக்கத்து கடையைப் பார்த்தான். இன்னும் கடை மூடவில்லை. காற்றில் கலந்து வந்த நெய்ச்சோறு மணம் கமகமத்தது. வாயில் எச்சில் ஊற்றெடுத்தது. பரத்தின் விசும்பல் சத்தம் கேட்டு கடைக்காரரர் வெளியே வந்து பார்த்தார். சின்ன விசாரணை போட்டுவிட்டு மீண்டும் கடைக்குள் புகுந்து கொண்டார். இப்போ பரத்திற்கு மகிழ்ச்சியாக இருந்தது. இந்த றோஸ்பாணை நினைத்து ஏன் அழுவான்.? கடைக்காரரர் நிச்சயமாய் நெய்சோறு தருவார்! என்று நினைத்தபடி கடைவாசலில் அமர்ந்து கற்பனையில் மிதந்தான், பரத். கடைக்காரரர் எல்லாக் கதவுகளையும் பூட்டி விட்டு ஒருபலகையை மட்டும் திறந்து வைத்திருந்தார். இனியென்ன ''பரத் இந்தா இதைக் கொண்டுபோய் சாப்பிடு.'' என்று தருவார் என்று எதிர்பார்த்திருந்தான் பரத்.

மணி ஒன்பது அடித்தது. கடைக்காரரர் கடையை உட்புறமாக இழுத்துச் சாத்திக்கொண்டார். பரத்தின் நெஞ்சில் யாரோ அடித்த உணர்வு. கண்கள் கலங்கி ''பொல பொல'' வென நீர்த்துளிகள் மண்ணில் சிந்தின. அடுத்தவனுக்கு இருப்பதில் கொடுத்துத்தின்னத் தெரியாத இதயமற்ற மனிதர்களுக்கு விரதமும், கோயிலும், ஆண்டவனும் எதற்காக? சின்ன மனம் அலுத்துக்கொண்டது. இல்லாதவன் என்றைக்கும் இந்த உலகில் தேய் பிறையாக இருக்க வேண்டியதுதான். பரத் தள்ளாடியபடி துண்டை விரித்துப் படுத்துக்கொண்டான். நீண்ட நேரமாக நெய்மணம் அவன் மூக்கில் கமகமத்தது. அன்பு, பாசம், இரக்கம் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் பன்பு: இவற்றைப் பெறவழி தெரியாதவனின் இதயத்தில் அந்தக் குணங்கள் எப்படி வளரமுடியும்?

இந்த உலகத்தின் இயக்க மெல்லாம் ஒன்றே ஒன்றில் தான் தங்கியிருக்கிறது. பணம்! அது இல்லாத குடும்பத்தில் உருவாகும் குழந்தைகள் ஒவ்வொருவரும் தமது சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் ஏக்கத்துடனேயே வாழ்நாளைக் கழிப்பவர்கள். ஒரு மனிதன் தன் தேவைகளைப் பெற எப்படியெல்லாமோ முயற்சிக்கிறான். அது முடியாதவிடத்து ஒன்று சோர்ந்து போகிறான். இன்னொன்று, ஏதாவது குறுக்குவழியை நாடுகிறான். மூட்டை மூட்டையாய் ஏக்கங்களை சுமந்து வாழும் பரத்திற்கு எத்தனை விதமான ஆசைகள்......? பாவம் தன்னிச்சையாக சிந்திக்கத் தெரியாத வயது ஆனாலும் காலச் சக்கரத்தோடு அவனும் சுழல்கிறான்,

★ ● ★

அதே சைக்கிள் கடை, காத்தடிக்கும் கைகள், எண்ணெய் வழிந்த முகம்! ஆனால் உடல்! அது ஏழு வருடத்துக்குள், நிறைய வித்தியாசம் காட்டியது. உடல் மெலிந்திருந்தாலும் இளமைக் களை முகத்தில் நிலைத்திருந்தது. பரத்துக்கு வெட்கம் கூட ஏற்படுகிறது. மாலை நேரத்தில் அவன் வயதுப் பையன்கள் ஜாலியாக கதைத்து மகிழ்வதையும், டெனிம், கொட்ரோய் என்று வகையாய் உடுத்தி மகிழ்வதையும் பார்க்க வெட்கமும் வேதனையும் அவனுள் கிளர்ந்தெழும்.

சிட்டுக்குருவிகளாக வீதிகளில் உலவிவரும் டீன் ஏஜ் பெண்களைப்பார்க்க அவனுக்குள்ளே ஒரு தாழ்வுணர்ச்சி, அவர்கள் தன்னைப் பார்க்க மாட்டார்களென்று தெரிந்தாலும் சற்று நேர்த்தியாக உடுத்தவேண்டும் போல ஒரு ஆசை. அந்தப்பெண்கள் தன்னைப் பார்க்க வேண்டும்போல ஒரு ஏக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் அப்படித்தான் தூரத்தில் இரண்டு பெண்கள் சைக்கிளை உருட்டியபடி வந்தார்கள். அவனது கடைக்குள் நுழைந்து ''சைக்கிளுக்கு காத்தடிக்கணும்'' ஒருத்தி சைக்கிளை நிறுத்திவிட்டுச் சொன்னாள். மற்றவள் தனது சைக்கிளைப் பிடித்தபடி டியுசன் கிளாசில் நடந்த சம்பவங்களை விவரித்துக்கொண்டிருந்தாள்.

''ஏண்டி நிரஸ்மி இந்தக் கடைக்குக்கிட்ட வந்த உடனே வியாதி பிடித்திட்டுது அவள் சொல்லிவிட்டுச் சிரித்தாள்.

''ஒன்ர சைக்கிளுக்கு இந்தக் கடையோட லவ்டி'' நிரஷ்மி பகிடியாக சிரித்தாள். பரத்தின் கைகள் வேகமாகச் செயல்பட மறுத்தன. முதன் முறையாக நிரஷ்மியை நிமிர்ந்து பார்த்தான். ஒரு செக்கன்தான், அவள் வதனம் ஒரு முழு நிலவு! காத்தடிப்பதுபோல அவளது பட்டுப் பாதங்களை பல நிமிடம் பார்த்தான். சந்தன நிறப்பாதங்கள். அதே நிறத்தில் சாண்டில்ஸ். சிவப்பு கியூடெக்ஸ். அவள் முகத்தை ஏறிட்டுப்பார்க்க ஒரு செக்கன்தான் கிடைத்தாலும், அந்த அழகான பாதங்களையாவது நாளெல்லாம் பார்க்க முடியாதா? அவனுள் ஏக்கம் எழுந்தது.

''சீக்கிரம் நேரம் போவுது'' அவசரப்படுத்தினாள், நிரஷ்மி.

''நாளைக்கு ஆறுதலாக கொண்டு வாங்கோ, ஒரு பெச் போடணும். செய்து தாறன்.'' சொல்லிவிட்டு அவள் தந்த ஐம்பது சதத்தை பெற்றுக்கொண்டான். அந்த ஐம்பது சதத்தை பெற்றுக்கொண்ட ஒரு வினாடி அவளது தளிர் விரல்களும், அவனது முரட்டுத்தனம் நிறைந்த கையில் காய் காயாய் இருந்த எண்ணெய் படிந்த விரல்களும் தொட்டுக்கொண்டன. ஒரு மின்சாரத் தாக்கு—அவனுக்கு மட்டும்தான்.

''தாங்ஸ்'' சொல்லிவிட்டு 'ஜிவ்' என பறந்துவிட்டாள். நிரஷ்மி. ஆனால் அவள் தந்த நினைவு. ''அவளுக்கு தினசரி இந்த சைக்கிள் தொந்தரவு கொடுக்க வேண்டும்.'' என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவனை வேண்டிக்கொண்டான், பரத். இத்தனை நாள் ஏதேதோ கவலைகளுடன் வாழ்ந்த பரத்தின் மனசுக் குள்ளே புதிதாக ஒரு பிரச்சனை. இது வெறும் நிழல்தான். நிஜமாகாது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தாலும் வாய்.........!

''நிரஷ்மி! நிரஷ்மி! நிரஷ்மி''!! என ஓயாது முணு முணுத்தது.

எத்தனை மென்மையான தோற்றம்.? காற்றுக்கு பறந்து பறந்து நெற்றியை கொஞ்சுகிற கேசம் நீள நீள மான விரல்கள்! எவ்வளவு அழகு? அந்த உருவத்தை நினைத் தாலே களைப்பெல்லாம் உடலை விட்டு, பறக்கிற உணர்வு. அந்த சம்பவத்தின் பின் மாலை நேரங்களில் முகத்தைக் கழுவி, பவுடர் கொஞ்சம் பூசி, தலையை வாரிவிட்டு ஓரளவு தன்னை அழகாக்கிக் கொண்டான் பரத். மாலை யிலே அந்த வீதியில் பறந்து செல்லும் நிரஷ்மியை தவறாது பார்ப்பதில் அவனுக்கு ஒரு திருப்தி. நிரஷ்மி தந்த குளிர்ச்சி யான நினைவுகளுடனேயே மட்டும் வாழ நினைத்தான், பரத்.

திடீரென கொஞ்சநாளாக நிரஷ்மியை காணவில்லை. அவனுக்கு சொல்ல முடியாத வேதனை. ஒருநாள் நிரஷ்மி யின் நண்பி. அந்த கடைக்கு வந்தபோது தயங்கித் தயங்கி கேட்டான் பரத்.

''உங்க சினேகிதியை காணவில்லையே......''

''ஓ, அவளுக்கென்ன? இப்போ யூனிவசிட்டிக்கு போறதுக்கு ரெடியாகிக் கிட்டிருக்கா, பரீட்சையில் திறமை யான சித்தி......''

பரத்துக்கு ஒன்றுமட்டும் புரிந்தது. ஏழைகள் ஆசைப் படவே கூடாது. தகுதியும் பணமும் இருந்தால் என்றோ ஒருநாள் அடையமுடியும். எல்லாவற்றுக்கும் ஆண்டவனைத் தான் நொந்துகொண்டான் பரத். ஏன் ஏழைகளைப் படைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்? அதுதான் போகட்டும், ஏன் ஆசைகளைப் படைத்தாய்? ஏன் உணர்ச்சிகளைப் படைத்தாய்?

★ ● ★

அன்று எதிர்பாராத விதமாக நிரஷ்மியை கண்டுவிட்டான் அதுவும் தன்னந்தனியாக ஒற்றையடிப்பாதையில்! தன்னை மறந்து கூப்பிட்டான் பரத்.

''நிரஷ்மி,!. . . நிரஷ்மி. . . .'' அத்தோடு நிற்காமல் ஓடிச் சென்று அந்தப் பிஞ்சுக் கரங்களை இறுகப்பற்றி தனது விருப்பத்தைக் கூறுமுன் பலமாக அவன் கன்னத்தில் விழுந்தது ஒன்று. அது பெண்ணின் கரமல்ல. அரைவாசி தலை சுற்றிய நிலையில் பார்த்தான். கம்பீரமான இளைஞன் ஒருவன். அதன்பின் சரமாரியாக அவனுடலைப் பதம் பார்த்தன அந்த இளைஞனின் கரங்கள்

''நீயும் உன் ஆசையும் அதற்கொரு தகுதி வேண்டாம்.........''

காலால் தள்ளிவிட்டு அவளருகில் வந்தான் இளைஞன் நிரஷ்மி வெருட்சியோடு நின்றாள்.

ஒருவன் ஆசைப்படுவதற்கு தகுதி வேண்டும். நல்ல தகுதியை அடைவதற்கு படிக்கவேண்டும். அதற்கு பணம் வேண்டும். அப்போ நான் ஒன்றுக்கும் ஆசைப்படக்கூடாது. அதற்குமேல் அவனால் சிந்திக்க முடியவில்லை. தலையை வலித்தது. உடல் நோவு வேறு. அந்த மரத்தடியிலேயே படுத்துவிட்டான், பரத். அவனது இளமை ஆசைகளையும் அந்த மரத்தடியிலேயே போட்டு புதைத்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரத்தில் நிரஷ்மியும், அந்த இளைஞனும் போவது நிழலாகத் தெரிந்தது. அந்த, இளைஞன் நிரஷ்மியின் அண்ணனாகத் தான் இருக்கவேண்டும். யாராய் இருந்தால் தான் அவனுக்கென்ன? இரண்டு நாளைக்கு வேலைசெய்ய முடியாது. அந்தக் கவலைதான் அவனுள் மிஞ்சி நின்றது.

* ● *

— இலங்கை வானொலி —

❋❋❋
❋❋❋
❋❋❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவுகளால்
பாய்விரித்து
நினைவுகளை உறங்கவைத்து
தனிமையிலே
ஓர் இதயம்
தவிக்கிறது இங்கு!
காதல் வழி தேவதைகளே
என் கண்மணியை
அழைத்து வந்து
என்னிடமே
தாருங்களேன்!

- தமிழ்ப்புதல்வன் -

14

## சங்கமம்

"மதுரா! மதுரா!!"
என் வாய் ஓயாது முணுமுணுக்கிறது. உறவுகளை மறக்க முடிந்தோ முடியாமலோ சந்தர்ப்ப சூழ்நிலையால் புதிய உலகிற்கு போய் விட்டாள் மதுரா! ஆனால் பழைய உறவுகளை இதயத்தில் வடுக்களாக பதிந்துவிட்ட அந்த நினைவுகளை எப்படித் தான் மறக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மலர்ந்த ரோஜாப் போல் மணம் வீசிய மதுரா வின் இளமை. மழைக்கால மேகங்கள் அசைந்து செல்வ தைப் போல் முதுகில் பரந்து நிற்கும் கூந்தல், அந்த வத னத்தின் சாந்தம் வேறு யாருக்கும் இருந்ததாக நான் அறிந்ததில்லை. இன்பத்திலும், துன்பத்திலும் அதே சாந் தம் நிலவும். மற்றவர் முகத்தை நிமிர்ந்து பார்த்து கதைக்க வெட்கப்படுவாள் மதுரா. அவள் அடக்கமாக சேலை உடுத்தி ஆலயதரிசனத்திற்கு வரும்போது அவளது தெய்வீக கோலத்தை தரிசிப்பதற்காகவே நான் ஆலயத் திற்கு செல்வேன்.

பெரிய இடத்திற்கு பொருத்தமற்ற சுபாவம். அவ ளுக்கு நகையைக் கண்டாலே 'அலர்ஜி' போலும், கழுத் தில் ஒரு கறுத்த மணிமாலை. கைகள் வெறிச்சென்றி ருக்கும் இரு இமைகளும் பொருந்தும் இடத்தில் கறுப்புப் பொட்டு, அதன் கீழே திருநீற்றுக் கீறு, அவ்வளவுதான் அவளது மேக்கப். பணத்தை ஆளப்பிறந்த மதுரா விரும் பும் கோலம் இது. நான் அவள் பணத்தை விரும்பவில்லை. அவள் இதயத்தில் மட்டும் பங்கு கேட்டேன். அதற்கு அவள் எடுத்த கால இடைவெளி இரண்டு வருடம்.

நான் அவள் அன்பைப்பெற பேயாய் அலைந்த அலைச்சல், அது அவளைத்தவிர வேறு யாருக்கும் புரி யாது. 'டெரின், ஷபன்' என்றெல்லாம் சேலைகளைத் தேடி ஓடும் பெண்களிடையே அவள் புதுமையானவள். அவளுக்கு வொயில் புடவைதான் பிடிக்கும். இன்றைய சராசரிப் பெண்களோடு அவளை ஒப்பிடும் போது........... அவள் மிக மிக உயரத்தில் வைத்து பூஜிக்கப்பட வேண் டியவள். என்னைப் பொறுத்தவரை எத்தனை பேருக்கு ஆரம்பத்தில் வியப்பு! ''டேய்! மதுரா உன்னைக் காதலிக் கிறாளா? என்னடா கதை விடுறாய்! நம்பக் கூடியதா ஏதாவது சொல்லுடா.'' இப்படி என் நண்பர்கள் கேட்டி ருக்கிறார்கள்.

அவள் பின்னால் சுற்றி அலுத்துப்போன டலர், ''உணர்ச்சிகளில்லாத ஜடம், நடைப்பிணம்'' இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ பட்டப் பெயர்களை அவளுக்கு பரிசளித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மதுரா மனதில் இடம் பிடித்தவன் நான் என நினைக்கும் போது உலகமே என் காலடியில் இருப்பதாக நினைப்பு, அந்த வெற்றியை பெரிதாக கொண்டாட எனக்குத்தான் எத்தனை ஆசை? ஆனால் மதுராவுக்கு அதெல்லாம் பிடிக்கவில்லை. என்னை பரிபூரணமாக நம்பினாள் மதுரா. என்னோடு பழகும் ஒவ்வொரு நிமிடமும் அவளது பெண்மையைக் காத்துக் கொண்டவிதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

● ★ ●

ஒருநாள்............

அன்று மதுராவின் பிறந்த நாள், முதல் நாளே அவளிடம் கேட்டுவைத்திருந்தேன் ''என் மதுராக் கண்ணில்லே என்மேல உனக்கு உண்மையான அன்பிருந்தா நீ என்னோடு பீச்சுக்கு வரணும், ஒரு ஏழை பணம் கொடுக்காமல் சுதந்திரமாக போகக்கூடிய இடம் அது ஒன்றுதானே?'' ஏழை என்று என்னைக் குறிப்பிட்டது அவளை என்னமோ செய்திருக்க வேண்டும். ''நான் உங்களோடு பீச்சுக்கு வரணும் அவ்வளவுதானே அதுக்காக இப்படிக் கதைக்க வேணுமா''? பாசத்தோடு கூறினாள் மதுரா. மற்றவர்களுக்காக மனம் நோக முடியுமே தவிர மற்றவர் மனதை நோக வைக்கத் தெரியாதவள் மதுரா! எப்படி அவள் வீட்டாருக்கு சாட்டு சொல்லிவிட்டு வந்தாளோ அது அவளது கெட்டித்தனம்.

அவளோடு போய் அந்த கடற்கரையின் ஒற்றைப் பனையடியில் அமர்கிறேன். இலைகள் ஒன்றுமில்லாமல் தன்னந்தனியாக மொட்டையாக நின்றாலும் ''காதல் அனுபவம்'' அந்த மரத்திற்கு அதிகம்தான். தினமும் போட்டி போட்டுக் கொண்டு வந்து முன்னரே இடம் பிடிக்கும் அளவிற்கு அந்தமரம் பிரபல்யமாய் இருந்தது. மதுரா வெள்ளை வொயிலில் சிவப்பு நிற நட்சத்திரங்கள் போட்ட சேலையை அணிந்திருந்தாள். ஒற்றைப் பின்னலில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகைச் செண்டு ஒய்யாரமாய் அமர்ந்திருந்தது. நான் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் மண்ணில் கோடுபோட்டுக் கொண்டிருந்தாள். ''என் இனிய மதுராவுக்கு நேஸ வாழ்த்துக்கள்.'' நான் கொண்டு வந்த பார்சலை அவள் மடியில் வைக்கிறேன். வியப்போடு பார்க்கிறாள். ''தாங்யூ'' சொல்லிவிட்டு ''பிரித்துப்பார்க்கட்டுமா?'' என்னிடம் கேட்டாள்.

''பாரேன் மதுரா...'' அவசரம் அவசரமாய் பிரித்தவள் நாணத்தில் முகத்தை முழங்காலில் பதித்துக்கொண்டாள். நான் குறும்போடு அவளைப்பார்த்தேன். ஒரு பெண்ணுக்கு வேண்டிய உடைகளில் அப்படியே ஒரு செட். சேலை மட்டும் கிளிப்பச்சை நிறத்தில் வெள்ளைப் புள்ளிகள் என் செலக்ஷன். ''எதுக்கு இவ்வளவு சிரமப்பட்டு'' அவள் கூறுகிறாள். ''உன் பின்னால் அலைந்ததை விட இது பெரிய சிரமமாய் இல்லை.'' நான் சொல்கிறேன். இருவரும் அந்த ஜோக்கை நினைத்துச் சிரித்துக் கொள்கிறோம். கடலலைகளும் கூடவே சிரிக்கின்றன. ''இப்ப என்னுடைய 'ப்ரசண்ட்'' சொல்லிவிட்டு கேக்கை நீட்டுகிறாள்.

''ஊகும்...'' நான் மறுக்கிறேன். ''உன் கையால் ஊட்டி விட்டால்தான் சாப்பிடுவேன்'' அடம்பிடித்தேன் நான். அவளுக்கு என்ன செய்வதெனப் புரியவில்லை. ''பொல்லாத மனிதர் நீங்கள்...! ம்... வாயைத் திறவுங்கோ'' எனச் சொல்லிவிட்டு என் வாய்க்குள் வைக்கிறாள். அப்படியே அந்தக் கரங்களைப்பற்றி என் இதழ்களைப் பதிக்கிறேன். கையை உதறி எடுத்தவள் மீண்டும் தலையை முழங்காலில் பதிக்கிறாள்.

''ஏன் மதுரா என்னோடு கோபமா? நான் உன் கையை பிடிக்காமல் யார் பிடிக்கிறதாம்? நான் ஆதங்கத்துடன் கேட்டேன்.

''எனக்கு நீங்கள் உரிமையோட கையைப் பிடிக்கிறது தான் பிடிக்கும். நாங்க பழகும் போது நம் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருக்குள்ளும் ஒரு கட்டுப்பாடு வேணும் அது உரிய காலத் துக்குள்ள எல்லை மீறுகிறது எனக்குப் பிடிக்கல்ல'' மெல்ல மாகச் சொன்னாள் மதுரா! நான் அவளைப் புரிந்து கொண்டேன். அவள் பன்மடங்கு உயர்ந்து நின்றாள் என் னுள்ளே, அதன் பின்னே அவளை நான் தொட்டதே இல்லை.

★ ★ ★

பணக்காரர்களுக்கு ஏழை என்றாலே ஒரு அலர்ஜிதான். என் இனிய மதுராவை வேறு ஒருவனுக்கு கட்டிவைக்கப் போகிறார்களாம் இப்போ நான் என்ன செய்யிறது? அவள் விஷயத்தைச் சொன்னபோது தலை சுற்றியது.

''நான் ஒண்டிக் குடித்தனம் பண்ணும் அறைக்கு உன்னைக் கூட்டிப்போகட்டுமா? மதுரா! உங்கப்பா மாதிரி பட்டரும் சீசும் கொடுத்து பராமரிக்க எனக்கு வழியில்லை. ஆனா உன்னைப் பட்டினி போடாமல் காப்பாத்துகிறேன். மதுரா'' நான் கலங்கிய விழிகளுடன் கூறினேன்.

''குமார்! காரும், பங்களாவும் தராத வாழ்க்கையை நீங்க தருவீங்க! நிம்மதியான மனசுக்குப் பிடித்த வாழ்க்கைதான் வேண்டும்'' இருவர் விழிகளும் கசிந்தன. அடுத்தநாள் மனதுக்கு பிடித்த வாழ்க்கையை வாழ வருவ தாக முடிவு செய்து விட்டு மதுரா விடைபெற்றாள். என்ன செய்வது! எல்லாவற்றிற்கும் எல்லோரும் கொடுத்து வைப் பதில்லையே. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் அவஸ் தைப்படும் பலரை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். பணத்துக்கும் பணத்துக்கும் முடிச்சுப் போட முனையும் இந்த சமுதாயம் சீர்திருத்தம் மட்டும் பேச வந்து விடுகி றது. ஓ! இப்போ என்ன செய்வது? ஒன்றுக்கும் வழியில் லாத நான் அவளை அடைய ஆசைப்பட்டது நியாயமா? இன்றிரவு நிச்சயம் அவள் வருவாள். எந்த நிலையில் அவளை ஏற்றுக்கொள்வது? நேரம் மாலை ஐந்தைத் தாண்டி ஆறு ஆகிறது. இரவுக்கும் பகலுக்கும் இடைப்பட்ட வேளை... இரவும் பகலும் சங்கமிக்கிறது. இரண்டு இதயங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சங்கமிக்கத்துடிக்கின்றன. உறவை ஸ்திரப்படுத்த உபாயம் தேடுகின்றன. இருள் இந்த உலகை ஆட்கொள்வதை சகிக்க முடியாது வெண்ணிலவு மெல்ல ஒளி பரப்புகிறது.

நான் அந்த கடற்கரையின் ஒற்றைப் பனைமரத்தடியில் அவளுக்காக காத்திருக்கிறேன். தெய்வமே என் தேவதையை எனக்குத் தந்துவிடு. தடங்கலில்லாத வழியைக் கொடு. சித்தி விநாயகா உன்னால்தான் முடியும். இதயம் ஓலமிட எகிறிக்குதிக்கும் கடலலைகளைப் பார்த்தபடி நிலை கொள்ளாமல் வழியைப் பார்க்கிறேன். வெளிச்ச வீட்டின் ஒளி தோன்றித்தோன்றி மறைகிறது. என் மனதிலும் நம்பிக்கை ஒளி தோன்றி மறைகிறது மணி எட்டு... இந்த நேரத்திலும் கடற்கரையில் சனநடமாட்டம் குறையவில்லை. மலைமேல் கோணேசர், அடிவாரத்தில் பிள்ளையார் இவர்களை நம்பித்தான் என்னவள் வருவாள் எனக் காத்திருக்கிறேன், இன்னும் வரவில்லை.

மணி ஒன்பது... இதயம் இரட்டிப்பாக அடிக்கிறது. என்னவளுக்கு ஏதும் ஆபத்தோ...... பணக்காரர்களுக்கு ஆபத்தான காலமெனினும் மதுராவுக்கு நகை போடப் பிடிக்காது எனவே ஆபத்தில்லை. கடந்த கால கலவரங்களின் நிகழ்வுகள் மனதில் மின்னி மின்னி மறைகிறது.

மணி பத்து...... இதயப்படபடப்பு அதிகரிக்கிறது. என்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. கடலலைகள் வரும் வேகத்தைவிட என் எண்ண ஓட்டங்களின் வேகம் மிக மிக அதிகரிக்கின்றது. இன்னும் வரவில்லை என் மதுரா! ஏன் அவளுக்கு பணக்காரப்புத்தி வந்துவிட்டதோ? என்னை ஏமாற்றி விட்டாளோ? இருக்காது அவளாள் என்னை ஏமாற்ற முடியாது. என் உள்ளுணர்வு திடமாக கூறியது. தெய்வமே என்னை ஏமாற்றாதே. ஒட்டுறவு இல்லாது வாழ்ந்த என் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை உண்டாக்கியவள் என் மதுரா! சோலையாக குலுங்கும் என் மனத்தோட்டத்தை பாலைவனமாக்காதே அவளுக்கு ஒன்றென்றால் என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாது தலையில் கையை வைத்தபடி கடலைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி பத்தினையும் கடந்து செல்கிறது...............

பொறுமையை இழந்துவிட்டது என்மனம்! கால்கள் இடத்தை விட்டு நகர்கிறது. உரியவளை தேடி நடக்கிறேன். அவள் வீட்டின் முன்னே...... நகரமறுக்கிறது, என் கால்கள் அவளது வீட்டின் எல்லா லைட்களும் எரிகின்றன. வீட்டில் ஏதோபரபரப்பு, மெதுவாக வரும் அழுகை ஒலி என்னால் தாங்க முடியவில்லை, ஓடிச்சென்று எட்டிப் பார்க்கிறேன் அங்கே எனது தேவதை.......

''ஓ... மதுரா!'' எனது உள்ளம் கதறுகிறது...வராந்தாவில் அவளது பிறந்தநாளிற்கு நான் கொடுத்த கிளிப் பச்சை நிறத்திலான அந்தபுடவையைத்தான் அவள் கட்டியிருந்தாள்.

''மதுரா! ......மதுரா...!''

உன் அப்பாவை மீறி என்னுடன் வர முடியாததால் என்னை விட்டு போக முடிவு செய்து விட்டாயா? நீ எனக்குக் கிடைக்காவிட்டாலும் நீ இந்த உலகில் வாழாமல் அல்லவா போய்விட்டாய்?

''மதுரா...!''

என்னையறியாமல் என்னை மயக்கம் அணைத்துக் கொள்கிறது.

★ ★ ★

மொத்தத்தில் மதுரா போய் பத்துநாட்களாகிவிட்டது. நான் தினமும் பலமணி நேரம் கடற்கரையில் செலவு செய்கிறேன். கேடுகெட்ட சமுதாயக் கோட்பாடுகளை தாங்க முடியாமல் ஓர் உயிர் கூட்டை-விட்டு பிரிந்து போய் விட்டது. மண்வெட்டியை தூக்கி வியர்வை சிந்த உழைப்பவனும், அறிவுத் திறனால் உழைப்பவனும், ஏமாற்றிப் பிழைக்காதவனும், தான் இந்தச் சமுதாயத்தில் உயர்ந்தவர்கள். இவர்களிடையே என் மதுரா இதயமுள்ள ஏழை ஆத்மா, இரவும் பகலும் சங்கமிக்கும் நேரம் என்னோடு சங்கமிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. நுரை பொங்கும் அலைகளுடாக வந்து என் இதயத்தை வருடி விடுகிறது. இருமனித உடல்களைப் பிரிக்கும் ஆற்றல் வேண்டுமானால் இந்தப்பணத்திற்கு இருக்கலாம். ஆனால் மனித உணர்வுகள் எவ்வளவு மென்மையானவை? அவற்றை மனிதனால் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு அவனுக்குள்ளே சில மிருக உணர்வுகள் புகுந்து கொள்கின்றனவோ? ஏழையோடு உறவு கொண்டாட மறுக்கும் சில சமுதாய புல்லுருவிகள் அவன் காலமாற்றத்தால் உயர்வடைந்துவிட்டால், எத்தனை உறவுகள் புதிது புதிதாய் முளைத்துவிடுகின்றன? அவை உள்ளன்போடு பிறந்த உறவுகளா? வெறும் போலி உணர்வுகள்.

இந்த உலகில் யாரை நம்புவது? எனக்கு இந்த ஏமாற்றுக்கார உலகத்தில் போலியாக நடிக்கும் இந்த உலகத்தில் வாழப்பிடிக்கவில்லை. உருவமாயினும் என்மதுரா அருவமாயும் இருப்பதால் ஏதோ எனக்குள் ஒரு உறுத்தல்.

இந்தப் போலி உடலை அலைகள் விளையாடட்டும்? அதன் பின்னே. . . . . இந்த ஆழக் கடல் மீன்களுக்கு எனது உடல் இரையாகட்டும். என் ஆத்மா மட்டும் உரியவளோடு சேர்ந்து விடட்டும்.

★ ★ ★

- சங்கநாதம் -

(அச்சுருப் பெற்ற இவரின் கன்னிச் சிறுகதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டாமா ரொட்டியும்
ஆட்டிறைச்சிக் கறியும்
இன்று —
ஆட்டிப்படைக்கிறது
அழித்து வருகிறது.

★

தெற்கிலே ஒப்பந்தம்
வடக்கிலே தீப்பந்தம்.

★

அப்பாவிகளாக வந்தவர்கள்
இன்று —
அப்பாக்களாக
போகிறார்கள்.

- தமிழ்ப் புதல்வன் -

15

# விடியாத இரவுகள் . . .

மேகம் கறுத்திருந்தது.
இன்னும் சில நிமிடங்களில்
வானம் குமுறி அழலாம்!
வானம் குமுறி அழுதால்தான்
வானவீதி வெளிச்சம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீல மேகத்தை, பஞ்சுப் பொதிகளாய் ஊர்ந்து திரியும் மேகக்கூட்டங்களை, மின்னும் சின்னச் சின்ன நட்சத்திரங்களை, உலாப் போகும் நிலாவை... இப்படி இயற்கை ஜாலங்கள் வானத்தை அலங்கரிக்கும்.

அபிநயா!... இயற்கைப் பழைய நிலைக்குத் திரும்பினாலும் இவளின் வாழ்க்கை மிக இருண்டதாகவே இருந்தது. அங்கே வெளிச்சத்திற்கு இடம் இருக்கவில்லை. வானத்தை ஜன்னல் கம்பிகளூடாக பார்த்துக் கொண்டிருந்த அபிநயாவின் மனதிலே திரும்பத் திருப்ப அந்தச் சம்பவம் சுழன்றது. ''ஒரு பெண் அர்த்த ராத்திரியில் கூட தனிமையில் போய் வருகிற அளவுக்கு எப்போது சுதந்திரம் கிடைக்கிறதோ? அந்த நாள்தான் பூரண சுதந்திர நாள்'' என்று அகிம்சைவாதி காந்தி என்றோ கூறிய வார்த்தைகள் அவள் ஞாபகத்திற்கு வந்தது.

கடந்த நாலைந்து வருடமாக மிக உக்கிரமா அனுபவித்து வந்த கஸ்டங்களுக்கு ஒப்பந்தம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்று எவ்வளவு மகிழ்ந்தாள் அபிநயா. திருக்கோணமலைக் கோட்டைக்குள்ளே தலைகீழாக கட்டித் தொங்கவிடப்பட்ட நிலையில் எஸ்லோன் பைப் குழாயால் அடிவாங்கி ஊமைக் காயங்களுடன் நோயாளியாக வெளியே வந்த பெரியண்ணா தீபக் நொண்டி நொண்டி நடந்து வந்த போது அம்மா ஒவென்னக் கதறி அழுத காட்சியை அவளால் மறக்க முடியாமல் இருந்தது. ''என்ர பெம்பிளைப்பிள்ளையாலை கவலையில்லை, ஆம்பிளைப் பிள்ளைகள் இரண்டையும் காப்பாற்று'' என்று ஆண்டவனும் முற்றுமுழுதாக செவிசாய்க்க மறுத்தாலும் அவளது பிரார்த்தனை அவர் காதில் விழுந்ததோ என்னவோ இந்தளவுக்கு உயிரோடு வந்தான். முதல் வேலையாக அம்மாவின் நகைகள், அபிநயாவின் நகைகள் யாவும் விற்கப்பட்டு அந்தப் பணத்தில் பிரான்சிற்கு அகதிமுத்திரை குத்தப்பட்டு தீபக் தஞ்சமடைந்து மூன்று வருடம் முற்றாகப் போய்விட்டது. அந்த மூன்று வருடத்தில்தான் எத்தனை மாற்றங்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபக் பிரான்சில் அகதி அந்தஸ்தில் குறைவில்லாமல் வாழ்ந்தாலும் ஊரின் நிலைமைகள். வீட்டின் நிலைமைகள், அடிக்கடி மனசை தவிக்க வைப்பதை அவனது கடிதங்களில் இருந்து அறியமுடிந்தது. ஒரு நாள் விவேக் இயக்கத்திற்குப் போய்விட்டதாக அம்மா எழுதிய நாளில் இருந்து அடிக்கடி அவன் கவலைப்பட்டுக் கொண்டிருந்தான்.

★ ● ★

வானம் குமுறி அழுதது! அவள் மனசும் ஊமையாய் அழுதது. இந்திய வீரர்கள் அன்று புலி பிடிக்கவென காட்டாற்று வெள்ளமாய் வடக்கின் மூலை முடுக்கெல்லாம் பரவினர். ''பிள்ளை எதுக்கும் சீலையை எடுத்துக் கட்டு'' இவர்களுக்கு பொம்பிளைப் பிள்ளைகள் என்றால் சரி! எந்த நேரம் இந்த மண்ணில் பிறந்தோமோ, இன்றுவரையும் ஓட்டத்திரியும் விதி! முன்னர் இலங்கை இராணுவம், இப்ப இந்திய இராணுவம்'' அம்மா வேதனையுடன் அவசரமாகச் சொன்னாள். துவக்கு வெடிச் சத்தம் விடாமல் கேட்டது. அபிநயா அவசரஅவசரமாக சுற்றி உடுத்தாள். என்ன நினைவு வந்ததோ குங்குமத்தை எடுத்து நெற்றியிலும், உச்சந்தலையிலும் இட்டுக் கொண்டாள். அருகில் வரும் வெடிச் சத்தங்கள் அவளை நிலைகுலைய வைத்தது. அவள் கால்கள் நகர மறுத்தன. ''பிள்ளை வா ஓடுவம்', அம்மா அவசரப்படுத்தினாள். அவள் கண்கள் கலங்கி இரு கன்னங்களிலும் நீர் வடிந்தது. ''அம்மா எங்கே அம்மா ஓடுறது? திருமலையில் இருந்த காலத்தில் அகதியா கப்பலிலே இங்கு வந்தம். இங்கு யாழ்ப்பாணத்திலை இருந்து கடலுக்கைதான் போக வேண்டும் அதுவும் கனதூரம்.''

அவசரமாக ஓடியவள் பெட்டியைக் கிளரி ஒரு மஞ்சள் நூலைத்தேடி எடுத்தாள். நாலாகச் சுற்றி முறுக்கித் திரித்து கழுத்தில் கட்டிக் கொண்டாள். மஞ்சள் குங்குமத்தை அடைய ஒரு தமிழ்ப் பெண் வாழ்க்கையில் எப்படிக் காத்திருந்து, மகிழ்ந்திருந்து கட்டிக்கொள்ளும் சம்பவம் என்று அவளுக்குத் தெரியாமல் இல்லை. அந்த 'மங்களப் பொருட்களை எடுத்து கற்பைக் காப்பாற்ற கவசமாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தும் கேவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண்களில் தானும் ஒருத்தியாக நிற்கும் நிலையை நினைக்க வேதனை மனதை நெருடியது.

இராணுவ மிடுக்கும், கையில் துவக்குமாக மிக அருகில் வந்துவிட்ட இந்திய இராணுவத்தை தாண்டி ஓட முடியாமல் தாயும், மகளும் திகைத்து நின்ற வேளையில்...... உள்ளே புகுந்துவிட்டனர் இந்திய சீக்கிய ராணுவ வீரர்கள். சீவியத்திலும் பெண்களைக் காணாத வெறிபிடித்த கண்கள். அபிநயாவின் மேல் மொய்த்தது. அவள் முடிந்தமட்டும் சேலையை இழுத்து தன்னை மறைத்தாள், ஏதேதோ புரியாத பாஷையில் கேட்டான் ஒன்றுமே புரியவில்லை. ஐந்தரை கோடி தமிழ் மக்கள் வாழும் இந்திய மண்ணில் பாஷை புரியாத வேற்று இனத்தவனை தமிழன் பாதுகாப்பிற்கு அனுப்பிய ஒப்பந்தக்காரர்களின் தந்திரம் அவர்களுக்கே வெளிச்சம்.

இருவரும் நடுங்கிக் கொண்டிருந்தனர். திரும்பத் திரும்ப அவன் பாஷையில் ஏதேதோ கேட்டான். அவற்றிற்கு கலங்கிய விழிகளுடன் தலையாட்டத்தான் முடிந்தது, அவர்களுக்கு. ஆனால் அவர்கள் நோக்கம்.. ... அபிநயாவை இழுத்தான் ஒருவன். ''விடு என்ரை பிள்ளையை விடு'' அபிநயாவின் தாயார் கதறியபடி அவன் காலில் விழுந்தாள். இரண்டு வெடிச் சத்தம்! அங்கே சத்தமும் சலனமும் சட்டென நின்றுவிட்டது. அதன்பின் அவளது அன்னையின் சடலத்தின் முன் பரிதாபமாக பயங்கரமாக கொடூரமாக அவளை வேட்டையாடினர். அந்த மனித மிருகங்கள். சிலமணிநேரத்தில் சிறகொடிந்த பறவையாய் ஒரு மூலையில் கிடந்தாள் அபிநயா.

❋ ❋ ❋

அந்தப் பயங்கரச் சம்பவம் நடந்து இருபது நாட்களாகி விட்டன. பிரமை பிடித்தவளாய் தினமும் யன்னல் கம்பிகளினூடாக சிதைந்து போன யாழ் நகரை கண்ணுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்டிய தூரம் வரை பார்த்துக்கொண்டிருக்கிறாள், மஞ்சள் கயிறு அவளைப் பார்த்து சோகமாய்ச் சிரித்தது. ''உன்னைப் பாதுகாக்க எனக்கு சக்தி இல்லாமல் போய் விட்டது'' என்று. ஆனால் இப்போது அவளுக்கு காவல் தேவையில்லை. அவளுக்கு ஒன்றுமட்டும் தெரிந்திருந்தது. இவர்களின் பெண்ணாசை தீரப் போவதில்லை. வேலி யில்லாத் தோப்புக்குள் எந்நேரமும் வரலாம். இப்போ அவளே காத்திருக்கிறாள். அவர்களை எதிர்கொள்ள தனியே அல்ல, நிரப்பிய தோட்டாக்கள் உள்ள 'ஏக்கே47 துப்பாக்கியுடன். பலவீனமான பெண்ணினத்தை பலமுள்ள துவக்குகளின் துணையுடன் வேட்டையாடும் மனித மிரு கங்களை வேட்டையாட ஈழத்து தமிழ்ப் பெண்ணும் ஆயத்தமாகி விட்டாள்.

★ ★ ★

- தாகம் -

(3 - வது ஆண்டு மலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவங்களும்...தொட்டில்களும்...

01 ஒருபோராளியின் காதலி காத்திருக்கிறாள்
..................01-01- 1990

02 அலைக்கு எட்டிய கரைக் கோலம்
— வீரகேசரி 22 - 06 - 1986

03 பெற்றமனம்
— அலை ஓசை (இலண்டன்) புரட்டாதி 1989

04 கூண்டுக்கிளியினைப் போல்
— வசந்தம் தை - மாசி 1989

05 அடம்பன் கொடியும் புத்தாண்டுவெடியும்
— தாகம் (4வது ஆண்டுமலர் 1989)

06 மனிதம் இன்னும் மரணிக்கவில்லை
. . . . . . . . . 15-8-1990

07 வேதனையின் சுவடுகள்
— கோணைத் தென்றல் - பங்குனி 1989

08 பலவீனங்கள் — வீரகேசரி 16-02-1986

09 முகம் இழந்த மனிதர்கள் . . . . . .15-9-1990

10 கிராமத்து மண்கள் சிவக்கின்றன.
— தாகம் ஜுலை 1987

11 தலைமுறைகள் . . . . . . . . . .31-02-1990

12 தலைவிதி
- கோணைத்தென்றல் (முதலாவது ஆண்டுமலர் 1988)

13 எப்பொழுதுங் சவலையிலே. . . . . . .
— இலங்கை வானொலி (23-8-82)

14 சங்கமம் — சங்கநாதம் தை - 1984

15 விடியாத இரவுகள்
— தாகம் - (3வது ஆண்டுமலர் 1988)

......நன்றி......நன்றி. . . .நன்றி. . . .நன்றி. . . .நன்றி. ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நன்றி. . .நன்றி. . .நன்றி. . .நன்றி. . .

Acc No: 90
Cl No: க

தாகம் ☐
வீரகேசரி ☐
வசந்தம் ☐
கோணைத் தென்றல் ☐
இலண்டன் அலை ஓசை ☐
இலங்கை வானொலி ☐
சங்கமம் ☐
☐

☐ ராஜன்
☐ வசந்தமாலா
☐ ஹீதர் பிச்சையப்பா
☐ இப்னு அஸீமத்
☐ ஜெகதீசன்
☐ லிங்கேஸ்வரன்
☐ ரகுராம்
☐ ஈழகணேஷ்
☐ அச்சக ஊழியர்கள்

...நன்றி. . .நன்றி. . .நன்றி. . .நன்றி. . .நன்றி. . .நன்றி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் —
சித்ரா நாகநாதன்

●.

தமிழீழ மண்ணின்
தலை நகராம்
திருகோணமலை —
இவரின் பிறப்பிடம்

●.

1980—ல்
இவரது படைப்புக்கள்
வானொலி வீதிகளில்
வலம் வரத்தொடங்கின
'சங்கநாதத்தில்'
சங்கமித்ததன் மூலம்
பத்திரிகா உலகில்
பரவலாக பேசப்பட்ட
இவரின் சிருஷ்டிகள்
தாகத்தின் மூலம்
புதிய பரிமாணம்
பெறத்தொடங்கியது

●.

பிறந்த மண்ணிலே
மருத்துவ தாதியாக
பணிபுரியும்
இவரின் எழுத்துக்கள்
என்றும் யதார்த்தம் பேசும்

●.

இலக்கியம்
காலத்தின்
கண்ணாடியல்லவா
அதை இவரது
கதைகளில் காணலாம்

●.



— டாக்டர். ம. வசந்தமாலா —

Acc No: 90
Cl No: 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org